ஆகஸ்ட்
2009

111

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

## தாய்மடி தேடி...

(முதற்பரிசு பெற்ற கதை)

-கார்த்திகாயினி சுபேஸ்



பன்முக ஆளுமைமிக்க
பத்திரிகையாளர்
எழுத்தாளர்
கே. விஜயன்

படைப்புக்களை
செம்மையாக்கும்
கலை வளருமா?
-முருகபூபதி

விலை: 50/=

www.gnanam.info

ஒளி – 10 சுடர் – 03

**பகிர்தலின் மூலம்
விரிவும்
ஆழமும்
பெறுவது
ஞானம்**


ஆசிரியர் :
**தி. ஞானசேகரன்**

இணை ஆசிரியர் :
**ஞானம் ஞானசேகரன்**

ஓவியர் :
**கௌதமன்**

தலைமை அலுவலகம் :
**19/7, பேராதனை வீதி, கண்டி.**

தொடர்புகளுக்கு... :
**தி. ஞானசேகரன்
ஞானம் கிளை அலுவலகம்
3-B, 46ஆவது ஒழுங்கை,
கொழும்பு – 06.
தொலைபேசி : 011 –2586013
0777–306506
+61 02 80077270
தொலைநகல்: 011–2362862
E-mail : editor@gnanam.info
Web : www.gnanam.info**

**வெளிநாட்டு, உள்நாட்டு
வங்கித் தொடர்புகள்:
Swift Code :- HBLILKLX
T. Gnanasekaran
Hatton National Bank -
Wellawatte Branch
A/C No. 009010309024**


# இதழினுள்ளே ...


- ***கவிதைகள்***

| | |
|---|---|
| மும்தாஸ் ஹபீள் | 10 |
| கண. எதிர்வீரசிங்கம் | 28 |
| சோ. சுதர்ஷினி | 31 |
| ஜின்னாஹ் | 31 |
| கா. தவபாலன் | 46 |
| வாகரைவாணன் | 47 |
| புலோலியூர் வேல்நந்தன் | 51 |

- ***கட்டுரைகள்***

| | |
|---|---|
| மானா மக்கீன் | 03 |
| க. சண்முகலிங்கம் | 11 |
| முருகபூபதி | 18 |
| பொ. வேல்சாமி | 26 |
| பெருமாள் சரவணகுமார் | 29 |
| சிற்பி | 34 |
| அந்தனி ஜீவா | 44 |

- ***சிறுகதைகள்***

| | |
|---|---|
| கார்த்திகாயினி சுபேஸ் | 05 |
| சிவா சண்முகம் (குறுங்கதை) | 13 |
| சுதர்மமகாராஜன் | 14 |
| கே.ஆர். டேவிட் | 21 |
| பிரமிளா பிரதீபன் | 39 |
| வேல் அமுதன் (குறுங்கதை) | 47 |

- ***நேர்காணல்***

| | |
|---|---|
| தெளிவத்தை ஜோசப் | 36 |

- ***பர்மிய பிக்கு சொன்ன கதைகள்***

| | |
|---|---|
| கவிஞர் சோ.ப | 32 |

- ***சமகால கலை இலக்கிய நிகழ்வுகள்***

| | |
|---|---|
| குறிஞ்சிநாடன் | 48 |

- ***பத்தி எழுத்து***

| | |
|---|---|
| மானாமக்கீன் | 42 |
| துரை மனோகரன் | 52 |

- ***வாசகர் பேசுகிறார்*** 54


ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகட்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள். புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், முகவரி ஆகியவற்றை வேறாக இணைத்தல் வேண்டும். பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு. **– ஆசிரியர்**

ஞானம்
கலை இலக்கியச் சஞ்சிகை

*வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்*
*கவிப்பெருக்கும் மேவு மாயின்,*
*பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்*
*விழிபெற்றுப் பதவி கொள்வார்.*

# தீர்வுத்திட்டத்திற்கு முன் தீர்க்கப்படவேண்டியது...

தமிழ் மக்களுடைய பிரச்சனையைத் தீர்த்து வைப்பதற்கு 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை நடைமுறைப்படுத்தப் போவதாக அரசாங்கம் உரத்துக் கூறிக் கொண்டிருக்கிறது. சமீப காலமாக 13+ என்கிற ஒரு திட்டமும் ஓங்கி ஒலிக்கப்படுகிறது. அதாவது பதின்மூன்றாவது திருத்தச் சட்டமூலத்திற்கும் சற்று அதிகமாகவே தமிழ் மக்களின் பிரச்சனைக்கு தீர்வாக சிலவற்றை நடைமுறைப்படுத்தப் போவதாக அரசாங்கத்தில் அங்கம் வகிப்போர் சிலர் கூறத் தொடங்கியுள்ளனர்.

ஆனால் இத்தகைய அரசியல் தீர்வுக்கு முன்னதாகத் தீர்க்கப்படவேண்டிய பாரிய பிரச்சனையாக மூன்று இலட்சம் மக்கள் அகதி முகாம்களில் படும் சோதனைகளையும், வேதனைகளையும் நீக்கப்படவேண்டிய உடனடித்தேவை உள்ளது. படையினரின் முட்கம்பி வேலிகளுக்குப் பின்னால் வாழும் இந்த மக்களின் வேதனைகளும் ஆதரவற்ற நிலையும் பெற்றோரை இழந்த குழந்தைகளின் நிலையும் மிகவும் பரிதாபமானவை. இந்த முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களிடையே தோன்றியுள்ள சமூக, கலாசார, உளவியல் பிரச்சனைகள் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. இந்த மக்கள் முகாம்களிலிருந்து விடுபட்டு முகாம்கள் மூடப்படவேண்டியது இன்றைய தேவையாகும். இதனை தென்னிலங்கை மக்களோ, அரசியல்வாதிகளோ உணர்ந்ததாகத் தெரியவில்லை. உண்மையில் இந்த அகதி முகாம் பிரச்சனையும் அதன் நியாய அநியாயங்களும் தமிழ் மக்களுக்கு மட்டுமே ஏற்பட்டிருப்பதால் அதனுடைய பலதரப்பட்ட பரிமாணங்களை துன்ப துயரங்களை சிங்கள மக்கள் உணர்ந்து கொள்ள வாய்ப்பில்லை.

இந்த முகாம்களை தொடர்ந்தும் வைத்துக் கொண்டிருப்பதற்குக் காரணம் புலி உறுப்பினர்களைக் களையெடுப்பதற்காகவே என அரசாங்கத்தினால் ஒரு காரணம் முன்வைக்கப்படுகிறது. புலியுறுப்பினர் பலர் கொன்றொழிக்கப்பட்டுவிட்டனர். சிலர் ஏற்கனவே சரணடைந்துவிட்டனர், வேறு சிலர் அடையாளம் காணப்பட்டுவிட்டனர். எனவே எஞ்சிய ஒரு சிறுதொகையினரை அடையாளங் காண்பதற்கு சிசுக்களையும் சிறுவர்களையும் வயோதிபர்களையும் முகாம்களில் முடக்கி வைப்பது முறையாகாது. முதற்கட்ட நடவடிக்கையாக இவர்களையாவது அரசாங்கம் இந்த முகாம்களிலிருந்து வெளியேற்றி இவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்க முன்வரவேண்டும்.

வேறொரு பிரச்சனையாக இந்த மக்களை மீளக் குடியேற்றுவதற்கு முன்னர் கண்ணிவெடிகள் அப்பிரதேசங்களிலிருந்து அகற்றப்படவேண்டும் எனக் கூறப்படுகிறது. ஆனால் இதுவும் சரியான காரணமாகத் தெரியவில்லை. ஏனெனில் அங்கு பல கிராமங்களில் யுத்தம் முடியும் வரை மக்கள் வாழ்ந்து கொண்டிருந்தனர். வன்னியில் உள்ள கிராமங்கள் முழுவதிலும் கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டிருந்தன எனக் கூறமுடியாது.

இந்த முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களின் மனங்களில் தங்களுக்குச் சொந்தமான நிலங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் நடைபெறப்போகின்றதோ என்ற வேறொரு அச்சமும் காணப்படுவதாக அறியமுடிகிறது. முன்னைய காலங்களில் ஏற்படுத்தப்பட்ட திட்டமிடப்பெற்ற சிங்களக் குடியேற்றங்களையும் அதன் காரணமாகப் பல தமிழ்ப் பிரதேசங்கள் பறிபோனதையும் இதற்கு உதாரணமாகக் காட்ட முடியும். எனவே இந்த முகாம்கள் இனவாத நோக்கில் அமைக்கப்பட்டவை என்ற எண்ணமும் இந்த முகாம்களிலுள்ள மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேற்றம் செய்யப்படாதவரை அவர்களது மனதில் மேலோங்கியிருக்கும்.

தமிழர்களுக்கான பிரச்சினைகளின் அரசியல் தீர்வு என்பது கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக தென்னிலங்கை அரசியல் வாதிகளால் “பூச்சாண்டி காட்டப்பட்டு” வரும் விடயம். அரசியல் நடத்துவதற்கு தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு இந்தத் “தமிழர் பிரச்சினை” என்றுமே தேவையான விடயமாக இருந்தது; இருந்து வருகிறது.

இன்று தமிழ் மக்களுக்கு உடனடித் தேவையாக உள்ளது, இந்த முகாம்களில் இருக்கும் மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கையாகும். இதனை அரசாங்கம் உணர்ந்து செயற்படுவது தேசிய நலனுக்கு உகந்ததாக அமையும் என வலியுறுத்த விரும்புகிறோம்.



# பன்முக ஆளுமை மிக்க பத்திரிகையாளர், எழுத்தாளர் கே. விஜயன்

*- பன்னூலாசிரியர் தமிழ்மணி மானா மக்கீன்*

நாவலைந்து சிறுகதைகளை எழுதி படைப்பிலக்கிய வாதியாகி விட்டால், பாடையில் பயணிக்கிற வரை அதுதான் பெயராக வேண்டும்!.

கவிதை படைக்கிறவனும் கல்லறை போகும் வரை கவிஞனாகவே இருக்கவேண்டும்.

நாவலாசிரியன், நாடகாசிரியன் அத்தனை பேருக்கும் அப்படி, அப்படியே!

இப்படி இலக்கிய வட்டாரத்திலுள்ள சிலர் நினைப்பு.

தப்பித் தவறி ஒரிருவர் வரலாற்றாசிரியனாகவோ, திறனாய்வாளனாகவோ, பத்தி எழுத்தாளனாகவோ, கலைஞனாகவோ, ஊடகவாதியாகவோ, சகலகலா வல்லவனாக சில கடினமான விசயங்களை வித்தியாசமாக சொல்வதில் முற்றிப் பெருத்தால்......

பொக்கரிப்பும் அள்ளிவைத்தலும், முதுகிலே குத்தலும் அவரைப்பிடித்த பீடைகளாகிப் போகும்.

இந்த எழுத்துலகின் விதி அது. இதற்கு நல்லதோர் உதாரணமாக அமைபவர் இம்மாத ஞானத்தின் அட்டையை அலங்கரிக்கின்ற 'ஒல்ரவுண்டர்' கே. விஜயன் – அதாவது, 'கரிப்பாறன் கிருஷ்ண குஞ்சு விஜயன்'!

அவர் அகவை 66ல் கால் பதித்து நிற்கிறார். மூன்று தசாப்த காலத்திற்கு முன்னர் அவரை ஒரு நல்ல விளம்பர முகவராகவே சந்தித்தேன். படைப்பிலக்கியவாதியாக, நாவலாசிரியனாக, நாடகக் கலைஞனாக, திறமையான கால்பந்தாட்ட, கிரிக்கெட் வீரனாக, மட்டுமல்லாது மலையாளக் கரையோர மண்ணில் தெளிந்த நீரோடையாகக் காணப்படும் இலக்கிய வாசனையோடு மிதக்கிற கம்பீரமான, வித்தியாசமான மனிதர் என்பதையும் காலம் கடந்து தெரிந்து கொண்டேன்.

60களில் யாழ் இளம் எழுத்தாளர் சங்கம் நடாத்திய அகில இலங்கை சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றதன் மூலம் எழுத்துலகில் ஆக்க இலக்கியப் பதிவு வேர் விடுகிறது. தொடர்ந்து இவருடைய ஆளுமை, ஈழநாடு, வீரகேசரி, தினபதி, சிந்தாமணி, தினகரன், மித்திரன் எனப்படர அலைகடலுக்கும் அப்பால் கணையாழி, தீபம், தாமரை, செம்மலர் என வியாபித்தது. ஈழத்து சிற்றிதழ்களான வசந்தம், சிரித்திரன், மல்லிகை, ஞானம் எனக் கொடி படர்ந்தது.

'விடிவுகால நட்சத்திரம்', 'மனநதியின் சிறு அலைகள்' ஆகிய இரு நாவல்களும், 'அன்னையின் நிழல்' சிறுகதைத் தொகுப்பும் நூல் வடிவம் கொண்டுள்ளன. 'மனித நிழல்' வீரகேசரி பிரசுரம் நடத்திய அகில இலங்கை பிரதேச நாவல் போட்டியில் கொழும்பு பிரதேசத்திற்கான முதலாம் பரிசைப் பெற்றது. எனினும், வாசகரை எட்டும் பாக்கியத்தை இழந்தது. 83இனப் படுகொலை சம்ஹாரம் அதனையும் எரித்து சாம்பலாக்கியது பெரும் துயரமே.

'எரிந்து போன ஓர் அற்புதமான நாவலின் கருவை விஜயன் எடுத்துச் சொல்லும் போது, இழக்கக் கூடாது ஏதோ அரியதொன்றை இழந்த சோகம் நெஞ்சாங்கூட்டில் புதைந்து கிடப்பதைப் புரிந்தேன். நான்காயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் பணியாற்றிவரும் ஒரு நெசவாலைக்குள் இக்கதை உலாவருகிறது. பல்வேறு தொழிற்சங்க ரீதியான அரசியல் கருத்துக்களும், இனபேத மோதல்களும், பேதம் மறந்து காதலும், பாலியியல் வக்கிரங்களும் அனைத்தையும் கடந்து எழும் வர்க்கப்போராட்டமும் இதுவரை ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் இடம் பெறாத புதிய அம்சமாகும். கவித்துவமானதொரு தொழிலாளர் தமிழ் அதன் அழகியல்...'' என்று விஜயன் சொல்கின்ற போது துயரமே மேலிடுகிறது.

''திருப்பி எழுதக் கூடாதா? என்று கேட்டால், ''உலகத்தில் எவனுக்கய்யா அது முடிந்தது?'' என்கிறார்.

ஆம்! ஒரு குழந்தையை ஒருமுறை தானே பிரசவிக்க முடியும்!

மொத்தமாக, நாவல்களாக நாளேடுகளுக்கும் வார இதழ்களுக்கும் இதுவரை பதினைந்துக்கும் மேற்பட்ட தொடர்கதைகளை தீனியாக வழங்கியுள்ளார்.

''அட! அவற்றிலே இரண்டு மூன்றைப் புத்தகமாகப் போடக் கூடாதா? என்றால் ''இழவுதான்! பத்திரிகை ஆசிரியர்களின் பக்கம் நிரப்பும் பசிக்கு உடனடியாக எழுதப்பட்ட 'ஜனரஞ்சக அவசரங்கள் அவை. அவற்றில் கனதியாவது சுண்டைக்காயாவது என்று 'சீமான் சஞ்சாரி' பாணியில் தன்னையே கிண்டலடித்துக் கொள்வார்.

என்றாலும் 'சலன கோலங்கள்', 'நதிமணல்', 'றெஜினா', 'அன்புள்ள சுகன்யா' போன்ற தொடர்கள் பல நல்ல வாசகர்களிடமும் வரவேற்பை பெற்றிருந்தனவாம். மேலும் ஆந்தையார் ''கே.வி'' எனும் பெயர்களில், வெளிநாடுகளில் இடம்பெற்ற உண்மைக் கொலைச் சம்பவங்களை பின்னணியாகக் கொண்டு புனையப்பட்ட ஐம்பதுக்கு மேற்பட்ட

சிறுகதைகளுக்கும். ஐந்தாறு தொடர்களுக்கும் ஏராளமான ரசிகர்கள் இருக்கிறார்கள். மனஇயல் பாதிக்கப்பட்டவர்களாக கொலைகார பாத்திரங்களை சித்தரிக்க முயன்றிருக்கிறார். அந்த வகையில் இலக்கியத்தில் இதுவும் ஒரு வித்தியாசமான பார்வை தான். நானும் இவற்றை ரசித்து வாசித்திருக்கிறேன்.

''ஓர் எழுத்தாளனாக வளர வேண்டும் என்ற எண்ணம் என்றும் இருந்ததில்லை'' என்று அதிரடி போடும் விஜயன் படிப்படியாக இதற்குள் ஈர்க்கப்பட்டார் என்பது ஓர் அதிசயம், ஓர் அற்புதம்!

அதை இங்கே விவரித்தால் பக்கங்கள் நீண்டுவிடும் இருந்தாலும், விவரிக்காமலும் இருக்க முடியாது. சின்னஞ்சிறு காலம் முதல் வாழ்ந்த சூழல், அந்த மாந்தரின் வாழ்வியல், போராட்டங்கள், நெஞ்சில் ஆழமாக வேரோடிவிட்டன! அவர்களுக்கு சில விசயங்களை தெளிவு படுத்துவதற்கு சில புரட்சிகரமான இளைஞர்களுடன் சேர்ந்து 'மின்னல்', 'முயற்சி', 'எதிரொலி' என கையெழுத்துப் பத்திரிகைகள், நடத்தினார். (நான், 'கலைஜோதி' நடத்தியது போல!) 'மனநதியின் சிறு அலைகள்' நாவலை எழுதத் தொடங்கினார். 'மனிதநிழல்கள்', 'பகைவர்கள்', 'இயந்திரத் தீனிகள்' என நான்கு பாகங்களாக அதனைத் திட்டமிட்டார். மிகமிக இளமையான காலத்தில் இந்த முயற்சியும் தேடுதலும் உண்டாகின. காலத்தின் திருவிளையாடலும் வாழ்வின் சிக்கல்களும் எங்கெங்கோ இழுத்துச் சென்றுவிட தினபதி, சிந்தாமணி, வீரகேசரி, சுடரொளி என இதழியல் பணிகளும் தொழில்ரீதியாக வந்தடைய, பிறிதொரு வாழ்க்கை இயந்திரரீதியாக அமைந்து விட்டது.

இதழியல் துறையில் சக பத்திரிகையாளர்களைப் போன்று தொழில்பட விரும்பாமல் ஆசிரிய தலையங்கம், உள்நாட்டு வெளிநாட்டு அரசியல் ஆய்வு, இலக்கியம், திறனாய்வு, மொழிபெயர்ப்பு என பங்களிப்பு அதிகரித்தபோது வெளியிலிருந்து மட்டுமல்ல, ஆசிரியபீடத்திலும் நச்சரிப்பு களும் பொச்சரிப்புகளும் புற்றீசல்களாயின.

மானிட நேயம் பேசும் ஒரு 'சிகப்பு பேராசிரியர்' கூட வெளியிலிருந்து நிருவாக இயக்குநருக்கு பாரதூரமாக கடிதம் எழுதித் தொழிலுக்கு ஆப்பு வைக்க முனைந்தார். பத்திரிகை உலகில் இப்படி எத்தனையோ கசப்புணர்வுகள். ''இதழியல் உலகில் 'பத்திரிகா தர்மம் எங்கே இருக்கிறது?'' என்ற கேள்விக்கு நான் தலைகுனிந்தேன்.

இவரது இதழியல் வாழ்க்கை தனியாகப் பேனாவால் (அல்லது பேனாக்களால்) அலசப்பட வேண்டிய ஒன்று!

இலங்கை வானொலி, சூரியன் பன்பலை ஒலிபரப்பு, சுயாதீன தொலைக்காட்சி சேவை என்பனவற்றிலும் பங்களிப்புச் செய்துள்ளார். இலங்கை வானொலியில் 'காலமும் கருத்தும்' என்ற தொடர் அரசியல் உரை, அமரர்களான ஜோர்ஜ் சந்திரசேகரன், கு. இராமச்சந்திரன், மாஸ்டர் இராசையா ஆகியோரினால் நடாத்தப்பட்ட கதம்பம், சிறுவர் மலர் ஆகியவற்றில் தொடர்ச்சியாக நாடகங்களும், சூரியனில் கலைஞர் நடராஜ சிவத்துடன் இணைந்து கலைச்சோலை இலக்கிய உரைகள் என்பனவும் பங்களிப்புகளாக அமைந்திருக்கின்றன.

நூல் அறிமுகங்கள், ஆயிரத்திற்கு மேலே! அவை அனைத்தும் நம்நாட்டு படைப்புகள் வாசகர்களிடம் சென்றடைய வேண்டும் என்ற நன் நோக்கத்துடன் நயம் மட்டுமே கண்டு எழுதப்பட்டவை.

இலக்கிய நிகழ்வுகளையும் இவ்வாறே எழுதிவந்தார். (அபிமானிகளுக்கு, 'கலாசாரம்', 'இலக்கியச்சாரல்', 'இலக்கிய உலகம்', 'கலை அமுதம்' போன்ற பக்கத் தொகுப்புகள் டக்கென்று நெஞ்சில் நிழலாட வேண்டுமே!) காலப்போக்கில் கொஞ்சம் வித்தியாசமாக எழுதினார். சில கருத்து முரண்பாடுகளை குட்டிக் கதைகள் – பேச்சு மொழி என்பனவற்றை பயன்படுத்தினார். பலரும் இதனைப்புரிந்து கொள்ளவில்லை. 'என்னப்பா அடுத்தது யாருக்கு ஆப்பு' என்றுதான் கேட்டார்கள்.

இப்பக்கப்பத்திகள் குறித்து, விஜயன் தெளிவாகவே உள்ளார். ''நீண்ட காலம் முதுகு சொறியும் விமர்சனத்தில் ஆழ்ந்துவிட்டோம். இதனால் நமது வளர்ச்சி குன்றிவிட்டது. குண்டுச் சட்டிக்குள் குதிரைச்சவாரி போல் நமது இலக்கியச் சிந்தனைப் போக்கு அமைந்துவிட்டது.

''முரண்பாடுகள் சாஸ்வதமானவை. அதனை கிளறிவிடுவதே எனது இப்பத்தியின்நோக்கம். இதைப் புரிந்து கொள்வோம். சமூகமாக உரையாடுவோம். தமிழ்ச்சாதி இருண்ட சூழலுக்குள் தள்ளப்பட்டுள்ள இன்றைய நிலையில் நமது சிந்தனைகளில் புதிய தடம் பதிப்போம். முரண்பாடுகளை வாதிட்டு வாதிட்டு முன் செல்வதே சமூக இயக்கத்தின் உயிர் நாடி. இதைக்கூடச் செய்யாவிட்டால் எதற்காக அப்பா இந்த, படைப்புத் தொழில்?'' என்கிறார்.

பழகுவதற்கு இனிமையான விஜயன், ஓர் அமைதியான அக்கினிக் குஞ்சு. சில கூட்ட மேடைகளில் இவரை திடீரென பேச அழைக்கும் போது, எதுவித குறிப்பும் இன்றி அழகாக பேச வல்லவர். அங்கு முரண்பாடான கருத்துக்களையே சொல்வார். தங்கம் என்றாலும் அதன் தரத்தை தீட்டித் தீட்டித்தானே பிரகாசிக்கச் செய்ய வேண்டும் என்பதுதான் இவர் வாதம்.

'அடப்பாவிகளா இதைப்போய் விதண்டவாதம் என்கிறீர்களே!' என்று சீமான் சஞ்சாரி பாணியில்தான் நாம் அங்கலாய்த்துக் கொள்ளவேண்டியிருக்கிறது.

இதை ஏன் சொல்கிறேன் என்றால், 'ஞானத்தில் தற்பொழுது வரும் பத்தி எழுத்துக்களால் பதறிப் போய் சில 'ஜாம்பவான்கள்' நடத்தும் அர்ச்சனைகள் அதிகமாம்! அட கடவுளே!

நீண்டகாலமாக கால் நரம்பொன்றின் பாதிப்பினாலும் அண்மைக்காலமாக கண்பாதிப்பினாலும் அவதிப்படுகின்ற போதும் எழுதுவதை விடவில்லை. அவர் முழுச்சுகம் பெற்று, அரை குறையாக முடித்துள்ள தனது படைப்புக்களை முடித்து நமது இலக்கிய உலகத்திற்கு வழங்கவேண்டும். அவருக்கு எமது நல்லாசிகள். இனியதொரு குடும்பம், கடமையில் கண்ணுங் கருத்துமாக மனைவியாரும், மக்கட் செல்வங்களும். பேரன் பேத்திகளும் கண்டு விட்டார்!

அதுசரி, பத்தி எழுத்துக்களுக்கு என்ன நடக்கும் என்று கேட்கிறீர்களா? அட! ஊறுகாய் இல்லாமல் சாப்பாடா! (அதுவும் கேரள இஞ்சிப்புளி!)

**அமரர் செம்பியன் செல்வர் ஆ. இராஜகோபால்**
**ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற கதை**

1






ஆ... அம்மா வந்திட்டா...!

இதோ... அம்மாவோட அப்பா, அக்கா, தம்பி எல்லாரும் வந்திட்டினம்.

எத்தினை நாள் இவையளக் காணாமல் இந்த உடம்பு முழுக்க காயத்தோட நான் பட்ட வேதினை எல்லாம்... அவையளக் கண்டவுடனைக்கு காற்றாய் கடந்து போயிட்டுது.

பாசத்தோட கிட்ட வந்த அம்மாவைக் கண்டவுடன்.... 'அம்மா' எண்டு கூப்பிட்டன்.

அம்மா கையை நீட்டியபடி கண்ணீரோடு ஓடிவந்து என்னைக் கட்டி அணைக்கின்றா.

அப்பா, அக்கா, தம்பி எல்லாரும் என்னைச் சுத்திக் கட்டிலில் இருக்கினம்.

அம்மாவின்ர அணைப்பில எனக்கு அழுகை அழுகையாக வருகிறது. இத்தனை நாளும் அவையளப் பிரிஞ்ச ஏக்கம் என்னைப் பேசவிடாமல் தொண்டையை அடைக்கின்றது.

'அம்மா... இந்தளவு நாளும் என்னை தனிய விட்டிட்டு நீங்கள் எல்லாரும் எங்க போனனீங்கள் அம்மா...'

அம்மா ஒண்டும் பேசாமல் என்னைத் தன்ர நெஞ்சோடு இறுக அணைத்துக் கொண்டு அழுகிறா. அந்த அணைப்பு எனக்கு இதமாகவும் ஆறுதலாகவும் இருந்தது.

இதுக்காகத்தானே என்ர உடம்பில உள்ள காயங்களின் வலியோடு காத்திருந்தேன்.

இந்தக் காயங்களின்ர வலியை விட என்ர அம்மா, அப்பா, அக்கா, தம்பி எல்லாரையும் காணேலை எண்ட வலிதானே எனக்கு நிறைய இருந்திச்சு. இப்ப எல்லாரையும் கண்ட உடன என்ர உடம்பில இருந்த எல்லா வலியும் போயிட்டுது.

அம்மா என்ர தலையைத் தடவி விடுவது எனக்கு ஆறுதலாக இருந்தது.

அம்மாவை நிமிர்ந்து பார்த்தேன்.

என்ர பார்வையில எதைக் கண்டாவோ... அருவியாய் ஓடும் கண்ணீரோடு என்ர நெத்தியில இதமா ஒரு முத்தம் தந்தா.

அப்போது அம்மாவின் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர்த்துளியொன்று என் கண்ணுக்குள் விழுந்ததும் என் இரண்டு கண்களையும் இறுக்கி மூடிக்கொண்டு சிறிது நேரம் இருந்தேன்.

என் கால்மாட்டில் இருந்த அப்பாவைப் பார்த்தேன்.

முழங்காலோடு மருந்து கட்டிய என்ர வலது காலை தன்ர மடியில வைத்து மெதுவாகத் தடவியபடி இருந்தார்.

'அப்பா' எண்டு கூப்பிட்டேன்.

அவர் என்னை நிமிர்ந்து பார்த்துவிட்டு மீண்டும் தலை குனிந்தபடி அழுதுகொண்டிருந்தார்.

அவரழுத கண்ணீர் என்ர முழங்காலில கட்டப்பட்ட பன்டேஜில் பட்டுத் தெறித்தது.

திரும்பிப் பார்த்தேன்.

அக்காவும் மணிக்கட்டோடு போன என் கையைத் தடவியபடி அழுதுகொண்டிருந்தா.

தம்பி பெருவிரலை வாயில் வைத்து சூப்பியபடி என்னையே இமைவெட்டாது பார்த்துக்கொண்டிருந்தான்.

ஏன் எல்லாரும் என்னோட கதைக்காமல் அழுதுகொண்டிருக்கிறியள். என்னோட கதையுங்கோவன்.

நான் குளறி அழுகின்றேன்.

குண்டுச் சத்தங்கள் பக்கத்தில் கேட்டுக் கொண்டிருக்கின்றன.

திடீரென எங்கேயோ இருந்து வந்த குண்டு ஒண்டு பெரிய சத்தத்தோட வெடிக்கிறது.

நாங்கள் இருந்த இடமெல்லாம் ஒரே புகைமண்டலம்.

நான் என்ர அப்பா, அம்மா, அக்கா, தம்பியைத் தேடினன். அந்தப் புகைமண்டலத்தோட அவையளும் மெல்ல மெல்ல மறைஞ்சு போய்க்கொண்டு இருக்கினம்.

நான் அவையள 'நில்லுங்கோ நில்லுங்கோ' எண்டு கத்திக் கத்திக் கூப்பிடுறன். அவையள் போயே விட்டினம்.

'அம்மா.... அம்மா....' எண்டு கத்தியபடி நானும் அவையளோட போகவேணும் எண்டு எழும்புறன்... ஆனால் கட்டில விட்டு எழும்ப முடியேல்ல... என்ர உடம்பெல்லாம் என்னவோ செய்யிது. மூச்சு அடைக்குமாப் போல கிடக்கிறது.

திடீரென யாரோ என்னை உலுக்குமாப் போல இருக்க கண்களைத் திறந்து பார்க்கிறன்.

அங்கே 'நேஸ் அம்மா' நிண்டு கொண்டிருந்தார்.

சுற்றும் முற்றும் பார்க்கிறேன். அந்த ஆஸ்பத்திரி வழமைபோல இயங்கிக்கொண்டிருந்தது.

'அம்மா அம்மா' எண்டு என்ர வாய் முணுமுணுத்தபடி இருக்கிறது.

நான் கண்டது கனவு எண்டு விளங்கின பிறகு எனக்கு ஏமாற்றத்தில் அழுகையே வந்துவிட்டது.

என்ர நிலமை அந்த நேஸம்மாவுக்கு விளங்கிவிட்டது போல...

'தம்பி... என்னப்பன் செய்யுது... கனவு கண்டனிங்களோ அப்பன் பயப்பட வேண்டாம்... அம்மாவை வருவினம் என்ன? பிள்ளைக்கு மாக் கரைச்சுத் தரவே குடிக்க...'

எண்டு என்ர தலையத் தடவியபடி அன்போட கேட்ட நேஸ் அம்மாவைப் பார்க்க எனக்கு அம்மா ஞாபகம்தான் வந்தது.

தொண்டை வறண்டதுபோல இருக்க மெல்ல தலையசைத்தேன்.

அவவும் மாவைக் கரைச்சு எனக்கு மெல்ல மெல்லப் பருக்கி விட்டா.

'தம்பிக்கு காருண்யன்தானே பேர்...'

'ம்ம்...'

'எத்தினையாம் வகுப்புப் படிக்கிறியள்..?'

'நான் இந்த வரிசம் ஆறாம் வகுப்புப் படிக்க வேணும். ஆனா சண்டையால பள்ளிக்கூடம் போகேலை... உங்களுக்கொண்டு தெரியுமே... நான் ஸ்கொலஸிப் எல்லே பாஸ் பண்ணினனான். பெரிய பள்ளிக்கூடத்துக்குப் போக சப்பாத்து, பாக் எல்லாம் புத்தம் புதுசா வாங்கி வைச்சுக் கொண்டிருந்தனான். அதுக்குள்ள....'

'சரி... சரி... இனிக் காயம் மாற பள்ளிக்கூடம் போகலாம் தானே... நான் பிள்ளைக்கு அம்மா மாதிரி. என்ன வேணுமெண்டாலும் என்னட்ட கேளுங்கோ... என்ன...?'

'ம்'

'இந்தாங்கோ இது கந்தசஷ்டி கவசப் புத்தகம். முருகனை நினைச்சுக்கொண்டு இதைப் படிச்சிங்கள் எண்டால் உங்களுக்கு ஒரு பயமும் இருக்காது என்ன?'



எண்டு சொன்னபடி அதை என்னட்டத் தந்திட்டு மெல்லமா தலையையும் தடவிப் போட்டுப் போய்விட்டா!

நான் இந்த வவுனியா ஆஸ்பத்திரிக்கு வந்ததில் இருந்து நேஸ்மாரும் டொக்டர்மாரும் என்னை மட்டுமில்ல எல்லாரையும் தான் அடிக்கடி வந்து பாத்து கதைச்சுப் போட்டுப் போவினம். என்னோட கன காயக்காரர் இந்த ஆஸ்பத்திரிக்கு வந்தவை. அதிலையும் என்னப் போல சின்னாக்கள்தான் கனக்க...

எங்களைப் பாக்கிறதுக்கு எந்தச் சொந்தக்காரர்களையும் உள்ளுக்க விடாததால் நேஸ்மார்தான் எங்கட எல்லா வேலையையும் பாக்கிறவை. கக்காக்கு, ஒண்டுக்குப் போனாலும், சத்தி எடுத்தாலும் அவையள்தான் கழுவித் துடைச்சு விடுவினம்.

இப்ப என்னோட பேசின நேசுக்கு என்னில நல்ல விருப்பம். அவவில என்ர அம்மாவின்ர முகச்சாடை இருக்கிறதால எனக்கும் அவவில நல்ல விருப்பம். நான் அவவை 'நேசம்மா' எண்டுதான் கூப்பிடுறனான்.

என்ர கையில அவ தந்திட்டுப் போன புத்தகத்தைப் பார்த்தன். 'ஆபத்து வேளையில் கைகொடுக்கும் கவசம்' என முருகன் படத்தோட அச்சிடப்பட்டிருந்தது.

'படிப்போர்க்குத் துன்பம் போம்...' என்று தொடங்கி 'சரணம் சரணம் சண்முகா சரணம்' என்ற இறுதிவரை எனக்கு மனப்பாடம் ஆகி இருந்தது அவவுக்குத் தெரியாது தானே'.

மாங்குளத்தில இருந்து கிளிநொச்சி அங்க இருந்து புதுக்குடியிருப்பு என ஒவ்வொரு இடமா விமானக் குண்டு வீச்சுக்கிளாலேயும் பல்குழல், செல் வீச்சுக்குள்ளாலேயும் உயிரைப் பிடிச்சுக்கொண்டு ஓடிப் போகேக்கையும் நாள் கணக்காய் பதுங்கு குழிக்குள்ள இருக்கேக்கையும் இந்தக் கவசத்தைத்தானே வாயோயாமல் சொல்லிக் கொண்டிருந்தனாங்கள் எண்டது இவையளுக்கு எப்பிடித் தெரியும்?

இப்பிடி நாள் முழுக்க கவசத்தைச் சொல்லியும் என்ன பயன். முருகன் கூட எல்லாரையும் கைவிட்டிட்டாரே!

அண்டைக்கும் அப்பிடித்தானே!

செல்லடி தொடங்கியதும் பதுங்கு குழிக்குள்ள ஓடுவம் எண்டு வெளிக்கிட மேல 'சுப்பசொனிக்' பெரிய இரைச்சலோட பறந்து வந்து குண்டு போட வீட்டுக்குள்ள இருக்கமுடியாமலும் பதுங்கு குழிக்குள்ள போகமுடியாமலும் அந்தரிச்சுக்கொண்டு,

'காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க

கந்த சஷ்டி கவசத்தைச் சொல்லிக்கொண்டிருக்க அம்மா என்னையும் தம்பியையும் நிலத்தில படுக்க வைத்து எம்மை அணைத்தபடி எமக்கு மேல அம்மாவும் படுத்துக்கொண்டா. அப்பாவும் அக்காவ அணைச்சபடி குப்புறப்படுத்தார்.

பெரிய சத்தத்தோட பக்கத்தில விழுந்து வெடித்த குண்டால் உயிரே போனதுபோல இருந்தது. அதுக்குப் பிறகு என்ன நடந்ததெண்டு எனக்குத் தெரியேல்லை.

கண்ண முழிச்சுப் பாக்கேக்க நிலத்தில விரிக்கப்பட்ட உரைப்பையில மரத்துக்குக் கீழ கிடந்தன்.

மரத்தின்ர கிளை ஒண்டில உயத்திக் கட்டப்பட்ட குளுக்கோஸ் என்ர இடக்கையில ஏறிக்கொண்டிருந்தது.

இப்போதைக்கு இதுதான் எங்கட ஆஸ்பத்திரி எண்டதை அறிஞ்சு கொண்டன்.

வலது கை மணிக்கட்டோட இல்லை. வலது கால் முழங்காலோட இல்லை எண்டதை அறிஞ்சபிறகு இதுக்கு நான் செத்திருக்கலாம் எண்டுதான் நினைச்சன்.

அதைவிட தோள்மூட்டோட ஒரு பெரிய காயம். உடம்பெல்லாம் சரியான வலியாக இருந்தது. மருந்து கட்டேக்க செத்துச் செத்துப் பிழைக்க வேண்டியதாய் கிடக்கு.

நான் மட்டுமில்ல என்னோட நூற்றுக்கணக்கான பேர் கால் கை இல்லாமலும் பெரிய பெரிய காயங்களோடையும் இருக்கினம். என்னவிட சின்னச் சின்னக் குழந்தையள், வயசு போனவை, பொம்பிளையள், ஆம்பிளையள் எண்டு அந்த இடமே காயக்காறரால நிறைஞ்சு வழிஞ்சுது.

சிலர் செத்துப்போனவையின்ர உடம்பை வைச்சு அழுது கொண்டிருந்திச்சினம். டாக்குத்தர், நேஸ்மார் ஓடி ஓடி காயக்காறரை கவனிச்சுக் கொண்டிருந்திச்சினம்.

நான் இந்த மரத்தடி ஆஸ்பத்திரிக்கு வந்ததில இருந்து என்னை ஒருத்தருமே வந்து பாக்கேல. அம்மாவையளுக்கு என்ன நடந்துதோ; எங்க இருக்கினமோ தெரியேல்ல. ஆளுக்காள் ஒவ்வொரு இடமா இடம்பெயர்ந்து போனதில பக்கத்தில சொந்தக்காரரும் இல்லை. ஆரும் தெரிஞ்சவையைக் கூடக் காணேல்லை.

எனக்கு அப்பா அம்மாவையைப் பாக்கோணும் போல ஆசையா இருக்கு...

அண்டைக்கு திடீரெண்டு ஆரோ வந்தினம். என்னையும் இன்னும் காயக்காரரையும் வாகனத்தில ஏத்திக்கொண்டு வவுனியா ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்திச்சினம். அம்மா, அப்பா, சகோதரங்கள் எல்லாரையும் விட்டிட்டு நான் மட்டும் அநாதையா இஞ்ச இருக்கிறன்.

கையில இருந்த கந்தசஷ்டி புத்தகம் கைதவறிக் கட்டிலுக்குக் கீழ விழுந்திட்டுது... அத அப்பிடியே விட்டிட்டன். எனக்கிப்ப கந்தசஷ்டி கவசமும் வேண்டாம் கடவுளும் வேண்டாம். அம்மாதான் வேணும்.

தோள்மூட்டுக் காயத்தால முள்ளந்தண்டு, முதுகெல்லாம் ஒரே வலி.

கால் கையில இருக்கிற காயத்தால கால் கையெல்லாம் வலிக்குது...

எனக்கு அம்மாவின்ர மடியில படுத்திருக்க வேணுமாப் போல இருக்கு. அம்மா இந்தக் காயங்கள தன்ர கையால தடவி விட்டாலே காணும் எல்லா வலியும் போய்விடும்.

இப்ப எல்லாரும் எங்க இருக்கினமோ எப்பிடி இருக்கினமோ தெரியாது? ஏன் என்னை ஒருத்தரும் வந்து பாக்கேல்லை..?

நித்திரை கொள்ளேக்க எல்லாம் எல்லாரும் கனவில வருவினம். கனவு கலையேக்க எனக்கு கவலையாத்தான் வரும்...

ஆஸ்பத்திரியில இடைக்கிட ரி.வி. போட்டு விடுவினம். எனக்கு ரி.வி. பாக்கிற மனநிலையே இல்லை. இறுக்க கண்ணை மூடிக்கொண்டு நித்திரை கொள்ளப் பாப்பன். அப்பத்தானே கனவு வரும். கனவில அம்மா என்னைத் தன்ர மடியில வைச்சு தலையைக் கோதி விடுவா.

வீட்ட அம்மாவோட படுக்கிறதுக்கு நாங்கள் மூண்டுபேரும் சண்டை பிடிப்போம். அம்மாக்குப் பக்கத்தில அவவுக்கு மேல கால்போட்டுக் கொண்டு படுத்தால்தான் எனக்கு நித்திரையே வரும்.

சுவரில் இருந்த மணிக்கூட்டைப் பார்த்தன். நேரம் ஏழு மணியைத் தாண்டிவிட்டது. சிங்கள நிகழ்ச்சி ஒண்டு ரி.வி.யில போய்க்கொண்டிருந்தது. சிறுவர்கள் விதவிதமாய் தங்களைச் சோடிச்சுக்கொண்டு அந்த நடனப்போட்டி நிகழ்ச்சியில ஆடிக் கொண்டிருந்திச்சினம். அவையள் கதைக்கிற மொழி எனக்கு ஒண்டும் விளங்கேல.

எனக்கு பாட்டு, நடனம் எண்டால் நல்ல விருப்பம் எண்டதால அந்த நிகழ்ச்சியப் பாத்தன். அவர்கள் சந்தோஷமாக ஆடிப்பாடி கைதட்டி மகிழ்ந்திருச்சினம். எல்லாரும் எங்கட வயசுப் பிள்ளையள்தானே! எங்களுக்கு மட்டுமேன் இந்தக் கஸ்டம்.

பள்ளிக்கூடத்தில கலைவிழா எண்டால் கட்டாயம் என்ர நடனமும் இருக்கும். விளையாட்டுப் போட்டியில எத்தின 'கப்' எடுத்தனான் தெரியுமே! தமிழ்த்தினப் போட்டியிலேயும் எத்தின பரிசு பெற்றனான். எங்கட கந்தசுவாமி கோயிலில அம்மா வைச்ச நேர்த்திக்காக ஒவ்வொரு திருவிழாவிலேயும் காவடி எடுக்கிறனான். என்ர காவடியாட்டம் 'சுப்பரா' இருக்கெண்டு எல்லாரும் சொல்லுறவை.

அடுத்தமுறை திருவிழாவுக்கு நான் செடில் குத்தி ஆடவேணும் எண்டு அம்மாவை ஆக்கினைப்படுத்தி ஓம்பட வைச்சன். பங்குனியில திருவிழா நடக்கிறது. நடக்கிற சண்டேக்க திருவிழாத்தான் நடக்குமோ? நடந்தாலும் என்னாலதான் பழையபடி ஆடமுடியுமோ?

நடக்கவே ஆற்றையன் உதவி தேவைப்படேக்க... ம்... எல்லாம் கனவிலதான் முடியும்.

என்னைப் பாக்க ஆராவது வருவினம் எண்டு வாசலைப் பாத்துப் பாத்து ஏமாந்ததுதான் மிச்சம். என்ர கைகால் புண் கொஞ்சம் கொஞ்சம் ஆறிவரேக்க எனக்கு ஒரு பொல்லொண்டத் தந்து மெல்ல மெல்ல நடக்கப் பழக்கிச்சினம். ஒற்றக் காலால தெத்தித் தெத்தி நடக்கப் பழகினன்.

இடது கையாலயும் மெல்ல மெல்ல எழுதப் பழகினன்.

திடீரெண்டு ஒருநாள் கொஞ்சப் பேர் வந்து என்னையும் என்னோட காயப்பட்டு சுகமடைஞ்சவையையும் வாகனத்தில ஏத்திக்கொண்டு போக வெளிக்கிட்டிச்சினம்.

என்னைப் பார்த்த நேசம்மா என்னைக் கொஞ்சி என்ர தலையைத் தடவி விட்டா...

"எங்கள வீட்டுக்கே கூட்டிக்கொண்டு போகப் போகினம்... அய்யா... நான் என்ர அம்மா, அப்பா, அக்கா, தம்பி எல்லாரையும் பாக்கப் போறன். நான் போய் என்ர அம்மாட்ட கட்டாயம் உங்களப் பற்றிச் சொல்லுவன் நேசம்மா... ஒரு நாளைக்கு நீங்களும் எங்கட வீட்ட வாங்கோ என்ன?"

அவ எதுவும் கதைக்காமல் என்னையே பாத்துக் கொண்டிருந்தா. கண்ணால கண்ணீர் வடிஞ்சு கொண்டிருந்திச்சு.

பாவம்... என்ர பிரிவை அவவால தாங்க முடியேல்லப் போல...

அவவோட கனநேரம் கதைக்கவிடாமல் என்னைத் தூக்கிக்கொண்டு போய் வாகனத்தில ஏத்திப் போட்டினம்.

நானும் அம்மாவையப் பாக்கப் போற சந்தோஷத்தில இருந்தன்.

கொஞ்ச நேரத்திலேயே வாகனம் நிண்டுட்டுது... யன்னலால எட்டிப் பாத்தன். வரிசையா தகரத்தால அடிச்ச வீடுகள் வெய்யிலில பளபளத்துக் கொண்டிருந்திச்சு... அதச் சுத்தி கம்பி வேலி அடிச்சிருந்தது... உள்ளுக்க ஒரே சனம்.

எனக்கு ஒரே ஏமாற்றமா போச்சு... அழுகையும் வந்திட்டு.

எல்லாரையும் இறக்கி வாசலில நிண்டவேற்றை பேருகள் விபரங்கள் குடுத்தபிறகு உள்ளுக்க கொண்டு போய் விட்டினம். என்னையும் இன்னும் நாலு பேரையும் ஒரு தகரக் கொட்டகைக்குள்ள கொண்டு போய் விட்டினம்.

எனக்கு காயம்பட்ட கால் நிலத்தில் வைச்சபடி இருக்க கஸ்ரமா இருந்திச்சு... வசதியாய் இருக்க ஒரு கதிரை கூட இல்லை. உள்ளுக்க ஒரே வெக்கை. வாசல் பக்கமா இருந்தால் கொஞ்சம் காத்து வரும் எண்டு அரக்கி அரக்கி வாசலில போய் இருந்தன்.

ஆராரோ என்னைக் கடந்து போகினம், வருகினம்.. எல்லாற்ற முகத்தையும் உத்து உத்துப் பாத்தன். ஆரும் அறிஞ்சவை தெரிஞ்சவை இருக்கினமோ எண்டு...

சிலவேளை என்ர அப்பா அம்மா கூட இஞ்ச இருக்கலாமெல்லோ?

ஆனால் அப்பிடி ஒருத்தரையும் காணேல்லை. எல்லாற்ற முகத்திலயும் ஒரே சோகம்தான். இவையளும் ஆராரைத் துலைச்சுப்போட்டு தேடித் திரியினமோ தெரியாது.

இடதுகால நீட்டி ஒரு மரக்குத்தியோட சாஞ்சு இருந்தன்.

ஒரு கோழியின் அலறல் சத்தம் என்னைத் திடுக்கிட வைச்சது.

திரும்பிப் பாத்தன்.

அஞ்சாறு கோழிக்குஞ்சுகளுடன் தாய்க்கோழி மேல பாத்துக் கத்தியது...

அண்ணாந்து பாத்தன்...

பருந்து ஒண்டு கோழிக்குஞ்சுகைள குறிபாத்து வட்டமடித்துக் கொண்டிருந்தது.

அந்த வெட்டவெளியில் குஞ்சுகளுடன் பதுங்குவதற்கு இடமில்லாமல் கோழி அந்தரிச்சுக் கொண்டு நிண்டது.

ஓடிச் சென்று தன்ர குஞ்சுகளை தன் சிறகால அணைச்சுக் கொண்டது.

நானும் இப்பிடித்தானே அண்டைக்கு குண்டு விழேக்க அம்மாண்ட அணைப்பில இருந்தன்... இப்ப... என்ர அம்மா...

கோழியின் அகோரச் சத்தம்...

பருந்து கோழியைத் தள்ளிவிட்டு குஞ்சொன்றைக் கால்களில் தூக்கியபடி சுப்பர்சொனிக் குத்திக் குண்டுபோட்டிட்டு எழும்புவதைப் போல சடாரென மேலெழுந்து பறந்தது...

தாய்க்கோழியும் குஞ்சுகளும் அவலக் குரலில் கத்திக் கொண்டிருந்தன.

பருந்தின் கால்களில் சிக்குண்ட குஞ்சின் அவலச் சத்தம் என்ர காதில விழுந்தது. எனக்கு என்னவோ செய்தது. மெல்ல மெல்ல அந்தக் குஞ்சின் சத்தம் நின்று போக... எனக்கு மயக்கம் வருமாப் போல் இருந்தது...

மெல்ல அந்த மரக்குற்றியோடு சாய்ந்து கண்களை இறுக்கி மூடிக்கொண்டேன்.

---

# இலங்கை கலை இலக்கிய சங்கத்தால் நடாத்தப்பட்ட ஆய்வுக் கட்டுரைப்போட்டி முடிவுகள்

இலங்கை கலை இலக்கிய சங்கத்தால், நாடகக்கலைஞர் கந்தையா வடிவேலு ஞாபகார்த்தமாக நாடளாவிய ரீதியிலே நடாத்தப்பட்ட ஆய்வுக் கட்டுரைப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

முதலாமிடத்தினை சித்தி போகீந்திரன் (சுதுமலை தெற்கு, மானிப்பாய்), இரண்டாமிடத்தினை செல்வி உசாந்தினி சண்முகநாதன் (கோப்பாய் மத்தி, கோப்பாய்), மூன்றாமிடத்தினை குணரட்ணம் சுபாசினி (கோங்காகொடுவ தலாத்து ஓயா, கண்டி) ஆகியோர் பெற்றுள்ளனர்.

பரிசுச் சான்றிதழ் பெறும் போட்டியாளர்கள்.

இ. விஜயதர்சினி (கரணவாய் கிழக்கு, கரவெட்டி), நாகேஸ்வரன் சங்கீதன் (171 1/1 கனல் வங்கி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு – 06), நெயினா முகமட் பாத்திமா நிவ்ளா (619/C, வேக்கந்த றோட், வல்கம, மல்வானை, கம்பஹா), திருமதி. செல்வச்சந்திரன் நீரஜா (அல்லையம்பதி, துன்னாலை), சரவணமுத்து நவேந்திரன் (சோமநாதர் வீதி, பாண்டிருப்பு–1, கல்முனை), எஸ். சிவதாஸன் (J.P) (இல. 58, கனகரத்தினம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்), செ. சேயோன் (யா/இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்), சி. தனுசியா (கரவெட்டி கிழக்கு, கரவெட்டி), பா. கேமதர்சினி (120/1, எம்.எஸ் வீதி, மாத்தளை), ம. கிருஷாந்தி (கொடிகாமம்)

இவர்களுக்கான பணப்பரிசும், வெற்றிச் சான்றிதழும் சங்கத்தின் கலை இலக்கிய விழாவின்போது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளதாக சங்கத்தின் தலைவர் "சொல்வேந்தர்" பொன். சுகந்தன் தெரிவித்துள்ளார்.

KUMARAN
ADD

# ஒரு நகர்வில் நிலைத்திருத்தல்

மும்தாஜ் ஹபீஸ்

*ஒரு வண்டின் கடந்து வந்த பாதை*
*முன்னையதோர் அறிவித்தலின்*
*பிற்சேர்க்கையின் படி*
*ஓர் ஒப்பந்தத்தின் பேரில்*
*நடப்பட்ட கல்லும்;*
*மணல் மேடுகளும்;*
*சிதைந்த சில நிலப் பரப்புகளை நோக்கி*
*வெட்டப்பட்ட*
*சிறு கால்வாய்களும்*
*விட்டில் பூச்சிகள் மட்டுமே*
*வந்து குடியிருக்கும்*
*அந்த மின்கம்பமும்*
*அப்படியே இருக்க*
*ஓர் அரச பலகையை மட்டுமே அகற்றி*
*போடப்பட்ட குறுமணல் வீதியது!*

* * * * * *

*அந்த வண்டு*
*இதனை*
*ஊர்ஜிதப் படுத்திய வண்ணம்*
*இன்னும*
*உரித்துரிமையுடன்*
*மாட்டு வண்டிச் சக்கரங்களையும் தாண்டி*
*ஓட்டிச் செல்கிறது*
*மலவுருண்டைகளை...*

*இயந்திரப் பட்சிகளின்*
*எச்சங்களின் நடுவிலும்*
*இறந்துபோன*
*அந்த வண்ணத்துப் பூச்சியின்*
*பூதவுடல் எடுத்துச் செல்வதற்காய்*
*புதிதாய் தீர்மானிக்கப்பட்ட*
*அந்த மலர்ப் பாதையும்*
*இங்கிருந்து தான் ஆரம்பமாகிறது.*
*அப்போது*
*தனது எல்லைக் கோடுகளை*
*வரைந்து*
*வளர்ந்திருந்த நுங்குச் செடிகள்*
*தனது புதிய கனிக்கான*
*கோடுகளைக் கீறிக் கொள்கிறது.*

*ஒரு நாள்*
*மற்றுமொரு கனி*
*இறந்து போன*
*இந்த வண்ணத்துப் பூச்சியின் பேரில்*
*தானமாய் பரிசளிக்கப்படலாம்.*
*அல்லது*
*அதன் மரணத்துக்கான காரணம்*
*இக்கனியின்*
*அதிரசம் என திருப்பி எழுதப்படலாம்*
*எதுவாயினும்*
*மலவுருண்டைகளை மட்டுமே*
*கனிகளாய் சுவைத்துண்ணும்*
*வண்டுகளின் கோசம்*
*அதன் நியாயத்துக்கான கோரிக்கைகள்*
*ஒரு நாள்*
*அம்மாடுகளே குடியிருக்கும்*
*தொழுவங்களின்*
*சுவர்களைக் குடைந்து எழுதப்படலாம்*
*அல்லது*
*அம்மாடுகளின் ஏதோவொன்றின்*
*கடைசிக் குரல்வளை*
*மூச்சிலிருந்து*
*சிதறி வெளிப்படலாம்.*

*அப்போதும் கூட*
*இவ்வண்ணத்துப் பூச்சியின்*
*மரணத்துக்கான காரணம்*
*அதன் கல்லறைச் சுவர்களின் மீது*
*படர்ந்து வளரும்*
*ரோசாச் செடிகளின்*
*வாசனையிலும்*
*சத்துள்ள இதழ்களிலும்*
*நிச்சயமாய்*
*சாட்சியங்களாய் பரிணமிக்கப்படலாம்*
*இந்த வண்டுகளின்*
*கோரமற்ற விடியலின் பேரில்...*
*விடுதலையின் பாடலாய் மட்டும்!*

# மார்க்சிய இலக்கிய விமர்சனம்

**– க. சண்முகலிங்கம்**

மார்க்சிய இலக்கிய விமர்சனக் கோட்பாடுகளை ஐந்து பிரிவுகளாகப் பிரித்து நோக்கலாம் என்று எம். எஸ். நாகராஜன் என்ற ஆங்கிலப் பேராசிரியர் குறிப்பிடுகிறார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்துறையின் பேராசிரியராக இருந்து ஓய்வுபெற்றவரான எம்.எஸ். நாகராஜன் English Literary Criticism And Thory : An Introduction (ஆங்கில இலக்கிய விமர்சனமும் கோட்பாடும் : ஓர் அறிமுகம்) என்ற நூலை எழுதியுள்ளார். பட்டப்படிப்பு மாணவர்களுக்கான இப்பாடநூலை ஓரியன்ட் லோங்மன்ஸ் பதிப்பகம் வெளியிட்டுள்ளது (2006), 332 பக்கங்கள் கொண்ட இந்நூலின் சுமார் எட்டு பக்கங்களில் (பக் 222 – 230) மார்க்சிய இலக்கிய விமர்சனக் கோட்பாடுகள் பற்றி நூலாசிரியர் மிகத் தெளிவான அறிமுகத்தைத் தருகின்றார். மார்க்சிய விமர்சனக் கோட்பாடுகள் பற்றிய ஒரு வகைப்பாட்டை இவர் தந்திருப்பது இவ்விடயத்தின் புரிதலை மிக எளிதாக்கியுள்ளது. டேவிட் போர்ஹக்ஸ் (David Forgacs) என்பவர் எழுதிய Marxist Literary Theories என்ற கட்டுரையில் தரப்பட்டுள்ள வகைப்பாட்டையே தாம் பின்பற்றுவதாகக் கூறியிருக்கும் நாகராஜன் தரும் ஐந்து பிரிவுகளின் தலைப்புகள் வருமாறு.

1. பிரதிபலிப்பு மாதிரி (The Reflection Model)
2. உற்பத்தி மாதிரி (The Production Model)
3. தோற்ற மூல மாதிரி (The Genetic Model)
4. பிராங்பேர்ட் பள்ளி (The Frank Furt School)
5. பின் அமைப்பியல் (The Post Structuralism)

ஒவ்வொரு பிரிவுகள் பற்றியும் நாகராஜன் கூறியிருப்பவற்றை சுருக்கமாக என் வார்த்தைகளில் கீழே தருகிறேன். இக்கோட்பாடுகள் பற்றி வெவ்வேறு நூலாசிரியர்கள் எழுதியிருப்பவை, நான் படித்தவை என்பவற்றையும் இக்குறிப்புக்களில் சேர்த்துள்ளேன்.

**பிரதிபலிப்பு மாதிரி**

இலக்கியம் புற உலகைப் பிரதிபலிக்கும் கண்ணாடி போன்றது என்று இக்கோட்பாடு கூறும், அரிஸ்டோட்டில் எழுத்துக்களில் இக்கருத்தின் மூலத்தைக் காணலாம். புற உலகத்தினை புலன் தரவுகள் வழி மனித மனம் அறிந்து கொள்கிறது. இந்த அறிவு புலக்காட்சி எனப்படும். புலக்காட்சி மனித மனத்தில் சிந்தனை வடிவங்களாக மாற்றப்படுகின்றன. ஹங்கேரி நாட்டவரான ஜோர்ஜ் லூகாக்ஸ் மார்க்சிய இலக்கியம் பற்றிய பிரதிபலிப்புக் கோட்பாட்டை விளக்கிய முன்னோடியாவார். கண்ணாடி என்ற உவமையை லூகாக்ஸ் முழுமையாக ஏற்றவரல்ல. வெறுமனே பிரதிபலிப்பது இலக்கியத்தின் வேலை அல்லவென்று லூகாக்ஸ் கருதினார். எழுத்தாளன் கற்பனை உலகத்தை இலக்கிய ஆக்கத்தில் படைத்தளிக்கிறான். இக்கற்பனை உலகம் பிரதியட்சமான புற உலகத்தின் பிரதிபலிப்பு என்பதே இவர் கருத்து. லூகாக்ஸ் 'மொடேர்னிசம்' என்னும் இலக்கியக் கோட்பாட்டை கடுமையாக விமர்சித்தவர். மனித ஆளுமையின் சீரழிவை வெளிப்படுத்துவனவாக 'மொடேர்ணிச' எழுத்துக்கள் உள்ளன. நாவல்தான் இக்காலத்தின் உயர்வான இலக்கிய வடிவம் என்று கருதிய லூகாக்ஸ் 'யதார்த்த நாவல்' பற்றிய கோட்பாட்டை உருவாக்கினார். லூகாக்ஸ் மிக உயர்தரத்தில் வைத்துப் போற்றப்படும் சிந்தனையாளர். ஸ்டாலினிசம் லூகாக்ஸ் கருத்துக்களுக்கு இறுதிவரை அங்கீகாரம் வழங்கவில்லை. இதனால் லூகாக்ஸ் கருத்துக்கள் சோவியத் யூனியனில் இருந்து வந்த நூல்களில் இருட்டடிப்புச் செய்யப்பட்டன. பிரதிபலிப்புக் கோட்பாட்டில் பலவகைகள் உள்ளன. கோ. கேசவன் மார்க்சிய இலக்கிய விமர்சனம் பற்றிய தமிழ் நூல் ஒன்றை எழுதினார். அது பிரதிபலிப்புக் கோட்பாட்டின் விரிவான விளக்கமாக அமைந்தது. எம். ஏ. நுஃமான் இந்நூலின் முறைகளைச் சுட்டிக்காட்டி நல்லதொரு விமர்சனத்தை அக்காலத்தில் எழுதினார். க. கைலாசபதி, எஸ்.தோதாத்திரி ஆகிய இருவரும் யதார்த்தவாதம் என்றால் என்ன என்பதை மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லி தமிழில் மார்க்சிய இலக்கிய விமர்சனத்தின் தரத்தை உயர்த்தியவர்கள். பிரதிபலிப்புக் கோட்பாட்டின் பிரதிநிதியாக கொள்ளவேண்டிய கிரிஸ்ரோபர் காட்வெல் எழுதிய நூலை 'கானலும் உண்மையும்' என்ற தலைப்பில் எஸ். தோதாத்திரி மொழிபெயர்த்துள்ளார். என்.சி.பி.எச் இதனை அண்மையில் (2007) பிரசுரித்துள்ளது. எம்.எஸ். நாகராஜன் குறிப்பிடும் ஏனைய நான்கு மாதிரிகளும் மரபு வழி மார்க்சிஸ்டுகளால் ஏற்கப்படாதவை என்பதைச் சொல்லுதல் வேண்டும். சிலர் மிகுந்த தயக்கத்துடன் இவை பற்றி ஆங்காங்கே குறிப்பிடுவர்.

**உற்பத்தி மாதிரி**

பிரான்ஸ் நாட்டு மார்க்சிஸ்ட்டான பியர் மஷெரி இக்கோட்பாட்டின் மூலகர்த்தா. இலக்கியம் ஓர் உற்பத்திப் பொருள் (Product). மூலப்பொருட்கள் சிலவற்றை இலக்கியம் என்ற முடிவுப் பொருளாக மாற்றுதல் படைப்பாளியின் வேலை. இலக்கிய மரபுகள், உத்திகள், நடைமுறைகள் யாவற்றையும் ஒன்றுதிரட்டி ஒரு 'பிரதியை' இலக்கியப் படைப்பாளி அரங்கேற்றுகிறான். பிரதியின் ஊடாக படைப்பாளியின் கருத்தியல்தான் அரங்கேறுகிறது என்றும் சொல்லலாம். தமிழவன் பியர் மஷெரி பற்றி இப்படிக் கூறுகிறார்.

''இவருடைய 'இலக்கிய உற்பத்திக் கோட்பாடு' (A Theory of Literary Production) என்னும் நூல் பிரெஞ்சு மொழியில் 1966இல் வெளிவந்தது. பின்னர் 12 ஆண்டுகள் கழித்து இந்நூல் 1978இல் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது. உலக இலக்கிய விவாதத்தில் இந்த வெளியீடு 1980களில் முக்கியமான இடத்தைப் பெற்றது'' (தமிழவன் : அமைப்பியலும் அதன் பிறகும் (2008) பக் 265) பியர் மஷெரி பற்றி தமது 'ஸ்ட்ரக்சுரலிசம்' நூலில் (1982) அறிமுகம் செய்த தமிழவன் 12 ஆண்டு இடைவெளியில் ஆங்கிலத்தில் அறிமுகமான

ஒருவரை 4 ஆண்டுக்குள் தமிழில் அறிமுகம் செய்து உலக இலக்கிய விவாதத்தில் தமிழ் உலகையும் இணைக்க முயன்றார். இது பாராட்டுக்குரியது. பியர் மஷெரி அமைப்பியலாளர்களில் ஒருவராகவே குறிப்பிடப்படுகிறார். இன்னோர் ஆங்கில நூலில் (மூன்று எழுத்தாளர் இணைந்து எழுதியது) இருந்து ஒரு மேற்கோளையும் தருகின்றேன். 'அல்தூசரின் கலையும் கருத்தியலும் தொடர்பான விவாதத்தை விரிவாக்கியவர் பியர் மஷெரி. பிரதியை படைப்பு (Creation) என்றோ முழுமை நிறைந்த தன்னளவிலான ஆக்கம் என்றோ கருதாமல் அதனை உற்பத்திப் பொருள் (Production) என்று கூறினார். பல்வேறு மூலப்பொருட்கள் இந்த செயல்முறையில் சம்பந்தப்படுகின்றன. உற்பத்தியில் திட்டமிடுதல், கண்காணித்தல் இவையெல்லாம் உண்டல்லவா? ஆனால் பிரதியின் உற்பத்தி சுய உணர்வுடன் கூடிய செயல்முறையல்ல. அது நனவிலியால் (Unconscious) இயக்கப்படுகிறது. பிரதி, ஒன்றைச் சொல்லும்போது இன்னும் சிலவற்றை மறைக்கிறது. விமர்சகர்களின் வேலை உளப்பகுப்பாய்வாளனின் வேலைக்கு ஒப்பானது. பிரதியின் ஆழ்மனத்தில் நனவிலியில் புதையுண்டவற்றை மேலே கொண்டுவர வேண்டும். மஷெரியின் கருத்துக்களை இவ்விதம் இந்நூல் விபரிக்கின்றது. 'சமகால இலக்கியக் கோட்பாடு – ஒரு வாசகர் வழிகாட்டி' என்பது இந்நூலின் தலைப்பு.

### தோற்றமூல மாதிரி

ஆங்கிலத்தில் 'ஜெனற்றிக் மொடல்' என்பதை தமிழில் 'தோற்றமூல மாதிரி' என்று கூறியுள்ளோம். 'ஜெனற்றிக்ஸ்' என்றால் உயிரியலில் பிறப்புரிமையியல் (மரபியல்) என்று பொருள்படும். லூசியன் கோல்ட்மன் என்னும் ருமேனிய நாட்டின் சிந்தனையாளர் இக்கோட்பாட்டை உருவாக்கினார். எம்.எஸ். நாகராஜன் நூலில் இருந்து ஒரு மேற்கோள் கீழே தருகிறேன். (எளிமைப்படுத்திய தமிழாக்கம்)

"இலக்கியம் சமூக உணர்வை வெளிப்படுத்தும் ஆக்கம். சமூகத்தில் உள்ள குழுக்களில் சில கருத்தியலின் உயர் வடிவங்களைத் தம் சமூக உணர்வில் கொண்டனவாக இருக்கும். இவற்றை உயர்வடிவான 'உலகப் பார்வை' என்று கூறமுடியும். இக்குழுக்கள் பிற்போக்கானவையாகவும் இருக்கலாம்; முற்போக்கானவையாகவும் இருக்கலாம். இக்குழுக்களின் பார்வை அல்லது நோக்கு ஒரு மனக்கட்டமைப்பை (Mental Structure) உருவாக்கும். இதற்கு உருவும் மெருகும் கொடுத்து முரணற்ற ஒத்திசைவை உருவாக்குபவர்களே படைப்பாளிகள். ஒரு படைப்பாளியின் அகம் (Self) இலக்கியப் படைப்பில் வெளிப்படுகிறது என்பதை விட ஒரு சமூக வர்க்கத்தின் கருத்து வெளிப்பாடே இலக்கியம் என்று சொல்வதே சரியானது. மனோரதியக் கற்பனாவாதிகள் இதனைத் தனிநபர் மேதைமை எனக் குறுக்கிப் பார்ப்பதுண்டு. இலக்கிய ஆக்கம் சமூகத்தின் கூட்டுமுயல்வின் விளைபொருள்."

இங்கே மனக்கட்டமைப்பு என்று குறிப்பிடுவதை 'trans - individual mental structures' என்றும் நாகராஜன் கூறுகிறார். அதாவது 'தனிநபர் கடந்த மனக்கட்டமைப்பு' அல்லது ஒரு வரலாற்றுக்கட்டத்தில் தோற்றம்பெறும் உலகப் பார்வை என்று இதனை விளக்கலாம். இந்த உலகப்பார்வை ஒரு கற்பனை அல்ல; சமூக உண்மை (Social Fact) ஆகும். பொருளாதார அடித்தளம் இலக்கியம் என்ற மேற்கட்டுமானத்தில் வெளிப்படுகிறது என்ற கருத்தை லூசியன் கோல்ட்மன் ஏற்பதில்லை. ரூமேனியாவில் பிறந்த கோல்ட்மன் பிரான்சில் வாழ்ந்தார். அவரையும் ஒரு அமைப்பியல்வாதியாகவே குறிப்பிடுவர்.

நாகராஜன் பகுப்பில் பியர் மாஷெரி, கோல்ட்மன் ஆகிய இருவரையும் தனித்துவமான கோட்பாடுகளை நிறுவியவர்களாகப் பிரித்துக்காட்டியிருப்பது கவனிப்புக்குரியது.

### பிராங்பேர்ட் பள்ளி

பிராங்பேர்ட் பள்ளி (அல்லது கூடம்) என்ற சிந்தனைப் பிரிவினரின் கருத்துக்களை 'கிரிட்டிக்கல் தியரி' (Critical Theory) என்றும் கூறுவர். இதன் தமிழ் மொழிபெயர்ப்பு 'விமர்சனக் கோட்பாடு' இச்சொல்லைக் கொண்டு இக்கோட்பாடு இலக்கிய விமர்சனம் பற்றிய கோட்பாடு என்று பொருள் கொள்ளக் கூடாது. முதலாளித்துவ சமூக அமைப்பை விமர்சன நோக்கில் பார்க்கும் இயக்கம் ஒன்று ஜேர்மனியின் பிராங்பேர்ட் நகரை மையமாகக் கொண்டு 1920களில் தோற்றம் பெற்றது. இந்த இயக்கம் மரபு வழி மார்க்சியத்தின் 'பொசிட்டிவிசத்தின் (புற மெய்மைவாதம்) கடுமையான விமர்சனத்தையும் முன்வைத்தது.

அடித்தளம், மேற்கட்டுமானம் விவாதத்தை விட்டு மேற்கட்டுமானத்தின் கருத்தியல் என்னும் விடயம் பற்றி விரிவாக இக்கோட்பாட்டாளர்கள் ஆராய்ந்தனர். இவர்களுள் தியடோர் அடர்ணோ கலை இலக்கியம் குறித்த கோட்பாட்டாளராக அறியப்பட்டார்.

கலை சமூகத்தின் சாரத்தை வெளிப்படுத்தும்; அது சமூகத்தின் போட்டோ பிரதியன்று. கலை, இலக்கியம் காட்டும் உலகு புற உலகில் இருந்து வேறானது. புற உலகின் முரண்பாடுகளை அவை எடுத்துக்காட்டும். 'உண்மை உலகின் எதிர்மறை அறிவுதான் கலை' என்றார் அடர்ணோ. லூகாக்ஸ் 'மொடேர்ணிசத்தை' சீரழிவு எனக் கண்டனம் செய்தார். அடர்ணோவும் அவர் வழிச்சென்றோரும் 'மொடேர்ணிசம்' இன்றைய முதலாளித்துவத்தின் சீரழிவை விமர்சிக்கும் ஒரு உத்தி என்றனர். அந்நியமாதலைக் கலாபூர்வமாக வெளிப்படுத்திய பெக்கட் (Beckett) பிரக்ட் (Brecht) ஆகியோர் மொடர்ணிச உத்திகள் கொண்டு சமூக விமர்சனத்தைச் சிறப்பாகச் செய்தனர். இலங்கையில் பாலேந்திரா பிரக்டை தமிழில் அறிமுகம் செய்தார். பிரக்டின் 'எப்பிக்தியேட்டர்' நாடக உத்திகளைப் பற்றி அறிவு உள்ளோர் அடர்ணோவின் கருத்துக்களை இலகுவில் புரிந்து கொள்வர். 'உயர்கலை' 'வெகுஜன ரசனைக்குரிய கலை' அல்லது மட்டமான கலை என்ற பேதத்தையும் 'மொடர்ணிஸ்ற்' தகர்த்து விட்டார்கள் என்றும் பிராங்பேர்ட் பள்ளியினர் கூறுவர்.

### பின் அமைப்பியல்

லூயி அல்தூசர் றேமன்ட் வில்லியம்ஸ் ரெஜி ஈகிள்டன், பிரடெரிக் யேம்சன் ஆகியோர் பின்னமைப்பியல் வழியில் மார்க்சிய இலக்கியக் கோட்பாட்டை விளக்குகின்றனர். இது அடித்தளம் மேற்கட்டுமானம் மாதிரியில் இருந்து விலகிச் செல்கிறது.

அமைப்பியலை 1. மொழியியல் அமைப்பு வாதம், 2. மானிடவியல் அமைப்பு வாதம், 3. மார்க்சிய அமைப்பு வாதம் என்ற மூன்றாகப் பிரித்துப் பார்க்க வேண்டும். முதல் இரு

போக்குகளுடன் முறையே சசூர், லெவி ஸ்ட்ராஸ் என்னும் இருவர் தொடர்புபட்டவர்கள். மொழியியல் அமைப்பியலால் இழுத்துச் செல்லப்படாமல் தம் தனித்துவத்தை மார்க்சிய அமைப்பியல் வாதிகள் பேணினர். அல்தூசர் இலக்கியத்தை அரசு யந்திரத்தின் (State Apparatus) பாகமாகவே நோக்குகிறார். றேமன்ட் வில்லியம்ஸ் மேற்குலகின் பண்பாட்டு வரலாற்றை மார்க்சியப் பார்வையில் விளக்குகிறார். புற யதார்த்தத்தை பிரதிபலிப்பது இலக்கியம் என்று சொல்வதற்குப் பதில் புற யதார்த்தத்தை உருவாக்குவதில் முக்கிய பங்குபெறும் கருத்தியலை இலக்கியம் உருவாக்குகிறது என இன்னொரு பிரித்தானிய மார்க்சிஸ்ட்டான ரெரி ஈகிள்டன் கூறுகிறார். அமைப்பியல், பின்னமைப்பியல் என்பன பற்றிய நூல்கள் தமிழில் ஆயினும் சரி ஆங்கிலத்திலாயினும் சரி விளங்கிக் கொள்வதற்கு கடினமான நடையிலேயே எழுதப்பட்டுள்ளன. பிரெஞ்சு மொழியில் எழுதப்பட்ட மூல நூல்களின் கருத்துக்கள் ஆங்கிலத்திற்கும், பின்னர் ஆங்கில வழி தமிழிற்கும் வருவதில் ஏற்படும் சிக்கல் ஒன்று. புதிய கலைச்சொற்கள், கருத்தாக்கங்கள் எழுப்பும் குழப்பம் இன்னொன்று. இவை இரண்டையும் விட இன்னுமொரு விடயம் முக்கியமானது. இந்திய சமூகவியலாளர் எஸ். எல். டோஷி என்பவர் கூற்று வருமாறு.

''...பின்னமைப்பியல்வாதிகள் தங்கள் எழுத்துக்களில் எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்க்கிறார்கள். அரசியல் கோட்பாடு, இலக்கிய விமர்சனம், தத்துவம், உளப்பகுப்பியல், குறியியல், பெண்ணியம், பின் நவீனத்துவம் என்று பல விடயங்கள் பின்னமைப்பியலில் கலக்கப்படுகின்றன.'' டோஷி பின்னமைப்பியல் பற்றிக் கூறுவது போல இலக்கியத்திற்குள் மட்டும் நின்று பார்க்காமல் அனைத்துச் சமூக அறிவியல் துறைகளையும் தழுவி நிற்கும் சமூக சிந்தனையாக மார்க்சிய இலக்கிய விமர்சனம் உள்ளது. மார்க்சியம் அல்லாத விமர்சனமும் அப்படித்தான் உள்ளது. எஸ். எல். டோஷி பற்றி ஒரு தகவலைக் கூறி இக்கட்டுரையை முடிப்போம். நவீன சமூக சிந்தனையை (Social Theory) கல்லூரி மாணவருக்கும் விளங்கும் முறையில் எளிமையாக எழுதும் திறன் படைத்தவர் டோஷி. அவரின் Modernity, Post Modernity and Neo-Socialogical Theories (Rawat 2006) மிகச் சிறந்த நூல்களில் ஒன்று.

---




பௌர்ணமி தினம். முற்பகல் நேரம். நெடுஞ்சாலைகள் சந்திக்கும் நாற்சந்தி.

மத்தியில் அமைந்திருக்கும் புல் மேடையின் அரச மர நிழலில் புத்த பகவானின் கருணை தவழும் அழகான சிலை.

பூஜிக்கப்பட்ட மலர்களின் சுகந்தமும், ஊது பத்தி புகையின் நறுமணம் கமழும் மணமும் சூழலை புனிதமாக்கின.

எதிர்திசையில் சில மீட்டர் தூரத்துக்கப்பால் சாலையை அண்டிய திடல்.

ஏதோ ரெலி சீரியலுக்காக ஷூட்டிங் நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன.

மக்கள் ஷூட்டிங்கை வேடிக்கை பார்ப்பதற்காக குழுமியிருந்தார்கள்.

ஆசை யாரை விட்டது... நானும் முண்டியடித்துக் கொண்டு கூட்டத்தோடு சேர்ந்து கொண்டேன்.

படப்பிடிப்புக் குழுவினர் நீண்ட நேரமாக முக்கிய நடிகரின் வரவுக்காக காத்திருந்தார்கள்.

மனம் அலுத்துப்போன நான் அவ்விடமிருந்து போய்விடலாமா என்று யோசித்தபோது...

கூட்டத்தில் சல சலப்பு ஏற்பட்டது.

தூரத்தில் சாலையின் வளைவில் சிகப்புநிற மாருதி கார் ஒன்று வந்து கொண்டிருந்தது.

''ஆக்ஷன், ரெடி'' என்று குரல் ஒலித்தது.

சில, வினாடிகளில் காடையர்கள், போல தோற்றமளித்த சிலர் அந்தக் காரை துப்பாக்கி முனையில் வழி மறித்தனர்.

வீடியோ கமரா காட்சியை பதிவு செய்ய ஆரம்பித்தது...

கதாநாயகன் போன்ற தோற்றமளித்த அந்த நபர் காரிலிருந்து பலாத்காரமாக இறக்கிவிடப்பட்டார்.

முகத்தில் பீதியும், கலவரமும், கொப்பளித்த திமிறலும், திணறலும் என்று தனது நடிப்பை அற்புதமாக வெளிப்படுத்தினார்... அந்த நடிகர்.

சில வினாடிகளில் பக்கத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வெள்ளை நிற வானில் ஏற்றப்பட்டார்.

''பஜரோ'' வாகனம் பின் தொடர அந்த வெள்ளை வான் சென்று மறைந்தது.

புதுமுக நடிகரின் நடிப்பையும், ஷூட்டிங்கையும் பார்த்து ரசித்த சனக்கூட்டம் மகிழ்ச்சியுடன் கலைந்து சென்றது.

அன்று இரவு முழுவதும் பக்கத்து புத்தகோவில் பௌத்த துறவிகளின் 'பிரித்' ஓதும் வைபவம் நடந்துகொண்டிருந்தது...

பொழுது புலர்ந்தது... ஊடகங்களில் தலைப்புச் செய்தியாக ''ஷூட்டிங் என்ற போர்வையில் பிரபல பத்திரிகையாளர் கடத்தப்பட்டு படுகொலை'' என்ற செய்தி வெளியாகியிருந்தது.

நேற்று நடந்தது ஷூட்டிங் அல்ல நிஜம் என்று தெரிந்த போது... அதிர்ச்சியில் உறைந்து போனேன். இது வன் முறையின் இன்னொரு முகம்.

இந்த நாடகம் அந்த மேடையில் இன்னும் எத்தனை நாட்களம்மா...? என்ற கவிஞரின் வரிகள் என் நெஞ்சில் தீராத வலியை ஏற்படுத்தின.



# குளம்

- சுதர்மமகாராஜன்

**1**

குளத்தில் குப்புறப் படுத்தபடி மிதந்து கிடந்தான் ராசு. குளத்து நீரின் குளிர்ச்சி உடல் முழுவதும் பரவி உள் உறுப்புகளின் அடி ஆழம்வரை சென்று பதப்படுத்தியது. அதன் சுகம்... அப்படியே மிதந்த படி கிடந்தான்.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை விரிந்திருந்தது குளம். அதன் மூச்சு சிறு அலைகளாய் தோன்றி பெரிய அலைகளாய் உருமாறி கரையிலிருந்த கற்களில் மோதி "க்லுக்... க்லுக்" என்று பின் வாங்கியது. அதன் ஆட்டத்திற்கேற்ப அவன் உடல் அலையோடு அசைந்து கொடுத்தது. அலைகளின் வேகத்திற்கேற்ப உடல் அசைந்து கொடுத்தாலும், மனம் மட்டும் கல்லாய் மல்லாந்து கிடந்தது. மனதை அசைக்க முடியாதபடி அதில் பத்துவின் நினைவுகள் பாறாங்கல்லாய் கனத்தன.

"பத்து... பத்து...வென குளத்தின் அடி ஆழத்திலிருந்து அதன் மூச்சு அவள் பெயரை உச்சரித்து எதிரொலிப்பதாய் அவன் காதுகளில் கேட்டுக் கொண்டேயிருந்தது. குளத்தின் குரலில் அவள் பெயர் ஒலிக்கும் போதெல்லாம் மனதின் கனம் அதிகரித்து. உடல் நீருக்குள் அமிழ்ந்து அமிழ்ந்து மேலெழுந்தது.

இவ்வளவு நாட்கள் அவளை பிரிந்திருந்ததில்லை. பிரிதலின் வலி... பகிர்ந்து கொள்ள யாருமில்லாதிருந்த வேளையில் இப்போது தன் ஆசைக்குளம். இப்படித்தான் வாழ்க்கையின் பல கட்டங்களில் குளம் அவனோடு பலதையும் பங்கு போட்டுக் கொண்டிருக்கிறது.

மனதின் வலி கண்ணீராய் வெளிப்பட்ட போது நீர் அதிர்ந்து அலையின் வேகம் அதிகரித்து. உடலின் அசைவு அதற்கேற்ப ஆடி அடங்கியது.

குளத்தின் ஒவ்வொரு அசைவும் அவனுக்கு நன்கு பரிச்சயமானது. அசைவின் பின் ஏற்படும் மாற்றம் அவன் அறிவான். சிறுவயதிலிருந்தே குளத்துடனான உறவு அவனுக்குள் பல மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறது.

முதன் முதலாய் அப்பாவின் கரம் பற்றி குளிப்பதற்காக குளத்தினுள் இறங்கிய நாளிலிருந்து, இன்று வரை அது அவனுக்கு உற்ற நண்பனாய் பல விடயங்களை பகிர்ந்தும், கற்பித்தும் இருக்கிறது.

பள்ளிக்கூடம் விட்டு குளக்கட்டு வழியாக வரும் போதெல்லாம் குளத்தின் படர்ந்த தேகம் அவனுக்குள் ஒரு சிலிர்ப்பை ஏற்படுத்தும். சில நாட்களில் அப்படியே ஆடைகள் களைந்து உச்சியில் குட்டும் வெயிலை குளத்து நீரில் அமிழ்த்தி சுகம் கண்டிருக்கிறான். தாமரைக் கொடிகளை பிடித்தபடி கரையோரமாக முங்கி முங்கி குளித்துக் கொண்டிருந்தவனுக்கு, குளம், ஒரு நாள் நீச்சலடிக்கக் கற்றுக் கொடுத்தது.

நீச்சல், அவனை குளத்தின் ரகசிய பிரதேசங்களுக் கெல்லாம் கொண்டுசென்றது. ஓரிடத்தில் முங்கி உள் நீச்சலில் குளத்தின் அடிவயிறு தடவியபடி தாமரைக் கொடிகளிடையே வெகுதூரம் சென்று பிறிதொரு இடத்தில் தலைகாட்டுவான். சேற்றுக்குள் முங்கி எழும் ஜப்பான் மீன்களின் முதுகு தடவி, அச்சம் காட்டி மீனோடு மீனாய் நாலா பக்கமும் நீந்தி கரையேறும் போது ஏற்படும் சுகம்! அப்படியே கரையில் படுத்தபடி அனுபவிப்பான். அம்மாவுக்கு பயம்.

"டேய் தம்பி குளத்துள கனதூரம் போகாதடா... சுழி சுற்றிக் கிடக்கு"

என்று ஏதோ ஒரு காலத்தில் சுழியில் சிக்கி இறந்த இரத்தினத்தின் கதையை எடுத்து விட்டு உச்சு கொட்டுவாள். குளத்தின் சுழிகள் அவனுக்கு அத்துபடி. அதை ஏறி மிதித்து குப்புற அடிப்பதாய் இருக்கும் மரத்திலிருந்து தண்ணீருக்குள் பாயும் பாய்ச்சல். ஒரு நாள் மரத்தின் உச்சியிலிருந்து குளத்துக்குள் பாய்ந்த பாய்ச்சல் கண்டு, யாரோ அப்பாவின் காதில் வைக்க, உச்சியிலிருந்து தண்ணீரில் பாய்ந்த போது ஏற்பட்ட வலியை மறக்கடிக்கச் செய்தது அப்பாவின் பிரம்படி. அதன் தாக்கம் இரண்டு நாள் காய்ச்சலில் படுத்துக் கிடந்தான்.

பயமென்றால் அப்பாவுக்கு மட்டும் தான். அப்பாவின் பார்வை அடிவயிற்றை கலக்கும். அவரது கண்டிப்பின் பல வலிகளை குளத்தோடு கரைத்துவிட்டிருக்கிறான். சூரியன் மறைந்த பின்னும் இருட்டு தனிமையில் குளத்தினுள் கிடந்த பல நாட்களில் கரையிலிருந்து அப்பாவின் அதட்டல் குளத்தையே அதிரவைக்கும். அப்போதெல்லாம் இருட்டு பயமில்லை. எத்தனை இரவானாலும் நடமாடித் திரியலாம். இருந்தும் அப்பாவுக்கு ஆறேழு மணிக்குள் எல்லோரும் வீட்டிலடைய வேண்டுமென்ற கண்டிப்பு. அதை பலமுறை மீறி அடியும் திட்டும் வாங்கியிருக்கிறான்.

வீட்டின் ஏக்கம் வெகுவாய் மேலெழ, அதில் பத்துவின் நினைவுகள் சுழி போல் சுற்றிச் சுற்றி வந்தன. குளத்தின் விடாத அலைகளின் அசைவு அவன் நினைவுகளை உலுப்பி உலுப்பி விட்டன.

**2**

இருட்டின் மூச்சு மூலை முடுக்கெல்லாம் ஒலித்துத்திரிய அதையும் கடந்து நிசப்தத்தின் வடிவத்தை குழைத்து தள்ளியது அவளது மூச்சின் ஒலி. அது அச்சத்தின் ஒலி. அது அடிவயிற்றிலிருந்து உருண்டு உருண்டு மேலெழுந்து நெஞ்சை அழுத்தியது.

காற்றின் அசைவற்று உஷ்ணமான இருட்டின் தடங்கள் மெதுமெதுவாய் நகர, அவளிடமிருந்து நித்திரை வெகுதூரம் ஊருக்குள் ஊளையிட்ட படி அலைந்தது. உஷ்ணத்தின் பிசுபிசுப்பு யன்னல் இடுக்குகளுக்கூடாக அவள் முகத்திலறைந்து நீராய் வடிய, அதனோடு போட்டி போட்டபடி கண்ணீரும்!

இத்தனை நாட்கள் அவனை பிரிந்திருந்ததில்லை. அதன் ஏக்கம் அவளை வெகுவாக உருக்கியிருந்தது. காற்றின் திசையெல்லாம் கேட்கும் குரல்கள் அவன் குரல் போலவே மாயை காட்டி மறைந்தன.

“பத்து... நான் டவுனுக்கு போறன்... உனக்கு என்ன வேணும்...”

அவன் இறுதியாக பேசிய வார்த்தைகள். எதுவுமே கேட்காது நாணத்தில், சிரித்து காதலாய் விடை கொடுத்ததை நினைக்கும் போதெல்லாம் அவள் மனம் மயங்கி, கண்கள் மேலே சொருகி சரிந்து விழுவாள். அப்போதெல்லாம் யாராவது தாங்கிப் பிடித்து நீர் தெளித்து அவளை ஆசுவாசப்படுத்த வேண்டி வந்தது. அநேகமாக அம்மாதான் பக்கத்திலேயே இருப்பாள். அவளோடு மல்லுக்கட்டி கெஞ்சிக் கூத்தாடி ஆறுதல் படுத்துவாள்.

“பிள்ள அழாத... அவன் எப்படியாயும் வருவான்... அந்த நரசிம்மர் எங்கள கைவிடான்”

அம்மாவின் வார்த்தைகள் அவள் காதில் புகாமலேயே நழுவி விடும். திண்ணையில் குந்தி வாசலை பார்த்தபடியே இருப்பாள். ஒழுங்கையில் மனித நடமாட்டம் கண்டால் மனம் திடுக்கிடும். அது அவனாக இருக்கக் கூடாதா என மனம் ஏங்கும்...

இன்றோடு ஐந்து நாட்களாயிற்று. ஒரு தகவலுமற்று, அவன் பற்றிய எதிர்பார்ப்பின் இடைவெளி அதிகரிக்க அதிகரிக்க அதில் அவளது கண்ணீர் நிரம்பி வழிந்தது.

தனக்காக டவுனிலிருந்து என்ன கொண்டு வருவான்? காதலின் ஏக்கத்தோடு காத்திருந்தவளுக்கு மாலை மறைந்து இருள் சூழ, மனதுக்குள் ஒரு உதறலைக் கொடுத்தது. எங்கு சென்றாலும் ஆறு மணிக்கெல்லாம் வீடு திரும்புவான். மணி இரவு பத்தாகியும் வீடு திரும்பாதது... பதறியபடியே காத்திருந்தாள்... அன்று தொடங்கிய காத்திருப்பு, இன்னும் குந்திய படியே... அவன் மட்டும் வரவேயில்லை.

“பத்மினியக்கா... ராசு அண்ணன்ட சைக்கிள் குளக்கட்டு பள்ளத்துல கிடக்கு... ஆனா அவர காணேயில்ல...”

விடியற் காலையிலேயே சந்தைக்கு போய் வந்த பக்கத்து வளவு முத்து கூறியதை கேட்டு வீடே அலறியது.

“ராசுவைக் கடத்திப் போட்டாங்க” ஊருக்குள் பரவியது. அவனுடைய அம்மா அப்பாவுடன் கூடவே பொலிசுக்கு ஓடினாள். அவர்கள் கைவிரித்து விட இயக்க ஆபிசுக்கு ஓடினாள்.

“நாங்க அப்படி யாரையும் கொண்டு வரயில்ல” துரத்தியடித்தார்கள். மனித உரிமை ஒபிசில் பல பேரோடு பேராய் அவன் பெயரையும் பதிவு செய்து கொண்டார்கள்.

சுடுகாட்டின் நிழல் வீட்டில் பதிவதாய் அவள் கனவுகள் கண்டு திடுக்கிட்டு எழுந்தாள். தூக்கம் துறந்த காத்திருப்பில் அவன் நினைவுகள் சுற்றி சுற்றி வந்தன.

நாய்களின் நீண்ட ஊளை, இரவின் செவிகளை கிழித்து விடுவதாய் இருந்தது. பயமும், துக்கமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைய, வேகமாய் மேலெழும் அவளது மூச்சு ராசு... ராசு... என்று தேம்பியது.

**3**

காற்றின் வேகத்தோடு அலை குதித்தெழும்ப அதற்கு ஈடுகொடுப்பதாய் அவன் உடல் எழுந்து வீழ்ந்தது. அதை பொருட்படுத்தாது அவன் எண்ணமெல்லாம் கட்டிலடங்காது பத்துவை நினைத்து தவியாய் தவித்தபடி அலைந்து திரிந்தது.

அவள் கரங்களை பற்றியபடி குளக்கட்டில் நடந்து திரிந்த நாட்கள், குளத்தோடு ஒண்டி நிற்கும் மதுர மர மறைவில் மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருந்த பொழுதுகள், அவன் மனக்கண் முன் அடுக்கடுக்காய் தோன்றி மறைந்தன. குளக்கட்டில் அமர்ந்தபடி, அவள் வரவுக்காக காத்திருந்த அந்த சுகமான நாட்களின் வனப்பு இன்னும் குன்றாமல் அவன் நினைவுகளில் தலைகாட்டி நின்றன.


பிள்ளையார் கோவில் வளைவில் அவள் புள்ளியாய் தெரியும் போதே மனம் துள்ளி ஒரு குறுகுறுப்பில் நர்த்தனமாடும். காத்திருப்பின் சுகம், அணு அணுவாய் அனுபவித்தவனுக்கு, இன்று அதன் வலி நெஞ்சை அடைத்தது.

குளத்தின் விசாலமான அமைதி அவன் துக்கத்தில் பங்கு கொண்டதாய் இருந்தது. அது அவனுக்கு இதமானதொரு ஆறுதலைக் கொடுத்தது.

குளத்தில் நீந்தித் திரிந்து கொண்டிருந்தவனுக்கு, குளம் ஒரு நாள் படகு விட கற்றுக் கொடுத்தது. அது மாரியின் படகு. இரு பக்கமும் நீரைக் கிழித்து தள்ளி விட்டபடி அது நகரும் லாவகம் அவன் மனதைக் கொள்ளை கொண்டது. அதைப் புரிந்துக் கொண்டதைப் போல், ஒரு நாள் மாரி அவனுக்கு படகு விட கற்றுக் கொடுத்தான். மாரிக்கு மீன்பிடியற்ற நாட்களில் படகு அவன் சொத்தாயிற்று. படகை அவன் ஓட்டியதை விட, அவனுக்கு இலகுவாய் குளம் லாவகமாய் தன்னுள் நகரவிட்டு ஆர்ப்பரித்தது.

அவன் நினைவுகள் படகோடு குளத்தின் வெகு தூரத்திற்கு மெதுமெதுவாய் நகர்ந்தன.

யாருமற்ற ஒரு மாலைப் பொழுதில், பத்துவை படகில் ஏற்றிக்கொண்டு குளத்தின் நடுவுக்குச் சென்றதும், குளத்தை



சாட்சியாய் வைத்து அவளுக்கு கொடுத்த முதல் முத்தமும் மனதின் அலைகளில் முட்டி மோதின.

அன்று அந்த முத்தம் கொடுத்த அதிர்வு இன்றும் அவனை சிலிர்க்க வைத்தது. அந்த சிலிர்ப்பில் பத்துவின் ஏக்கம் உடலை பத்தி எரித்தது.

"தம்பி... நீ குளக்கட்டு வழிய, அந்த பிள்ளயோட சுத்தித் திரியிறது நல்லாவே இருக்கு....

அம்மா ஒரு நாள் கடிந்து கொண்ட போது, அவனுக்குள் ஏற்பட்ட பூரிப்பான பயம் உள்ளுக்குள் சிரித்தபடியே அம்மாவைப் பார்த்தான்.

அம்மாவுக்கு தெரியும், அவனுக்கும், பத்துவுக்கு மிடையிலான காதலை பற்றி... அவளுக்கொன்றும் அதில் எதிர்ப்பில்லை. அப்பா தான் ஆரம்பத்தில் கத்தித் தீர்த்தார். பின் ஏனோ அவன் மனமறிந்து விட்டு விட்டார். பத்துவின் வீட்டாருக்கு, அப்பாவில் நல்ல மரியாதை, அதனால் அவர்களுக்கும் அவனில் விரோதமொன்றுமில்லை.

ஆனாலும், அவனுக்கு வீடுகளுக்கு தெரியாமல் பத்துவுடனான சந்திப்புகளில் உள்ள சுகம் மிகவும் பிடித்தமானதொன்று. கூடவே எப்போதும் குளமும்.

**4**

தூக்கத்தின் விளிம்புகளில் நின்றபடி, அவன் அவளுக்காக காத்திருந்தான். அதன் தாக்கம் மெதுவாய் கண்ணயரும் போது திடுக்கிட்டு எழுந்தாள். அடி வயிற்றிலிருந்து மேலெழும் அந்த வலி அவளை படுக்கையில் புரட்டி எடுத்தது. கண்களின் விளிம்பில் கண்ணீரின் சருகுகளின் சரசரப்பு செவிகளை தாக்கியது. அதில் ராசுவின் குரல் கேட்பதாய் அவள் துடிதுடித்தெழுந்தாள்.

குப்புறப்படுத்தபோது கழுத்தில் கட்டியிருந்த சுரை நெஞ்சை அழுத்தியது. அதை எடுத்து கண்களில் ஒத்தியபடி பிரார்த்தனை செய்தாள்.

அது, அம்மாவால், அவன் மீண்டும் வந்து, அவள் துயர் நீங்க நரசிம்மர் கோயிலுக்கு சென்று பூசை செய்து மந்திரித்துக் கட்டியது. சுரை என்பதை விட அம்மாவின் நம்பிக்கை. அதை மெதுவாய் விரல்களால் தடவி விட்டாள். ஏனோ அவன் வருவான் என்ற நம்பிக்கை அவளுக்குள் சற்று எட்டிப் பார்த்தது.


பத்மினி என்ற தன் பெயரை அவன் மட்டும் தான் பத்து என்று அழைப்பான். அப்படி அவன் அழைப்பதில் ஒரு அழகிருப்பதாய் அவள் உணர்வாள். அதனாலேயே அப்படி அழைப்பதில் அவளுக்கு ஒரு மயக்கம்.

இப்போது கூட இருட்டைக் கிழித்து வரும் மெல்லிய உஷ்ணக் காற்றில் "பத்து... பத்து..."வென அவனது குரல் தன்னை உசுப்பி விட்டுச் செல்வதாய் உணர்ந்தாள்.

யன்னல் கதவுகளை திறந்துவிட்டு இருட்டின் முகத்தை நேருக்கு நேர் உற்று நோக்கினாள். அந்தப் பார்வையில் இருட்டுக்குள்ளிருந்து அவன் வரமாட்டானா? என்ற ஏக்கம் நிறைந்திருந்தது.

வன்னிப் பக்கமாய் இடை விடாது கேட்கும் செல் அடிக்கும் சப்தம் அவளுக்குள் பிடிபடாத ஓர் உணர்வை கொடுத்தது.

"பிள்ள... யுத்தம் வரும் போல கிடக்கு... ஊர் நிலமையும் வர வர மோசமாகுது... ராசுகிட்ட பேசி சீக்கிரமா...



கல்யாணத்த முடிப்பமே..."

அன்று, அம்மா கூறிய வார்த்தைகள் அவளுக்குள் ஏற்படுத்திய பூரிப்பின் உற்சாகம் இருட்டில் தோன்றி மறைந்தது. கல்யாணத்திற்கு தேதி குறித்தாயிற்று. ஊருக்கே அறிவித்திருக்கையில் தான் அவனின் திடீர் மறைவு.

"அவருக்கு புலிகளோட ஏதும் தொடர்பிருந்ததா?..."

பொலிஸ் துருவி கேட்ட போது உள்ளுக்குள் ஏற்பட்ட பீதியும், அவளது அப்பாவியான முகமும் அவளை சுழன்றடிக்கச் செய்தன. ஊரே உச்சு கொட்டி துக்கம் விசாரித்தபடி தன்னை சுற்றி வந்த போது வீட்டினறையின் மூலையில் முடங்கிக் கொண்டாள்.

கடந்த ஐந்து நாட்களாய் அவனை எதிர்பார்த்து குளத்திற்கு ஓடுவாள். முன் போல் அவன் தனக்காக குளக்கட்டில் காத்திருக்கமாட்டானா? என்று ஏங்குவாள். அவனில்லாத குளம் வெறுமையாய் வாடியிருப்பதாய் அவளுக்கு தோன்றியது.

அவர்களது காதல் உறவுக்கு உற்ற தோழனாய் இருந்த இடம். தங்களது ஊடல், கூடல் எல்லாம் முன்னின்று பார்த்த குளம். இன்று அவனில்லாது வெறிச்சோடிக்கிடக்கிறது.

குளத்தைப் போலவே தனக்குள் அவனில்லாத வெறுமையினை சகித்துக் கொள்ள முடியாது. அவளுக்கு நெஞ்சு அடைத்தது. அடைப்பின் தாக்கம் மூச்சு திணற தேம்பி தேம்பி அழுதாள். இருட்டுக்குள்ளிருந்து காற்று மீண்டும் பத்து பத்து என்றது.

**5**

பத்து மீது, தான் கொண்ட காதல் குறித்து, குளத்துடன் கண்ட கனவுகள் எவ்வளவு. எல்லாமே அதன் அலைகளின் பக்கங்களில் பதித்து வைத்திருப்பதைப் போல், அலைகள் புரண்டு புரண்டு அவனுக்கு ஞாபக மூட்டுவதாய் முட்டி மோதி உசுப்பியது. நினைவுகளின் உசுப்பலினால் அலையோடு புரண்டான்.

"பத்து... நாங்க கல்யாணம் கட்டி... அஞ்சு பிள்ளைகளாவது பெத்துகணும்..."

என்று ஒரு நாள் குளக்கட்டில் வைத்து கேட்ட போது அவள் காட்டிய நாணம், அவளுக்கு நினைக்க நினைக்க மனம் ஏக்கத்தின் உச்சத்தை தொட்டது.

மீண்டும் ஊர் யுத்த சூழலுக்குள் புகுவதை உணர்ந்த அப்பா, கண்டிப்பாக சொல்லி விட்டார்.

"தம்பி ராசு... இனி சுற்றித் திரிந்தது போதும்... நல்ல நாளாப் பார்த்து கல்யாணத்த முடிச்சுப் போடுவோம்..."

அப்பாவை எதிர்த்து நிற்க முடியாது. சிறுவயதிலிருந்தே ஒரு நாளும் அப்பாவை எதிர்த்ததில்லை. பள்ளிக்கூடம் நிறுத்தி தோட்ட வேலையில் இறங்கிய போது கூட அப்பா ஒன்றும் கூறவில்லை. அதுபோலவே பத்மினியுடனான் உறவிலும்.

அப்பாவுக்கு தெரியும் அவன் மனம். தள்ளி நின்று தன்னை வழி நடத்திய அப்பாவை ஒரு நாளும் எதிர்த்து நின்றதில்லை.

பத்துவுடனான தன் கல்யாணத்திற்கு, நாள் குறித்து, காட் அடித்து, ஊருக்கே அழைப்பு வைத்து புது மாப்பிள்ளையாய் ஊருக்குள் வலம் வந்த நாளில்தான்... அவன் நினைவு அப்படியே ஒரு இடத்தில் சுற்றியது.

"பத்து நான்... டவுனுக்கு போறன்... உனக்கு என்ன வேணும்..."

ஆசையாய் கேட்ட போது, அவள் எதுவுமே பேசாது காதலாய் கண்களால், என்ன கேட்டிருப்பாள், யோசித்த படியே குளக்கட்டு வழியாக டவுனுக்கு வந்தது. பின் பத்துவுக்காக ஒரு சோடி கொலுசுக்காக கடை கடையாய் ஏறி இறங்கி, அழகான சோடி கொலுசையும் வாங்கிக் கொண்டு, சலூனில் மயிர் வெட்டி வீடு திரும்புகையில் இருட்டிவிட்டது.

குளக்கட்டு வழியாக குளத்தோடு அளாவிய படியே வீடு வந்து கொண்டிருந்த போதுதான் மதுர மர வளைவில் அந்த வான் நின்று கொண்டிருந்தது. அதைக் கண்டு கொள்ளாது விலகி சைக்கிளை நகர்த்திய போது தான் அது நடந்தது.

யார் அவர்கள்?... எதற்கென்று தெரியாது... வானுக்குளிருந்து குதித்த மூவர் தன்னை மூட்டையாய் அமுக்கி வானுக்குள் அள்ளிப் போட்டுக் கொண்டு சென்றது... எல்லாமே கெட்ட கனவாக தோன்றி மறைந்தன.

அன்றிலிருந்து இன்றுவரை பத்துவை பிரிந்த ஏக்கம், நெஞ்சுக்குள் அடைக்க அவர்கள் கேட்ட கேள்விகள் எதுவுமே காதில் விழாது கட்டையாய் கிடந்தது, அடித்த அடிகளின் வலிகளை அவள் நினைவுகளில் புதைத்து விட்டு படுத்துக் கிடந்தது... எல்லாமே அடுக்கடுக்காய் மேலேழுந்தன.

பத்துவை பார்க்கப் போகும் நாளுக்கான எதிர்பார்ப்பில் காத்திருந்தவனுக்கு, அவர்களின் விடுவிப்பு உடலின் ரணமெல்லாம் மாயமாய் மறைந்து விட்டதாக உணர்ந்தான். அவளுக்காக வாங்கிய கொலுசுளை தேடினான். அது உரித்தெடுத்த காற்சட்டை பக்கெட்டில் இருப்பது ஞாபகம் வந்தது. மூலையில் வீசியெறிப்பட்டிருந்த காற்சட்டையை சுருட்டி நெஞ்சோடு அணைத்துக் கொண்டவனை, அவர்கள் இருட்டோடு இருட்டாக வானுக்குள்ளிருந்து குளக்கட்டு பள்ளத்தில் தள்ளி விட்டார்கள். அவன் உருண்ட படியே குளத்தில் வந்து விழுந்தான். அவனது ஆசைக் குளம் அவனை வாரி அனைத்துக் கொண்டது. நீரின் குளிர்ச்சி பட மனம் பத்து பத்து வென அலைந்து திரிந்தது.

**6**

இருட்டுக்குளிருந்து வரும் அவனின் குரல், அவளை விடிய விடிய தூங்க விடாது அலைக் கழித்தது. இடையிடையே இரண்டு மூன்று முறை அம்மா தலை தடவி ஆதரவாய் அணைத்து படுக்கச் செய்து சென்றாள். விடியும் தறுவாயில் அம்மாவும் இருட்டைப் பார்த்தபடி அவளுக்காக விழித்திருந்தாள். அம்மாவை அணைத்தபடி இருட்டைக் காட்டி காட்டி அழுதாள்.

"அம்மா... வெள்ள வான்ல கொண்டு போனா... விட மாட்டாங்கன்று... சொல்றாங்களே" தேம்பினாள்.

"நீ அழாத பிள்ள... ராசு குற்றம் செய்யாதவன்... யாரென்றாலும் அவன விட்டுப் போடுவாங்கள்..."

அம்மா கலங்கியபடியே தேற்றினாள். இருட்டுக்குள்ளிந்து அவன் குரல் கேட்கும் போதெல்லாம் அம்மாவை உசுப்பி

"அம்மா... அவர் வந்திட்டார் போல..."

"அவன் வருவானடி... விடியக்க பாப்பம்... நீ பேசாம படு..."

எவ்வளவு தேற்றினாலும் அம்மாவின் ஆறுதல் அவளைத் தணிக்கவில்லை. உள்ளத்தின் அடி வேர்களை பிடுங்கி எடுப்பதாய் அவள் மனம் அதிர்ந்து அதிர்ந்து அடங்கியது. அவள் கண்களில் வழியும் கண்ணீரைப் போல் இருட்டு வடிந்தபடியே விடிந்தது.

விடியலின் பனி உருகிவழியும் முன்னே அம்மாவின் அலறல் அவளை அவன் நினைவுகளிலிருந்து உசுப்பியது. முற்றத்திற்கு வந்த போது அம்மா, ராசு.. எண்ட மோனே... என்று கத்திக் கொண்டு படலையை தாண்டி குளக்கட்டு பக்கமாக ஓடினாள். கூடவே பக்கத்து வளவு முத்துவும்.

ராசு... ராசு வென மனம் துடிக்க பின்னாலேயே ஓடினாள். குளக்கட்டை அடைந்த போது அங்கு கூட்டம் கூடியிருந்தது. நெஞ்சு துடி துடிக்க கூட்டத்தை நோக்கி ஓடினாள். கூட்டம் குளத்து நீரை பார்த்தபடியே ஒதுங்கியது. கூட்டத்தை விலத்தியபடி குளக்கட்டு பள்ளத்தில் பாய்ந்தாள்.

ரா....................சு

அங்கே தன் ஆசைக் குளத்தில் ராசு பிணமாக மிதந்து கிடந்தான்.


## புரவலர் புத்தகப் பூங்கா மாதம் ஒரு நூல் வெளியீட்டுத் திட்டம்

முன்பொருபோதும் நூல்வெளியிடாத எழுத்தாளர்களின் நூல்கள் இத்திட்டத்தின் மூலம் வெளியிடப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் பயன் பெற விரும்பும் எழுத்தாளர்கள் தமது படைப்பின் இரண்டு பிரதிகளோடு, என்னுரை அணிந்துரை, ஆசிரியர் பற்றிய விபரம், இரண்டு புகைப் படங்கள், முன்னர் நூல்கள் வெளியிடவில்லை என்ற உறுதி மொழி ஆகியவற்றை இணைத்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும். எழுத்தாளர் விரும்பினால் மூவர்ண அட்டைப்படஓவியத்தையும் சேர்த்து அனுப்பலாம்.

எழுத்தாளருக்கு 300 பிரதிகள் இலவசமாக வழங்கப்படுவதோடு, வெளியீட்டு விழா நடத்தி அதில் கிடைக்கும் பணம் முழுவதும் எழுத்தாளருக்கே வழங்கப்படும். இலங்கை எழுத்தாளர்கள் யாபேரும் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறலாம். நூல் ஆக்கத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படாத பிரதிகள் எழுத்தாளருக்குத் திருப்பி அனுப்பப்படும்.

**தொடர்பு முகவரி :** தேர்வுக்குழு, புரவலர் புத்தகப் பூங்கா, இல 25, அவ்வல் சாவியா ரோட் கொழும்பு - 14.

தொ. பேசி : 077 4161616, 078 5318503

# படைப்புகளை செம்மைப்படுத்தும் கலை வளருமா?

**- முருகபூபதி**



பல வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் நடந்த ஒரு இலக்கியக் கூட்டத்தில் உரையாற்றிய இலங்கை கல்வி அமைச்சின் வித்தியாதிபதி லக்ஷ்மண ஐயர் குறிப்பிட்ட சில கருத்துக்களை அச்சமயம் பத்திரிகையாளனாகவும் பணியாற்றிக் கொண்டிருந்தமையால் எனது கவனத்துள் புதைத்துக்கொண்டேன்.

அவர் மிகவும் சுவாரஸ்யமாக அன்று உரையாற்றினார். எனக்கு முன்பே அவுஸ்திரேலியாவுக்கு குடும்பத்துடன் புலம்பெயர்ந்துவிட்ட லக்ஷ்மண ஐயர் இங்கு சிட்னியில் அமரரானார்.

அவரது அன்புத் துணைவியார் இலக்கிய அபிமானி திருமதி. பாலம் லக்ஷ்மணன் அவர்கள் இங்கு நான் சம்பந்தப்பட்ட பல இலக்கியப் பணிகளுக்கும், சமூக செயற்பாடுகளுக்கும் பக்கபலமாக இருந்து வருவதுடன் இலக்கிய சமய சொற்பொழிவுகளும் ஆற்றிவருகின்றார். அவர்களது மகள் திருமதி. மங்களம் ஸ்ரீனிவாசனும் சிறுவர்களுக்கான நாடக இயக்கம் உட்பட பல பொதுப் பணிகளிலும் ஈடுபட்டு வாராந்த தமிழ்ப் பாடசாலையொன்றிலும் பணியாற்றுகின்றார்.

பல வருடங்களுக்கு முன்னர் நான் எனது நினைவுகளுக்குள் புதைத்துவைத்திருந்த லக்ஷ்மண ஐயரின் நினைவுகளை அவரது துணைவியார், மகளுடன் இங்கே பகிர்ந்து கொள்ளும் சந்தர்ப்பங்களில், ஐயர் பத்திரிகையாளர்களுக்கும் இலக்கிய எழுத்தாளர்களுக்கும் தெரிவித்த கருத்துக்களையும் சொல்வதுண்டு.

அவர் அன்று சொன்னவற்றை ஞானம் வாசகர்களுடன் தற்போது பகிர்ந்துகொள்கின்றேன்.

ஒரு விபத்து மரணம் நிகழ்ந்தால் ஸ்தலத்தில் மரணமானார் என்று பத்திரிகைகளில் எழுதுவார்கள்.

லக்ஷ்மண ஐயர் கேட்டார் அது என்ன ஸ்தலம். கோயில் ஸ்தலமா?

அந்த இடத்திலேயே மரணமானார் என்று எழுதுவதுதானே.

தலைமையின் கீழ் நடந்தது என்று எழுதுகிறார்கள். அது என்ன? தலைவர் அமர்ந்திருக்கும் மேசையின் கீழா?

தலைமையில் நடந்தது என்று எழுதலாமே.

அவர்கள் நடாத்தினார்கள் அல்லது நடாத்தப்பட்ட என்று எழுதுகிறார்கள்.

ஏன் அப்படி?

நடத்தினார்கள் – நடத்தப்பட்டது என்று எழுதலாமே. எதற்காக ஒரு 'ா' எழுத்தை அனாவசியமாக செலவிடுகிறார்கள்.

நான் வீரகேசரியில் ஆரம்பத்தில் நீர்கொழும்பு நிருபராகவும் பின்னர் அங்கு ஒரு ஒப்புநோக்காளராகவும்தான் எனது பத்திரிகைப் பணியை ஆரம்பித்தேன். அப்பொழுதுதான் லக்ஷ்மண ஐயரின் கருத்துக்களை உள்வாங்கிக்கொண்டு பணியின்போது திருத்தம் செய்யும் படிகள் – பக்கங்களில் குறிப்பிட்ட மாற்றங்களை ஏற்படுத்த முயன்றேன்.

அப்பொழுது அன்பர் என்று பலராலும் அழைக்கப்பட்ட பொன்னுத்துரை என்பவரும் தற்போது தினக்குரலின் பிரதம ஆசிரியராக பணியாற்றுபவரான எனது அருமை நண்பர் தனபாலசிங்கமும் வீரகேசரியில் ஆசிரிய பீடத்தில் தற்போது இருக்கும் நண்பர் அற்புதானந்தனும் இன்னும் சிலரும் இந்த மாற்றங்களை கவனத்தில் கொண்டு செயற்பட்டனர்.

பத்திரிகையாளர்களுக்கு மாத்திரமல்ல இலக்கியப் படைப்புகளை எழுதும் எழுத்தாளர்களுக்கும் ஒப்புநோக்காளர் பயிற்சி மிகுந்த பயனுள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் மூவரை இங்கு நினைவுபடுத்தலாம். பாலும் பாவையும் என்ற நாவல் உட்பட பல படைப்புகளையும் எழுதி திரைப்பட வசனகர்த்தாவாகவும் (கல்கியின் பார்த்திபன் கனவு திரைப்படமானபொழுது அதற்கு வசனம் எழுதினார்) வாழ்ந்த விந்தன்,

சிலம்புச் செல்வர் என்ற பெயர்பெற்ற ம.பொ.சிவஞானம்,

ஜெயகாந்தன்,

இவர்கள் மூவருமே ஆரம்பத்தில் ஒப்புநோக்காளர்களாகத்தான் தமது தொழில் வாழ்வைத் தொடங்கியவர்கள். அதனாலும் அவர்களது எழுத்துக்கள் பின்னாட்களில் மெருகேறுவதற்கு காரணமாக அமைந்திருக்கக்கூடும் என நம்புகின்றேன்.

வீரகேசரியில் நான் ஒப்புநோக்காளராக பணிபுரிந்த காலத்தில் பிரதம ஆசிரியராக க. சிவப்பிரகாசமும் செய்தி ஆசிரியராக டேவிட் ராஜுவும் அவருக்கு இருமருங்கிலும் பிரதம

துணை ஆசிரியர்களாக நடராஜாவும் கார்மேகமும் அமர்ந்திருந்தார்கள். அத்துடன் அன்னலக்ஷ்மி இராஜதுரை, மூர்த்தி, ராமேஸ்வரன், சொலமன்ராஜ் ஆகிய எழுத்தாளர்களும் பட்லி, ஜமேலா எழுதிய நேசன், மார்ட்டின் விக்கிரமசிங்கவின் மடோல்தூவ நாவலை மொழிபெயர்த்த நித்தியானந்தன் உட்பட சில ஜனரஞ்சக தொடர்களை எழுதியவர்களும் பணியாற்றினார்கள்.

ஆசிரிய பீடத்திலிருந்து வரும் பிரதிகள் அச்சுக் கோர்க்கப்பட்டதும் அதற்கான படிகள் திருத்தத்திற்காக எமது ஒப்புநோக்காளர் அறைக்கு வரும். நாம் திருத்துவோம். அதிலே சொற்பிழை, கருத்துப்பிழை உட்பட சில சமயங்களில் பாரதூரமான தவறுகளும் இருக்கும். பிரதிகளில் நாம் கைவைக்க முடியாது. எனினும், அப்படியே அச்சுக்கு விடவும் முடியாத சூழ்நிலையில் குறிப்பிட்ட கருத்துப்பிழையான அல்லது பெயர்களில் பாரதூரமான தவறுகள் (உ+ம் : நீல் டி அல்விஸா அல்லது ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ்ஸா) இடம்பெறும் பொழுது ஆசிரிய பீடத்துக்கே சென்று சம்பந்தப்பட்டவர்களிடம் பிரதியைக் காண்பித்து திருத்திக்கொண்டு வருவோம்.

இப்பொழுது காலம் மாறிவிட்டது. தற்போது கணினி யுகத்துக்குள் வாழ்கின்றோம். ஒப்புநோக்கி திருத்துவதற்கு பத்திரிகை, இதழ்களில் பேனையின் தேவையிருந்தாலும் கணினியில் எழுதுபவர்களுக்கு அது அவசியமில்லாமல் போய்விட்டது.

கடந்த இரண்டு வருட காலமாக நானும் ஏதும் படிவங்கள் நிரப்புவதற்கும் காசோலைகளுக்கு கையொப்பம் இடுவதற்கும் மாத்திரம்தான் பேனையை கையில் எடுக்க வேண்டியவனாகி விட்டேன்.

இது பலருக்கும் காலம் செய்த கோலம்.

லக்ஷ்மண ஐயருக்கு இதழ்கள் பத்திரிகைகள் புத்தகங்களில் எழுத்து (அச்சுப்) பிழைகள் இருப்பின் மிகவும் கவலைப்படுவார். கோபமும் வரும். பாடசாலைகள், கல்லூரிகள் ஏதும் மலர் வெளியிடும்பொழுது அவரிடம் கட்டுரை அல்லது வாழ்த்துச்செய்தி கேட்டு வருவார்கள். எழுதித் தருவதாக சம்மதம் தெரிவிக்கும் அதேசமயம் எழுத்துப் பிழைகளைத் தவிர்த்துக்கொள்ளுங்கள் என்றும் மறக்காமல் வலியுறுத்துவார்.

ஒரு சமயம் வீரகேசரியில் கல்வி மந்திரிக்கு கலவி மந்திரி என்று வந்துவிட்டது. பதவியில் இருந்தவர் பதியுதீன் முகம்மத். அவரும் முன்னாள் கம்பளை சாகிராக் கல்லூரியின் அதிபர். அமைச்சில் பணியாற்றுகிறார் லக்ஷ்மண ஐயர். விடயம் அவரதும் அமைச்சரினதும் கவனத்துக்குப் போய்விட்டது.

அப்பொழுது அலுவலக நிருபராக பணியாற்றிய நண்பர் சனூன் எப்பொழுது கல்வி அமைச்சுப் பக்கம் வருவார் என்று காத்திருந்தார் கல்வி அமைச்சர். காரணம் சனூன் கம்பளை சாகிராவில் பதியுதீனின் முன்னாள் மாணவர்.

ஒரு நாள் சனூன் அங்கே சென்றபோது வகையாக மாட்டிக்கொண்டார்.

அச்சமயம் அச்சுக்கோர்த்துத்தான் வீரகேசரி அச்சாகியது.

அதனால் கல்வியில் இடம்பெறவேண்டிய குற்று அழிந்து விட்டதனால் வந்த விபரீதம். தேய்ந்துபோன அச்சு எழுத்துக்களை மாற்றச் சொல்லும் என்று அமைச்சர் அறிவுரை வழங்கியதாக நண்பர் ஆசிரிய பீடத்தில் சொல்லிச் சொல்லிச் சிரித்தார்.

இப்படி எத்தனையோ பாரதூரமான எழுத்துப் பிழைகள் செய்திகளிலும் விளம்பரங்களிலும் நேர்ந்துள்ளன. பட்டியலிட்டால் விழுந்து விழுந்து சிரிப்பீர்கள். ஆனால் இங்கே அவற்றைப் பதிவுசெய்ய முடியாது. சில எழுத்துப் பிழைகள் இரட்டை அர்த்தமும் தரும்.

நண்பர் கவிஞர் புதுவை ரத்தினதுரையின் பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும் கவிதை நூலின் வெளியீட்டு விழா இங்கு அவுஸ்திரேலியாவில் நடந்தபோது அந்தப் பெரிய நூலில் எந்தவொரு அச்சுப்பிழையும் இல்லாதிருந்ததை சுட்டிக்காட்டி விதந்து பாராட்டிப் பேசினேன். இத்தனைக்கு அந்த நூல் வன்னியில் அச்சிடப்பட்டது.

அச்சுப்பிழைகள் பற்றி விரிவான ஒரு நூலையே சுவாரஸ்யமாக எழுதும் அளவுக்கு தகவல்கள் உண்டு.

சரி போகட்டும்.

இலக்கியத்தில் விமர்சகர்களுக்கு முக்கியமான இடம் இருக்கிறது. சிறுகதை, நாவல், கவிதை தொடர்பாக விமர்சிக்கும் பெரும்பாலான விமர்சகர்களினால் குறித்த ஆக்க இலக்கியத்துறையில் ஈடுபட முடிவதில்லை. பேராசிரியர் கைலாசபதியும் ஆரம்பத்தில் சிறுகதை எழுதியிருப்பதாக தகவல் உண்டு. முதலில் சிறுகதை, கவிதை, நாவல் எழுதிய தொ.மு.சி. ரகுநாதனும் பின்னாளில் பாரதி வள்ளுவர் ஆய்வுகளிலும் விமர்சனம் மொழிபெயர்ப்புகளிலும்தான் தமது எழுத்தூழியத்தைத் தொடர்ந்தார். பெரும்பாலான ஆக்க இலக்கியவாதிகள் தமது படைப்பு குறித்து விமர்சகர்களின் அங்கீகாரத்துக்காகவே காத்திருக்கிறார்கள். விமர்சகர்களும் ஒரு எழுத்தாளரின் புனைகதைகளையோ கவிதைகளையோ விமர்சிக்க முற்படும்பொழுது ஒரு பட்டியலும் போட்டுக் கொள்வார்கள்.

அந்தப் பட்டியலில் தமது பெயரைக் காணமுடியாத எழுத்தாளர்கள் கவலைப்படுகிறார்கள் அல்லது குறிப்பிட்ட விமர்சகர் தம்மைப் புறக்கணித்துவிட்டதாக குமுறுகிறார்கள்.

ஆனால் Editing தொடர்பாக எவருமே கவலை கொள்வதில்லை.

ஆங்கில இலக்கிய உலகத்தில் பதிப்பகங்கள் Copy Editor என்று ஒருவரைப் பதவியிலிருத்தியிருப்பார்கள். படைப்பாளியின் நாவல் அச்சுக்காக வந்ததும் முதலில் Copy Editor தான் பார்வையிடுவார். எமது தமிழ் இலக்கிய சமுதாயத்தில் இந்த மரபு இல்லை. படைப்பாளியின் எழுத்தில் பத்திரிகை – இதழ் ஆசிரியரோ கை வைத்துவிட்டால் வெகுண்டெழுவார்கள்.

எடிட்டிங் எவ்வளவு முக்கியமானது என்பதைக் கவனத்தில் கொள்வது அரிதாகிவிட்டது எனச் சொல்வதா அல்லது அப்படி ஒரு சமாச்சாரமே இல்லை எனக் கொள்வதா என்பது தெரியவில்லை.

சில தகவல்களைச் சொல்லலாம்.

பல வருடங்களுக்கு முன்னர் பண்டிதர் சி.வி. கந்தையா என்பவர் மட்டக்களப்புத் தமிழகம் என்ற சுமார் நானூறு

பக்கங்களுக்கும் அதிகமான ஒரு பெரிய புத்தகத்தை 1964இல் வெளியிட்டார். அச்சமயம் அதன் தடிமனை பார்த்த எங்கள் எஸ்.பொ. இப்படிக் கிண்டல் செய்தாராம். மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்கு ரயிலில் பயணிக்கும்போது தலைக்கு வைத்துப் படுத்துக்கொள்ளலாம்.

அவர் இப்படிச்சொல்லி சுமார் முப்பத்தைந்து வருடங்களுக்குப் பின்னர் தமது சுயசரிதை நூலான வரலாற்றில் வாழ்தலை 1924 பக்கங்களில் இரண்டு பாகமாக வெளியிட்டார்.

என்ன மாஸ்டர் (எஸ்.பொ. வை நாம் மாஸ்டர் என்றுதான் அழைக்கின்றோம்) அன்று வி.சி. கந்தையாவின் பெரிய புத்தகத்துக்கு அப்படிக் கிண்டல் அடித்தீர்கள். இப்பொழுது நீங்கள் அந்தப் புத்தகத்தை விட பல மடங்கு பெரிய புத்தகத்தை இரண்டு பாகங்களாக தந்திருக்கிறீர்களே? எனக் கேட்டேன்.

அதற்கு அவர், ''கந்தையா தலைக்கு மாத்திரம்தான் தலையணை கொடுத்தார். ஆனால் நான் தலைக்கும் காலுக்கும் வைத்துக்கொள்வதற்குத் தந்திருக்கிறேன்.''

எஸ்.பொ. மற்றவர்களைக் கேலி செய்வதில் மாத்திரமல்ல தன்னைத்தானே கிண்டல் செய்துகொள்வதிலும் பலே கில்லாடி என்பது நெருக்கமானவர்களுக்கு மாத்திரமே தெரியும்.

எனினும் எஸ்.பொ. மிகச்சிறந்த Copy Editor. படைப்புகளை செம்மைப்படுத்துவதில் அவர் கைதேர்ந்தவர். ஒரு காலத்தில் டொமினிக் ஜீவா மற்றும் டானியல் முதலானோரின் படைப்புகளை எஸ்.பொ. செம்மைப்படுத்தியிருக்கிறார். ஆனால் தான்தான் அவர்களுக்கு எழுதிக் கொடுத்ததாகச் சொன்னது வம்புதான். அவர் சிறந்த Copy Editor என்பதற்கு அவரது மேற்பார்வையில் வெளியான அக்கினிக்குஞ்சு மாத இதழ் நல்ல உதாரணம். அவர் மற்றவர்களின் படைப்புகளை செம்மைப்படுத்துவதில் காண்பித்த அக்கறையை தமது படைப்புக்களில் காண்பிக்கவில்லை எனவும் சொல்ல முடியும். (உ+ம் : அவரது மாயினி நாவல்) 1924 பக்கங்களில் வெளியான அவரது சுயசரிதையில் மேலதிகமான நூற்றுக்கணக்கான பக்கங்கள் தமிழச்சி தங்கபாண்டியனால் எடிட் செய்யப்பட்டதாக அறிய முடிந்தது. எடிட் செய்யப்படாது போயிருப்பின் இந்தப் பெரிய நூல் இரண்டாயிரத்துக்கும் மேல் மேலும் சில நூறு பக்கங்களைத் தாண்டியிருக்கக்கூடும்.

நகுலன் பல வருடங்களுக்கு முன்னர் தொகுத்த குருஷேத்திரம் நூலுக்காக சுஜாதாவிடமும் ஒரு சிறுகதை கேட்டிருக்கிறார். அவரும் அனுப்பினார். அதனை எடிட் செய்த நகுலன், முழுமையாக ஒரு சில பக்கங்கள் அநாவசியம் என்று குறிப்பிட்டதுடன் அந்தப் பக்கங்களை சுஜாதாவுக்கு திருப்பியனுப்பினராம். அந்த திருத்தத்தை சுஜாதாவும் ஏற்றுக்கொண்டார்.

அவுஸ்திரேலியாவிலிருந்து எழுதிக்கொண்டிருக்கும் மிருக வைததியர் நடேசனின் இரண்டு நாவல்களையும் சில சிறுகதைகளையும். எஸ்.பொ.வும் நானும் பல சந்தர்ப்பங்களில் செம்மைப்படுத்தியிருக்கின்றோம். இந்த செம்மைப்படுத்தலை நடேசனும் பெரிதும் விரும்பினார். இந்த மரபு தமிழ் இலக்கிய உலகில் உருவாகவேண்டும் என்ற கருத்தையும் கொண்டவர் நடேசன்.

சில படைப்பாளிகளுக்கு அவர்களது படைப்பில் எவரும் கை வைப்பது உவப்பாகவிருப்பதில்லை. ஏதோ அவர்களது எழுத்துச் சுதந்திரத்தில் தலையிட்டுவிடுவதாக ஆர்ப்பரிப்பார்கள்.

தமிழகத்தில் வணிக நோக்குடன் புத்தகங்களை தொழிற்சாலை உற்பத்தியாக அடித்துத்தள்ளும் ஒரு பதிப்பகத்திற்கு இந்த செம்மைப்படுத்தல் தொடர்பான பிரக்ஞையே இல்லை. அவுஸ்திலேலியாவைச் சேர்ந்த ஒரு பெண் எழுத்தாளரின் சிறுகதைத் தொகுப்பில் குளத்தங்கரை அரசமரம் எழுதியது கு.ப.ரா. என்று அச்சிட்டிருந்தது அந்தப்பதிப்பகம்.

அக்கினிக்குஞ்சுவில் வெளியான எனது மழை சிறுகதையில் முதல் இரண்டு பக்கங்களை எஸ்.பொ. நீக்கியிருந்தார். அவரது எடிட்டிங் மிகவும் பொருத்தமாக இருந்தது. ஆவூரான் சந்திரனின் ஆத்மாவைத் தொலைத்தவர்கள் சிறுகதைத் தொகுதியை எமது அவுஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச்சங்கம் வெளியிட்ட பொழுது அதனை பதிப்பித்த ஞானம் ஆசிரியர் டொக்டர் தி. ஞானசேகரன் நன்றாக செம்மைப்படுத்தியதை அறிய முடிந்தது.

ஒரு சமயம் மாத்தளை சோமு வீரகேசரிக்கு ஒரு சிறுகதை எழுதியனுப்பியிருந்தார். அதன் முடிவு வாரவெளியீட்டு ஆசிரியராகவிருந்த பொன். ராஜகோபாலுக்கு திருப்தியளிக்க வில்லை. ஆனால் அச்சிறுகதை பிரசுரத்திற்குத் தரமாக இருந்தது. ராஜகோபால் சிறுகதைகளை மிகவும் அவதானமாகத் தேர்வு செய்பவர். மாத்தளை சோமுவின் சிறுகதையின் இறுதிப் பகுதியை மாற்ற விரும்பினார். எப்படி மாற்றுவது என்று யோசித்துக் கொண்டிருந்தபோது அலுவலகத்துக்கு நண்பர் மு. கனகராஜன் வந்தார். அவரிடம் சிறுகதையைக் கொடுத்து மாற்றம் செய்து பிரசுரித்தார்.

அதனால் மாத்தளை சோமு மிகவும் வருந்தினார்.

இலக்கியப் படைப்பை செம்மைப்படுத்தும்பொழுது குறிப்பிட்ட படைப்பாளியையும் பக்கத்தில் வைத்துக்கொண்டு வேலையைத் தொடங்கலாமா? இதுபற்றியும் நாம் சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்கிப் பார்க்கலாமே.

ஒரு படைப்பை செம்மைப்படுத்துபவருக்கு இலக்கியப் பிரக்ஞையும் அவசியம். அது இல்லையென்றால் விபரீதமான வரவை நாம் தரிசிக்கவும் நேரலாம்.

ஜெயமோகனின் பல படைப்புகளை அவரது மனைவி அருண்மொழிநங்கை எடிட்செய்து செம்மைப்படுத்தியிருக்கிறார். அவர் மொழிபெயர்ப்புகளிலும் ஈடுபட்டிருக்கிறார்.

எமது இலக்கிய உலகத்தில் விமர்சனத்தில் ஈடுபடுபவர்களும் ஆக்க இலக்கியவாதிகளும் இந்த Copy Editing தொடர்பாக பேசுவதும் குறைவு. விவாதிப்பதும் எழுதுவதும் அரிது.

இது சம்பந்தமான பயிற்சிப் பட்டறைகளை நடத்திப் பார்க்கலாம். அத்துடன் தமிழ்த் தேசிய நாளேடுகளில் பணியாற்றும் பத்திரிகையாளர்கள், நிருபர்கள் மற்றும் ஆக்க இலக்கிய எழுத்தாளர்கள் மத்தியில் ஆரோக்கியமான கருத்துப் பரிவர்த்தனைகளையும் சந்திப்புகளையும் காலத்துக்குக் காலம் நடத்தலாம்.

நாம் கற்றது கைமண்ணளவுதானே.

# முதலாவது அத்தியாயம் நிறைவு பெறுகிறது

கே.ஆர். டேவிட்

இந்த முதியோர் இல்லத்தின் இரண்டாவது மாடியிலுள்ள ஏழாவது இலக்க அறையிலேதான் பிரேமகாந்தன் தங்கியுள்ளார். பிரேமகாந்தனும் முதியவர்தான். ஆனால், தஞ்சமின்றி இங்கு தங்கவந்தவரல்ல.

பிரேமகாந்தன் ஓர் ஆய்வாளராகவே இங்கு வந்துள்ளார். 'ஆதரவற்ற முதியவர்களும், அவர்களது மனநிலைகளும்' இதுதான் பிரேமகாந்தன் தனது ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட தலைப்பு. பார்வையாளனாக நின்று விசாரணைகள் மூலமும், கிடைக்கின்ற தரவுகள் மூலமும் தனது ஆய்வை நிறைவு செய்து கொள்ளப் பிரேமகாந்தன் விரும்பவில்லை. அங்கு வாழும் முதியவர்களோடு பங்காளனாக நின்று யதார்த்த பூர்வமாகத் தனது ஆய்வை மேற்கொள்ள வேண்டுமென்பதற் காகவே இங்கு வந்து தங்கியுள்ளார்.

பிரேமகாந்தனும் பல்கலைக்கழக மாணவனாக இருந்து பல ஆய்வுகளை மேற்கொண்டு பட்டம் பெற்று பெரும் பதவி வகித்து ஓய்வுபெற்றவர்.

பிரேமகாந்தன் இங்கு வந்து மூன்று கிழமைகளாகின்றன. இங்குள்ள ஒரு முதியவர் செலுத்துகின்ற தொகையை பிரேமகாந்தனும் செலுத்தவேண்டும் என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே பிரேமகாந்தன் இங்கு அனுமதிக்கப்பட்டார். பிரேமகாந்தன் இங்கு வந்து தங்கியுள்ளதன் நோக்கத்தை இம்முதியோர் இல்லத்தின் நிர்வாக இயக்குநரான வரதராஜ மூர்த்தி மட்டுமே தெரிந்து வைத்திருந்தார்.

ஆய்வு முயற்சிக்காகவே தான் வந்து தங்கியுள்ளதை இங்குள்ள முதியவர்கள் தெரிந்துகொண்டால் அவர்களது வாக்குமூலங்களில் போலித்தன்மை கலக்க வாய்ப்புண்டு என்பதை பிரேமகாந்தன் உணர்ந்திருந்தார்.

முதியவர்களின் வாழ்வியலை ஒரு ஆய்வுக்குட்படுத்தி அதைப் பதிவாக்க வேண்டுமென்பதில் பிரேமகாந்தனைப் போல வரதராஜமூர்த்தியும் பெரும் அக்கறையுள்ளவராகவே இருந்தார்.

வரதராஜமூர்த்தியும் ஒரு பட்டதாரி. அரசாங்கத்தில் பொறுப்பான பதவி வகித்து ஓய்வுபெற்றவர். கடந்த பத்து வருடங்களாக இந்த முதியோர் இல்லத்தை நிர்வகித்து வருகிறார்.

இம்முதியோர் இல்லம் இரண்டு மாடிகளைக் கொண்டது. அறைகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு அறையிலும் ஐந்து முதியவர்கள் தங்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

பிரேமகாந்தனின் அறையில் அவரோடு யோகநாதன், உதயகுமார், சத்தியநாதன், தர்மகீர்த்தி ஆகிய நால்வரும் தங்கியிருந்தனர். ஐந்துபேரும் மிகவும் ஐக்கியமாகவே இருந்தனர்.

பிரேமகாந்தன் ...

யதார்த்தபூர்வமான பகிடிகளை விளங்கிக் கொள்வதோடு, யதார்த்தபூர்வமான பகிடிகள் விடுவதிலும் வல்லவர்.

குண்டூசிக்கூர்மைபோன்றகண்கள்ஒட்டுத்தாழ்போன்றபார்வை அலுவலகச் சட்டதிட்டங்களில் கைதேர்ந்தவர். சட்டத்தையும் கூறி பக்கத்தையும் கூறுவார். கண்டிப்பான அதிகாரியெனப் பெயர் எடுத்தவர்.

"உனது கன்னத்தில் ஒருவன் அடித்தால் அவனுக்கு உனது மறுகன்னத்தையும் திருப்பிக்காட்டு" என்ற யேசுநாதரின் போக்கிலுள்ள பிடிமானம் அவருக்கு...

இன்றைய அதிகாரமிக்க சமூகச் சுழிக்குள்... துணிச்சலாக எதிர்நீச்சல் போட்டு... 'பவுல்' அடித்தவர்கள் வெட்கப்படும்படியாக பல 'கோல்களை' இறக்கிக் காட்டிய வல்லமை மிக்கவர்...

பிரேமகாந்தனின் இந்த ஆய்வுமுயற்சிக்கு வரதராஜ மூர்த்தி பெருந்துணையாக நின்று ஆலோசனைகளையும் தரவுகளையும் வழங்கத் தயாராக இருந்தார்.

நீண்டுபோயிருக்கும் காலி வீதியில் கடற்கரைப் பக்கமாகச் செல்லும் குறுக்கு றோட்டின் எல்லையை அண்மித்து இந்த முதியோர் இல்லம் அமைந்துள்ளது. கடற்காற்று, ஓங்கி வளர்ந்து நிற்கும் மலைவேம்புகளின் நிழலிலுள்ள குளிர்மை, இனம் பிரிக்கப்பட்டு ஒழுங்காக நாட்டப்பட்டிருக்கும் குரோட்டன் செடிகளின் அழகு தினசரி கத்திகரிப்பதால் ஏற்பட்டிருக்கும் புனிதம். கட்டுப்பாடான நிர்வாகம்...

அந்த முதியோர் இல்லத்தினுள் காலடி வைக்கும்போது எங்களை அறியாமலேயே எங்களுக்குள் ஏதோ ஒருவித மதிப்புணர்வு ஜனனிக்கும்.

ஏனென்றால் முதுமையும் அதைத் தொடர்ந்து வருகின்ற மரணமும்... முதுமைக்கும் மரணத்துக்கும் இடையேயுள்ள ஒரு தங்குமடந்தான் இந்த 'முதியோர் இல்லம்' என்பதும் சகலராலும் உணரப்பட்டதொரு உண்மையாகும்!

ஒவ்வொரு மனிதனுமே தனது முதுமைக்காலம் பற்றிக் கற்பனை செய்கின்றான். தான் பிறந்த வீடு... தனது குடும்ப உறவுகள்... பிள்ளைகள்... பேரப்பிள்ளைகள்... பூட்டப்பிள்ளைகள்... அவர்களின் பராமரிப்பு... ஆதரவு... அரவணைப்பு...

அவனது கற்பனைகள் கனவாகும்போது அவன்... முதியோர் இல்லம் என்ற தங்குமடத்தின் கதவுகளைத் திறக்கின்றான்! மன அவலத்தோடு மரணத்தின் பிடிக்குள் சிக்குகிறான்.

இன்னும் சிலர்... சிலரல்ல.. பலர் என்றுதான் கூறவேண்டும். வீதியோரங்களே தங்குமடங்களாகி... தசை

உலர்ந்து... எலும்புந்தோலுமான தங்களின் நடுங்குகின்ற கைகளால் பிச்சை கேட்கின்றனர்... இவர்களின் மரணங்கள்... இவர்களின் இரைப்பையின் வெறுமையால் ஏற்படுகின்ற குடல் வலிப்பு என்ற வடிவில் அவர்களை அறியாமலேயே நிகழ்ந்து விடுகின்றது...!

இப்படிப் பலதரப்பட்ட முதியவர்களின் மனப் பொக்கணைகளுக்குள் நிறைந்திருக்கும் அரூபிகளான மன உணர்வுகளைக் கண்டறிவதென்பது இலகுவானதல்ல...

கண்டறிந்து பதிவாக்கமுடியும் என்ற தன்னம்பிக்கை யோடுதான் பிரேமகாந்தன் வந்திருக்கிறார்.

தனது ஆய்வு முயற்சி...

தாமரைக்குளத்தில் சுளியோடி தாமரைக்கிழங்கு பிடுங்கும் முயற்சியல்ல... ஆழ்கடலில் குதித்து முத்துக்குளிக்கும் முயற்சி என்பதும் பிரேமகாந்தனுக்கு நன்கு தெரியும்...

இந்த முதியோர் இல்லத்தின் நிர்வாக இயக்குநரான வரதராஜமூர்த்தி மிகவும் அமைதியானவர் மட்டுமல்ல மிகவும் ஆழமான சிந்தனையுள்ளவர். 'பிறகு பார்க்கலாம்' என்று எந்த வேலையையும் அவர் தள்ளிவைப்பதில்லை.

அரச அலுவலகங்களில் மேசைகள் மீது கோவைகள் குவிந்து கிடப்பதுபோல்.. அவரது மேசையில் என்றுமே கோவைகள் குவிந்து கிடப்பதில்லை. பகலில் அனைத்து வேலைகளையும் முடித்துவிடுவார்.

பிற்பகல் ஆறு மணிக்குப் பிறகு வரதராஜமூர்த்தி தனது அலுவலகத்தில் ஓய்வாகவே இருப்பார். இப்போதெல்லாம் வரதராஜமூர்த்தியுடன் பிரேமகாந்தன் சேர்ந்து கொள்வார்.

இப்போது ஆறு மணியிருக்கும். பிரேமகாந்தனும், வரதராஜமூர்த்தியும் சேர்ந்திருக்கின்றனர்.

முதியோர் இல்லத்திற்கு முன்னால் ஏறத்தாழ மூன்று பரப்பு விஸ்தீரணமுள்ள நீள்சதுரப் புற்றரை அமைந்துள்ளது. இந்தப் புற்றரையின் நடுவில் வட்ட வடிவிலான சீமெந்துக் கட்டிடம் ஒன்றும் அமைந்துள்ளது. மிகவும் திட்டமிடப்பட்டு கட்டப்பட்டுள்ள இந்த முதியோர் இல்லத்திற்கு முன்னால் இந்த வட்டவடிவிலான கட்டிடமும் ஏதோவொரு நோக்கத்துடனேயே கட்டப்பட்டிருக்க வேண்டும்!

இந்தக் கட்டிடத்தின் மீதுதான் வரதராஜமூர்த்தியும், பிரேமகாந்தனும் கட்டிடத்தின் விளிம்பில் கால்களைத் தொங்கப் போட்டபடி அமர்ந்திருக்கின்றனர்.

தலையைச் சிறிது இடப்பக்கம் திருப்பி மதிலுக்கு மேலால் கடற்கரையைப் பார்த்தால்... தாழை மரங்களின் மறைப்பில் இளசுகளின் 'வம்பு கலந்த' அன்புப் பரிமாற்றங்கள் கண்ணில்படும். சரியென்றோ – பிழையென்றோ விபரிக்க முடியாததொரு உணர்வு மனதில் ஏற்படும்.

'கல்லெறிதூர' இடைவெளியில் முதுமையின் அவலங்களும்... இளமையின் கோலங்களும்...

''மூர்த்தி ஐயா... என்ன கடுமையாக யோசிக்கிறியள்...'' வரதராஜமூர்த்தியை பிரேமகாந்தன் 'மூர்த்தி ஐயா' வென்று கௌரவமாகத்தான் அழைப்பார். பதிலுக்கு பிரேமகாந்தனை மூர்த்தி ஐயா 'மிஸ்டர் காந்தன்' என்று கௌரவப்படுத்திக் கொள்வார்.

''இருபத்திநாலு மணிநேரமும்... முதியவர்களோடை பழகி... அவர்களைப் பற்றியே சிந்திச்சு... மனம் மரத்துப் போச்சு...'' மூர்த்தி ஐயா கடற்கரையைப் பார்த்தபடியே கூறுகின்றார்.

''இந்த முதுமைக் காலத்தைப்பற்றி உங்கள் மனதிலுள்ள அபிப்பிராயத்தைச் சொல்லமுடியுமா...'' பிரேமகாந்தன் தூண்டல் ஊசியில் நாக்கிளிப்புழுவைக் குத்தி எறிகின்றார்.

சில விநாடிகள் மௌனமாக இருந்த வரதராஜமூர்த்தி கண்ணாடியைக் கழற்றி அதன் கண்ணாடிகளைக் கைக்குட்டையால் துடைத்து... கண்ணாடியை மீண்டும் போட்டுக்கொண்டு பேச ஆரம்பிக்கிறார். அவரது பார்வைக் கோடுகள் கடற்கரையிலிருந்து விடுபட்டு வான்பரப்பில் நீண்டு போயிருக்கின்றன.

''முதுமையும்... மரணமும்...'' மனிதர்களுக்கு மட்டுமல்ல... இந்த மண்ணிலுள்ள சகல ஜீவராசிகளுக்குமுள்ள பொதுவான நியமம்....

தாய்க்குரங்கு... தன் குட்டிக்குரங்கைத் தன் மார்போடு அணைத்தபடி கிளைகளில் தாவுவதைப் பார்த்திருக்கிறோம். அதேவேளை, வயோதிபக் குரங்கொன்றை அதன் பிள்ளைக் குரங்கு அணைத்து வைத்திருந்ததைப் பார்த்ததாக இதுவரை யாரும் கூறவில்லை.

கடற்காற்றில் அல்லற்பட்டு நெற்றிப்பரப்பை மறைக்கும் கம்பி போன்ற தனது தலைமயிரை கைவிரல்களால் கோதி சரிசெய்தவாறு வரதராஜமூர்த்தியின் பேச்சுக்களை அவதானிக்கின்றார் பிரேமகாந்தன்.

வரதராஜமூர்த்தி தொடர்கிறார் ...

''அதேபோல... குஞ்சுக்குருவிக்குத் தாய்க்குருவி உணவூட்டுவதை பார்த்திருக்கிறோம். அதேவேளை, வயோதிபக் குருவிக்கு பிள்ளைக்குருவி உணவூட்டியதைப் பார்த்ததாக இதுவரை எந்தப் பதிவுகளும் இல்லை.''

வரதராஜமூர்த்தியின் நீர்மட்டம் வைத்தது போன்ற நிதானமான பேச்சில் அதிர்ந்துபோன பிரேமகாந்தன் மௌனமாக இருக்கின்றார்.

இவர்கள் இருக்கும் இடத்திலிருந்து சிறிது தூரத்தில் மதிற்தரையோடு நின்ற செவ்விளனிமரத்தில் பழுத்திருந்த ஓலையொன்று நிலத்தில் குத்தி விழுந்து முறிகின்றது.

வரதராஜமூர்த்தி தொடர்கின்றார்...

''துவரம்பருப்பிடித்து மாவாக்கி சீனியும் கலந்து களிக்கிண்டி குழந்தையை இடுப்பில் வைத்து, பாட்டுப்பாடி, கதைகள் கூறி குழந்தைக்குக் களியை ஊட்டுகின்ற பெற்றோரை நிறையவே பார்த்திருக்கின்றோம். எனக்கும் உங்களுக்கும் கூட அந்த அனுபவங்கள் இருக்கலாம்.

அதேவேளை, பெற்று வளர்த்த பெற்றோருக்கு அவர்களது முதுமைக்காலத்தில் அவர்களை அரவணைத்து உணவூட்டிய ஒரு பிள்ளையைப் பார்த்திருக்கிறோமா. மிகவும் அரிதாகத்தான் காணக்கூடியதாகவுள்ளது. மொத்தத்தில், முதுமை என்பது வெறுப்புக்குரியதா என்றொரு கேள்வி பிறக்கின்றது.'' தனது பேச்சை நிறுத்திய வரதராஜமூர்த்தி தனது கண்ணாடியை மீண்டும் கழற்றி தனது வலதுகையின் விரல்களால் கண் குளிகள் இரண்டையும் தடவுகிறார்.

வரதராஜமூர்த்தி பேச்சைத் தொடர்கிறார்...

''முதுமையும் மரணமும் வெல்ல முடியாத நியதிகள். இளமைக்கும் முதுமைக்கும் இடைப்பட்ட காலத்தில் ஒரு மனிதன் தனக்காகவும் தனது குடும்பத்தின் உறவுகளுக்காகவும் தினசரி போராடுகிறான். அந்தப் போராட்டத்தினுள் அவனை யறியாமலேயே சில கற்பனைகள் உருவாகுகின்றன.

தனது குடும்பம் என்ற விளைநிலத்தில் தன்னால் விளைவிக்கப்பட்ட குடும்ப உறவுகள் தனது வயோதிபக்

காலத்தில் தன்னை அரவணைக்குமென நம்புகிறான். இந்த நம்பிக்கை... 'பிரதியுபகாரம்' என்ற பொதுவான நன்றிப் பண்பிலிருந்து வேறுபட்டு ஆத்மார்த்த நம்பிக்கையாகவே வளர்கின்றது.

'ஆத்மார்த்த நம்பிக்கை' என்பது ஒரு மனிதன் பெறுகின்ற அனுபவங்களுக்கூடாக... அவனது மனத்தளத்தில் விதைக்கப்பட்டு அவனது ஆத்மாவில் படியும் மன எண்ணக் கருக்களின் நிரந்தரப் படிமங்களாகும்.

அந்த ஆத்மார்த்த நம்பிக்கைகள் தோல்விகளை அணுகும்போது அந்த ஆத்மார்த்த நம்பிக்கைகளை ஜீரணிக்க முடியாமல் ஆத்மா அவலப்படுகின்றது. முதுமைக்காலம் திசை தெரியாமல் தத்தளித்து ஏதோவொரு முடிவை நாடுகின்றது. அந்த முடிவுகளில் ஒன்றுதான் இந்த முதியோர் இல்லம். அதிலும் பொருளாதார வசதியுள்ளவர்களால்தான் இதுபோன்ற வசதியான முதியோர் இல்லங்களில் அனுமதி பெறமுடியும்.

குடும்ப உறவுகளின் அரவணைப்புக் கிடைக்காத – பொருளாதார வசதியற்ற வயோதிபர்களைத்தான் வீதியோரங்களில் தினசரி காண்கிறோம்.

வரதராஜமூர்த்தி இதுவரையில் முதியோர் இல்லத்தில் தான் கண்ட அனுபவங்களைத் தொகுத்து அர்த்தபுஷ்டியான நீண்டதொரு உரையைக் கூறி முடிக்கின்றார். பிரேமகாந்தன் மனம் சகலதையும் பதிவு செய்து கொள்கின்றது.

சிந்தனைச் சுளிக்குள் சிக்கிக்கொண்ட பிரேமகாந்தன் அன்றிரவு தனது அறைக்கு வந்துசேர பத்துமணிக்கு மேலாகி விட்டது. இவரது கட்டிலுக்குப் பக்கத்துக் கட்டில்காரனான யோகநாதனை விட ஏனைய மூவரும் தூங்கிவிட்டனர்.

யோகநாதன் ஒரு புகைப்படமொன்றைக் கண்வெட்டாமல் பார்த்தபடி கட்டிலில் அமர்ந்திருந்தார்.

"என்ன யோகர் ஐயா... ஆற்றை போட்டோ" பிரேமகாந்தன் யோகநாதனை 'யோகர் ஐயா' என்றே அழைப்பார்.

"என்ரை குடும்பப்படம்"

"நானும் பார்க்கலாமா?"

"பாருங்கோ..." யோகநாதன் இப்படிக் கூறியதும் பிரேமகாந்தன் யோகநாதனுக்கருகே வந்து குனிந்து புகைப்படத்தைப் பார்க்கிறார்.

"இவள்தான் என்ரை பெண்டாட்டி... அவள் உயிரோடை இருந்திருந்தால் இண்டைக்கு எனக்கு இந்த முதியோர் இல்ல வாழ்க்கை ஏற்பட்டிருக்காது. அடுத்தது நான்... எங்களுக்கு நடுவிலை நிற்பவன்தான் என்ரை மகன் சாகித்தியன்.

என்ரை பெண்டாட்டி இந்த உலகத்திலை இல்லை... என்ரை மகன் சாகித்தியன் இந்த மண்ணிலை இல்லை... நான் பிறந்த மண்ணிலை இல்லை" யோகநாதன் பெருமூச்சுடன் கூறுகின்றார்.

"யோகர் ஐயா... கடவுள் நல்லவர்களைத்தான் சோதிப்பார். ஆனால், கைவிடமாட்டார். கவலைப்படாதையுங்கோ... சாகித்தியன் கட்டாயம் வருவான், உங்களோடை இருப்பான்" பிரேமகாந்தன் யோகநாதனுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறுகின்றார்.

"மகன் வாறதும் என்னோடை இருப்பான் எண்டெதெல்லாம் கோழிக்குஞ்சுக்குப் பால் குடுத்த கதையெண்டு எனக்குத் தெரியும். எனக்கு என்ரை குடும்பம் எவ்வளவு முக்கியமோ... அதுபோலை சாகித்தியனுக்கு அவன்ரை குடுமபம் முக்கியம்.. அவனை வந்து என்னோடை இருக்கச் சொல்லி நான் கேட்கப் போறதுமில்லை... நான் கேட்டாலும் அவன் வரப்போறதும் இல்லை. நான் வாற தை மாதத்தோடை யாழ்ப்பாணம் போறதெண்டு முடிவு செய்திட்டன்" யோகநாதன் திட்டவட்டமாகக் கூறுகிறார்.

"என்ன யோகர் ஐயா சொல்லுறியள். யாழ்ப்பாணம் போகலாம். அங்கை போய் தனிய என்ன செய்வியள். வயோதிப காலத்திலை துணை இல்லாமல் வாழமுடியுமா? இந்த முதியோர் இல்லத்திலை உங்களுக்கு என்ன குறையிருக்கு. நேரத்துக்குச் சாப்பிட்டிட்டு நிம்மதியாய் தூங்கவேண்டியது தானே"

"நீங்கள் சொல்றது சரி. இஞ்சை எனக்கு எல்லா வசதியளும் இருக்கு. ஆனால், நிம்மதி இல்லை.



யாழ்ப்பாணத்தில் எனக்கு எந்த ஆதரவும் இருக்காது. ஆனால், நிம்மதி இருக்கும். நான் ஒருநாள் எண்டாலும் என்ரை தாய் மண்ணிலை நிம்மதியாய் இருந்திட்டு சாகிறதுதான் எனக்கு விருப்பம்'' யோகநாதனின் வார்த்தைகள் பிரேமகாந்தனின் செவிப்பறைகளில் மோதித் தெறிக்கின்றன. யோகநாதன் இப்படிப் பேசுவாரென பிரேமகாந்தன் எதிர்பார்க்கவில்லை. ஆச்சரியத்தோடு யோகநாதனை பிரேமகாந்தன் பார்க்கிறார்.

''என்ன பாக்கிறியள். படுக்கிறதுக்குக் கட்டிலும், கடற்காற்றும், நேரத்துக்குச் சாப்பாடும் மனதுக்குத் திருப்தியாக இருக்கும். எனக்குள்ளை ஒரு ஆத்மா இருக்கு. அது எந்த நேரமும் துடிச்சுக்கொண்டிருக்கு. நான் எப்ப என்ரை தாய் மண்ணிலை காலடி வைக்கிறேனோ அண்டைக்குத்தான் என்ரை ஆத்மாவின்ரை துடிப்படங்கும்.

பிரேமகாந்தனால் பேசமுடியவில்லை மௌனமாக நிற்கிறார். தசை வற்றி, எலும்புந்தோலுமாகிவிட்ட யோகநாதனின் கைகள் நடுங்குகின்றன. குரல்வளையின் அடியிலுள்ள சிறு குழியை மூடியிருக்கும் வௌவால் செட்டை போன்ற தோல். அதுவும் துடிக்கின்றது.

''நான் வாழ்ந்த வீட்டைப்பற்றி உங்களுக்குத் தெரியுமா? அது என்ரை பூட்டன் கட்டின வீடு. என்ரை பாட்டன் பிறந்தது, என்ரை தகப்பனார் பிறந்தது, நான் பிறந்தது, என்ரை மகன் பிறந்தது எல்லாமே அந்த வீட்டிலதான்.

அந்த வீடு எங்கடை பரம்பரையின்ரை 'கருப்பை' அந்த மண் எங்கடை 'தாய் மண்'.

இதெல்லாம் என்னத்துக்கு... நாங்களெல்லாம் 'அ' எழுதப் பழகினதும் அந்தத் தாய் மண்ணிலைதான். அந்த மண்ணை மறக்கமுடியுமா?''

கழுத்து வெட்டப்பட்ட ஆட்டின் குரல்வளை நரம்பிலிருந்து விட்டுவிட்டு இரத்தம் கொப்பளிப்பதுபோல் யோகநாதனின் வாயிலிருந்து வார்த்தைகள் கொப்பளிக்கின்றன. பிரேமகாந்தன் வாயடைத்து நிற்கிறார்.

''ஐயா பிரேமகாந்தன், மனிசனுக்கு இரண்டு வகையான திருப்திகள் இருக்கு. ஒன்று மனத் திருப்தி, இன்னொன்று ஆத்ம திருப்தி.

இந்தக் கட்டிலும், சாப்பாடும், கடற்காற்றும் 'மனத் திருப்தி'யைத்தான் ஏற்படுத்துமே தவிர ஆத்ம திருப்தியை ஏற்படுத்தாது. என்ரை தாய் மண்ணிலை என்ரை வீட்டிலை அந்தக் கிணத்திலை தண்ணி அள்ளி சளசளவெண்டு குளிச்சிட்டு இரண்டு முறடு தண்ணியும் குடிச்சிட்டு ஒரு நாலுமுளத்தை விரிச்சு என்ரை வீட்டு விறாந்தையிலை படுக்கிறதிலைதான் எனக்கு 'ஆத்ம திருப்தி' இருக்கு.

நான் என்ரை தாய் மண்ணிலைதான் சாகவேணும். நான் என்ரை தாய்மண்ணிலைதான் எரிஞ்சு சாம்பலாக வேணும்'' யோகநாதனின் குரல்வளை வறண்டு சொற்கள் வறுக்கப்பட்டு வார்த்தைகள் தட்டுத்தடுமாறி வெளிவருகின்றன. யோகநாதனால் தொடர்ந்து பேசமுடியவில்லை. கண்களைத் துடைத்தபடி படுத்துக் கொள்கிறார்.

மின்சார பல்புகளை அணைத்துவிட்டு பிரேமகாந்தனும் படுக்கின்றார்.

''நான் என்ரை தாய் மண்ணிலைதான் சாகவேணும். நான் என்ரை தாய் மண்ணிலைதான் எரிஞ்சு சாம்பலாக வேணும்'' யோகநாதனின் பேச்சுக்கள் பிரேமகாந்தனின் இதயத்தில் மட்டுமல்ல அந்த அறை முழுவதும் எதிரொலிக்கிறது.

யோகநாதன் யாழ்ப்பாணத்தில் சாவகச்சேரிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர். ஒரு விஞ்ஞான ஆசிரியர். விஞ்ஞான பாடங்களில் குறிப்பாக பௌதீகவியல் பாடத்தில் துறைபோனவர். சாவகச்சேரிப் பிரதேசத்தில் 'பிஸிக்ஸ் யோகர்' என்று பேசப்படுமளவிற்குப் பிரபலமானவர்.

யோகநாதனின் ஒரே வாரிசான சாகித்தியன் ஏ.எல் வகுப்பு படித்துக்கொண்டிருந்தான். யோகநாதன் தன்னிடமிருந்த விஞ்ஞான பாடத் திறமைகளை சாகித்தியனுக்கு சிறுகச் சிறுக ஊட்டினார். சாகித்தியன் ஏ.எல் பரீட்சையில் கணிதப் பிரிவில் மாவட்டத்தில் முதல்தர மாணவனாகச் சித்தியடைந்தான். யோகநாதன் பூரித்துப் போனார்.

தனது ஒரேமகன் கணிதப் பகுதியில் துறைபோக வேண்டும் என்ற தனது ஆவலில் யோகநாதன் சாகித்தியனை மேற்படிப்புக்காக லண்டனுக்கு அனுப்பினார்.

சாகித்தியன் படித்தான், பட்டம் பெற்றான். லண்டனிலேயே அவனுக்குப் பதவியும் கிடைத்தது. ஒரு வெள்ளைக்காரப் பெண்ணும் கிடைத்தாள். வனிதை என்ற ஒரு பெண்குழந்தைக்குத் தந்தையானான். இரவல் தாய் நாட்டில் அவனது வாழ்க்கை வேர் படர்ந்தது.

லண்டனுக்குச் சென்ற சாகித்தியன் வந்து போய் பத்து வருடங்களின்பின் அவனது தாய் காலமானபோது வந்திருந்தான். அப்போது யோகநாதனைத் தன்னோடு லண்டனுக்கு வரும்படி வற்புறுத்தினான். யோகநாதன் லண்டனுக்குச் செல்ல மறுத்துவிட்டார்.

''என்ரை தாய்மண்ணை விட்டிட்டு என்னால் வரமுடியாது'' என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

அதன்பின்பு மிகவும் கஷ்டப்பட்டு யோகநாதனை அழைத்து வந்து இந்த முதியோர் இல்லத்தில் சேர்த்துவிட்டு சாகித்தியன் லண்டனுக்குச் சென்றுவிட்டான்.

ஏழு வருடங்கள் உருண்டோடிவிட்டன. யோகநாதன் முதியோர் இல்லத்திலேயே தங்கியிருக்கின்றார்.

யோகநாதனிலிருந்தே தனது ஆய்வை மேற்கொள்ள முடிவு செய்த பிரேமகாந்தன் தினசரி யோகநாதனுடன் கலந்துரையாடுவார்.

பிரேமகாந்தன் மிகவும் நிதானமானவர். தான் மேற்கொள்ளவிருக்கும் ஆய்வு ...

தாமரைக்குளத்துக்குள் சுளியோடி தாமரைக்கிழங்கு பிடுங்கும் முயற்சியல்ல.. ஆழ்கடலில் முத்துக்குளிக்கும் முயற்சிக்கு ஒப்பானதென்பதை உணர்ந்து வைத்திருந்தார்.

''என்ரை தாய் மண்ணிலை என்ரை வீட்டிலை அந்தக் கிணத்திலை தண்ணி அள்ளி சளசளவெண்டு குளிச்சிட்டு இரண்டு முறடு தண்ணியும் குடிச்சிட்டு ஒரு நாலுமுளத்தை விரிச்சு என்ரை வீட்டு விறாந்தையிலை படுக்கிறதிலைதான் எனக்கு ஆத்ம திருப்தி இருக்கு'' என்று அன்றொருநாள் இரவு யோகநாதன் கூறிய வாக்கியங்கள் கருவண்டு போல இன்னமும் பிரேமகாந்தனின் இதயத் தளத்தைப் பிறாண்டிக் கொண்டிருந்தன.

சில தினங்கள் சென்றிருக்கும். ஒருநாள் இரவு நாலுமணியளவில் யோகநாதன் மிகவும் அவலப்பட்டார். அவரது மூக்கினால் இரத்தக் குழம்பு வடிந்து மயங்கிய நிலையில் முதியோர் இல்ல நிர்வாகத்தினால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சாகித்தியனுக்குச் செய்தி அனுப்பப்பட்டு மூன்றாவது நாள் சாகித்தியன் வந்து சேர்ந்தான்.

சாகித்தியன் வந்த விமானம் இலங்கை எல்லைக்குள் வந்திருக்கும். சாகித்தியனைப் பார்க்காமலேயே யோகநாதன் இறந்துவிட்டார்.

சாகித்தியன் கட்டுநாயக்கா விமானநிலையத்திலிருந்து நேரடியாக முதியோர் இல்லத்திற்கு வந்தான். யோகநாதனின் மரணச் செய்தியை வரதராஜமூர்த்தி பவ்வியமாகத் தெரிவித்தார். சாகித்தியன் வரதராஜமூர்த்தியின் அலுவலகத்துள் இருந்த கதறி அழுதான்.

''அம்மாவையும் பிணமாகத்தான் பார்த்தன். அப்பாவையும் பிணமாகத்தான் பார்க்கப் போறன்'' இப்படித்தான் சாகித்தியன் கூறி அழுதான்.

வரதராஜமூர்த்தி இங்கிதம் புரிந்தவர். சாகித்தியனை அழவிட்டு ஓய்ந்தபின்னர் தனது கதையை ஆரம்பித்தார்.

''தம்பி உங்கடை அப்பா யோகநாதன் ஏழு வருடங்களாக இந்த முதியோர் இல்லத்திலை இருந்திருக்கின்றார். அவர் என்னைச் சந்திக்கும்போதெல்லாம் தான் பிறந்த மண்ணிலைதான் சாகவேணும் பிறந்த மண்ணிலைதான் எரிஞ்சு சாம்பலாகவேணுமெண்டு கூறியிருக்கிறார். சாகிறதுக்குச் சில தினங்களுக்கு முன்பும் அதே விஷயத்தைப் பற்றிக் குறிப்பிட்டுக் கதைத்துள்ளார். பிறந்த மண்ணிலைதான் சாகவேணும் எண்ட அவற்றை ஆசை நிறைவேறாமல் போச்சுது. பிறந்த மண்ணிலைதான் எரிஞ்சு சாம்பலாக வேணுமெண்ட இரண்டாவது ஆசையும் இருக்கு. அதைப்பற்றி நீங்கள்தான் முடிவு செய்ய வேணும்'' வரதராஜமூர்த்தி யோகநாதனின் மண் பற்றுப்பற்றி விபரித்தார். பிரேமகாந்தனும் உடனிருந்தார்.

யோகநாதனின் மண்பற்றுப்பற்றி விபரங்களை வரதராஜமூர்த்தி சாகித்தியனிடம் கூறும்போது சாகித்தியன் தலையைக் குனிந்தபடி வரதராஜமூர்த்தியின் விளக்கங்களைக் கேட்டுக்கொண்டிருந்தான். சில விநாடிகள் சாகித்தியன் மௌனமாக இருந்தான். அவனது சிந்தனைத் திரிகைக்குள் யோகநாதனின் மண்பற்றுப் பற்றிய கருத்துக்கள் அரைபடுவதை அவனது முகம் காட்டியது.

சில விநாடிகள் சென்றிருக்கும். தனது லோங்ஸ் பொக்கற்றுக்குள்ளிருந்த கைக்குட்டையை எடுத்து தனது கண்ணாடியின் இரண்டு பக்கங்களையும் துடைத்து துப்புரவாக்கி மீண்டும் கண்ணாடியை அணிந்துகொண்டு வரதராஜமூர்த்தியைப் பார்த்தான். மிகவும் ஆழமான பார்வை. அவனது உதடுகளில் ஊமைச் சிரிப்பொன்று ஊர்ந்து மறைந்தது.

வரதராஜமூர்த்தி நிர்வாக இயக்குநர் என்ற பதவிக்குள் மனிதத்தோடு மிகவும் அமைதியாக சாகித்தியனைப் பார்த்தார்.

பிரேமகாந்தனின் மனத்தளத்தில் அவரது ஆய்வு பற்றிய குறிப்புக்கள் வளர்ந்து பக்கங்கள் நிறைந்து கொண்டிருந்தன.

'ஆதரவற்ற முதியவர்களும் அவர்களது மனநிலைகளும்' இதுதான் அவரது ஆய்வின் தலைப்பு.

வரதராஜமூர்த்தியின் அலுவலகத்திற்கு முன்னால் அங்கு தங்கியிருக்கும் ஆதரவற்ற முதியவர்கள் மௌனமாக நிற்கின்றனர். நிற்கமுடியாதவர்கள் அந்தச் சீமெந்து நிலத்தில் குந்தியமர்ந்திருக்கின்றனர். இருமல், பொருமல், நெஞ்சு நிறைந்த சளியின் கீச்சொலிகள்...

''சேர், அப்பாவின்ர கடைசிக் கடமைகளுக்கு ஒழுங்கு செய்யுங்கோ...'' சாகித்தியன் முடிந்த முடிவாகக் கூறிவிட்டு தகப்பனின் உடலைப் பார்க்கப் புறப்படுகின்றான்.

பிரேமகாந்தனும் அங்கு குழுமி நின்ற முதியவர்களும் திகைத்துப் போய் நிற்கின்றனர். அங்கு குழுமிநின்ற முதியவர்களின் ஏக்கப் பெருமூச்சில் அந்த மண்டபமே சூடேறிப் போயிருக்கிறது!

''என்ன மூர்த்தி ஐயா! தன்னைப் பெத்தவரின்ரை கடைசி ஆசை எண்டதைக்கூட யோசிக்காமல் சாகித்தியன் இப்படிச் செய்து போட்டான். ஜீரணிக்க முடியாமல் இருக்கு'' பிரேமகாந்தன் கேட்கிறார். வார்த்தைகள் உலர்ந்து குறண்டி பிரசவிக்கின்றன.

வரதராஜமூர்த்தி சர்வசாதாரணமாகச் சிரிக்கிறார்.

''என்ன மூர்த்தி ஐயா சிரிக்கிறியள்'' பிரேமகாந்தன் கேட்கிறார்.

''சிரிக்காமல் என்ன செய்யிறது. இந்த மண்ணிலை பிறந்து, இந்த மண்ணிலை வேரூன்றி, இந்த மண்ணைச் சுவாசித்து, இந்த மண்ணிலை வளர்ந்தவர் யோகநாதன். அவருக்கு மண்பற்று நிச்சயமாக இருக்கும். ஆனால் சாகித்தியன் இலங்கை மண்ணில் பிறந்தாலும் அவன் வளர்ந்ததும் வளமானதும் லண்டன் மண்ணிலைதான். அவனால் நமது மண்ணின் மண்வாசனையைப் புரிந்து கொள்ள முடியாது...

... அனுபவக் குறைபாடுகள்தான் முரண்நிலைகளின் விளைநிலம். அவனைப் பொறுத்து அவன் எடுத்த முடிவு சரியானது'' வரதராஜமூர்த்தி மிகவும் நிதானமாகக் கூறுகின்றார்.

எல்லோரும் மௌனமாக நிற்கின்றனர். மின் விசிறியின் மந்தமான கீச்சொலி மட்டும் அந்த மண்டபத்தில் கேட்கின்றது.

சில விநாடிகள் மௌனமாக இருந்த வரதராஜமூர்த்தி மீண்டும் பேச ஆரம்பிக்கின்றார்...

''இன்று நடந்த சம்பவத்தில் யோகநாதனும் சாகித்தியனும் மட்டுந்தான் பங்காளிகளல்ல. நாமனைவருமே பங்காளிகள் தான்.

வெளிநாட்டு வாழ்க்கை மோகம், வெளிநாட்டு கல்வி மோகம், வெளிநாட்டுப் பொருளாதார மோகம், வெளிநாட்டு நாகரிக மோகம்.

வெளிநாட்டு மோகம் என்ற துப்பட்டாவுக்குள் நமது வாழ்க்கையைப் புதைத்துக் கொள்வதில் முனைப்பாக இருக்கின்றோமே தவிர, நாம் நமது சுயங்களை இழந்து நிர்வாண வாழ்க்கைக்குள் புதைந்துகொண்டிருக்கின்றோம் என்பதை யாருமே உணர்வதில்லை.

அடுத்தடுத்த நமது தலைமுறைகளில் ...

'தொப்புள் கொடி', உறவுக்கோ 'தாலிக்கொடி' உறவுக்கோ, 'தேசியக்கொடி' உறவுக்கோ மதிப்பிருக்காது.

கட்டுக்கோப்பான ஒரு வாழ்க்கை முறையிலிருந்து இயந்திரமயமான ஒரு வாழ்க்கை முறை நோக்கி வழி நடத்தப்படுகிறோம் என்பதுதான் உண்மை நிலை'' வரதராஜமூர்த்தி மிகவும் வேதனையோடு கூறிமுடிக்கின்றார்.

மண்டபத்துள்...

துயரமும், சிந்தனையும் கலந்ததொரு அமைதி.

அந்த அமைதிக்குள்...

பிரேமகாந்தனின் மனப்பரப்பில்... 'ஆதரவற்ற முதியவர்களும் அவர்களது மனநிலைகளும்' என்ற அவரது ஆய்வின் முதலாவது அத்தியாயம் நிறைவு பெறுகின்றது.

# தொல்காப்பியம் உள்ளவரை கணேசையரின் தமிழ்த்தொண்டும் நிலைத்து நிற்கும்

**- பொ. வேல்சாமி**

தமிழின் தலைசிறந்த நூல் என்று நாம் கொண்டாடும் தொல்காப்பியம் 19ஆம் நூற்றாண்டில் தமிழ்த்தாத்தா உ.வே.சா. போன்றவர்களே அறியாத நூலாக இருந்தது. அந்தக் காலத்தில் தமிழ்நாடு முழுமையிலும் தொல்காப்பியத்தைப் பாடம் சொல்கிற ஆசிரியர் "வரதப்ப முதலியார்" என்ற ஒருவர் மட்டும் இருந்ததாக சி.வை. தாமோதரம்பிள்ளை போன்றோர் எழுதியுள்ளனர்.

1847இல் மழவை மகாலிங்கையரால் தொடக்கம் பெற்ற தொல்காப்பியப் பதிப்புப் பணி 1935இல் கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரம் பிள்ளையால் தொல்காப்பியம் – இளம் பூரணர் உரை

- மெய்ப்பாட்டியல்
- உவமையியல்
- செய்யுளியல்
- மரபியல்

போன்றவை வெளியிடப்பட்டவுடன் நிறைவடைந்தது.

1930களின் பின்னர் பல்கலைக்கழகங்களிலும், கல்லூரி களிலும் தொல்காப்பியம் பாடமாக வைக்கப்பட்டது. அந்தக் காலத்தில் இதனைப் பாடம் சொல்வதற்கு ஆசிரியர்கள் பெருமளவில் இடர்ப் பட்டனர். இதற்கு தொல்காப்பியச் சூத்திரங்களை முறைப்படுத்த வேண்டும். உரையாசிரியர்கள் குறுப்பிடும் கருத்துகளைத் தெளிவுபடுத்தும் விளக்கங்கள் வேண்டும்.

தமிழ்நாட்டில் பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரி எழுத்ததிகாரத்துக்கும், சொல்லதிகாரத்துக்கும் விளக்கக் குறிப்புகளை எழுதினார். வையாபுரிப் பிள்ளை போன்றவர்கள் மூல பாடத்தில் பல நல்ல திருத்தங்களைச் செய்துள்ளனர்.

அதே நேரத்தில், யாழ்ப்பாணத்தில் இருந்து சி. கணேசையர் என்பவர்

- எழுத்ததிகாரம் – நச்சினார்க்கினியர் உரை
- சொல்லதிகாரம் – சேனாவரையர் உரை
- பொருளதிகாரம் நச்சினார்க்கினியர் – பேராசிரியர் உரைகளுக்கு

விளக்கக் குறிப்புகளை விரிவாக எழுதினார்.

அதே நேரத்தில் சுவடிகளுக்கு இடையேயான பாட வேறுபாடுகளையும் நுட்பமாக ஆராய்ந்து சரியானவற்றைக் குறிப்பிட்டு அதற்கான விளக்கங்களையும் கொடுத்தார். இன்றுவரை இந்த விளக்கங்களை விஞ்சக்கூடிய எதனையும் யாரும் தரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்துக்கு அருகேயுள்ள "புன்னாலைக் கட்டுவன்" என்ற கிராமத்தில் 1878ஆம் ஆண்டு மார்ச் 26ஆம் தேதி பிறந்தார் கணேசையர். இவருடைய தந்தை சின்னையர் – தாய் சின்னம்மாள். இவரது பெரிய தந்தை கதிர்காம ஐயர், புன்னாலைக்கட்டுவனில் நடத்தி வந்த பள்ளியில் 8ஆம் வகுப்பு வரை தமிழும் வடமொழியும் படித்தார். அத்துடன் ஆறுமுக நாவலரின் சகோதரி மகனாகிய – பெரும்புலவர் பொன்னம்பலம் பிள்ளை, சுன்னாகம் குமாரசாமிப்புலவர், கணேசையர் உறவினரும் சைவ சித்தாந்தத்தில் பெரும் புலமையாளருமாகிய காசிவாசி செந்தில்நாத ஐயர், வடமொழி அறிஞர் பிச்சுவையர் போன்றவர்களிடம் கல்வி பயின்றார்.

தமது 21வது வயதில் இருந்து விவேகானந்த வித்தியாசாலை, நாவலரின் சைவப் பிரகாச வித்தியாசாலை போன்றவற்றில் ஆசிரியராகப் பணி செய்தார். இவருடைய 32வது வயதில் அன்னலட்சுமி எனும் அம்மையாரை மணந்தார். திருமணத்துக்குப் பின்னர் மணிமேகலை நூல் குறிப்பிடும் மணிபல்லவத்தீவு என்று கருதப்படுகின்ற "நைனா தீவி"ல் ஆசிரியப் பணி புரிந்தார். 15ஆம் நூற்றாண்டில், இலங்கை அரச வம்சத்தைச் சேர்ந்த "அரசகேசரி" என்பவர் காளிதாசனுடைய இரகுவம்சம் நூலை 2444 பாடல்களில் மொழிபெயர்த்தார். இந்த நூலின் 1506 பாடல்களுக்கு கணேசையர் உரை எழுதியுள்ளார்.

"ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர்கள் சரித்திரம்" போன்ற பல நூல்களை எழுதி இருப்பினும் கி.பி. 1868, 1885, 1891ஆம் ஆண்டுகளில் சி.வை. தாமோதரம் பிள்ளையால் முதன் முதலாக வெளியிடப்பட்ட தொல்காப்பியம் மூன்று அதிகாரங்களுக்கும் கணேசையர் செய்த திருத்தங்களும் விளக்கக் குறிப்புகளும் மிகவும் சிறப்பான பணியாகும்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்துக்குச் "செந்தமிழ்" பத்திரிகையில் 1905ஆம் ஆண்டிலிருந்து இவர் எழுதிய "கம்பராமாயணத்தில் பாட வேறுபாடுகள்" என்ற கட்டுரை தொடராக வெளிவந்தது. இது இன்றும் பழந்தமிழ் நூல்களுக்கான செம்மையான பாடங்களை ஆய்வு செய்யும் அறிஞர்களுக்கு வழிகாட்டியாகக் கருதத்தக்க சிறப்புடைய தாகும். 1937இல் கணேசையர் தொல்காப்பியக் குறிப்பை வெளியிடுவதற்கு முன்பே,

- சி.வை. தாமோதரம்பிள்ளை
- இரா. இராகவையங்கார்

- கா. நமச்சிவாய முதலியார்
- வ.உ.சி.யுடன்

இணைந்து,

- வையாபுரிப் பிள்ளை
- திரிசிபுரம் கணேகசபைப் பிள்ளையுடன்

இணைந்து மன்னார்குடி சோமசுந்தரம் பிள்ளை முதலிய பல்வேறு அறிஞர்கள் தொல்காப்பியம் மூலபாடத்தையும், சிறுசிறு குறிப்புகளுடனும் பதிப்பித்து வெளியிட்டிருந்தனர்.

இத்தகைய அறிஞர்களின் உழைப்பிற்குப் பின்பும் தொல்காப்பியமும் அதன் உரைகளும் மேலும் திருத்தப்பட வேண்டும் என்ற நிலையிலேயே இருந்தன.

இந்நிலையில் "ஈழகேசரி" பத்திரிகையின் அதிபரான நா. பொன்னையா பிள்ளை, சி.வை. தாமோதரம்பிள்ளை வெளியிட்ட தொல்காப்பியத்தைத் தற்காலத்துக்கு ஏற்ற வகையில் செம்மையான பதிப்பாகவும், தேவையான விளக்கங்களுடனும் வெளியிடுவது சிறந்ததாகும் எனக் கருதினார். இந்தப் பணியை சிறப்பாகச் செய்யக்கூடிய அறிஞர் கணேசையரே என்று கருதி, இப்பணியைச் செய்து தருமாறு அவரிடம் வேண்டினார். தனக்கு அளிக்கப்பட்ட பணியை வெகு சிறப்புடன் செய்து முடித்தார் கணேசையர்.

தொல்காப்பியப் பொருளதிகாரம், பேராசிரியர் உரையை ஆராய்ச்சி செய்யும்போது இன்னும் பல திருத்தங்களைச் செய்ய வேண்டிய நிலையில், இலங்கை முழுவதிலும் இதற்கான திருத்தமான பிரதிகள் கிடைக்கவில்லை. எனவே, கணேசையர் தமிழ்நாட்டுக்கு வந்து, மதுரையில் டி.கே. இராமானுஜ ஐயங்கார் உதவியுடன் மதுரைத் தமிழ்ச் சங்கப் பிரதிகளைப் பார்த்துத் தம்முடைய குறிப்புகளைத் திருத்தம் செய்துகொண்டார்.

கடும் உழைப்புடன் தன் நுண்மையான அறிவைப் பயன்படுத்தி தொல்காப்பிய மூலத்திலும் உரையிலும் கணேசையர் பல திருத்தங்களைச் செய்தார். எடுத்துக்காட்டாக, பேராசிரியர் உரை எழுதிய தொல்காப்பிய பொருளதிகார நூற்பாக்கள் 300,302,307,313,369,419,448,490,491 போன்றவற்றில் அறிவியல் பூர்வமான பல திருத்தங்களை கணேசையர் செய்துள்ளார்.

வாழ்நாள் முழுவதும் அயராது உழைத்த கணேசையர், உடல்நலக் குறைவு காரணமாக 1958ஆம் ஆண்டு நவம்பர் 8ஆம் தேதி இவ்வுலக வாழ்வை நீத்தார். என்றாலும், தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரங்களுக்கு அவர் எழுதிய விளக்கக் குறிப்புகளும் திருத்தங்களும் இன்றளவும் தமிழறிஞர்களால் போற்றப்படுகிறது.

தொல்காப்பியம் உள்ளவரை கணேசையரின் சீரிய தமிழ்த்தொண்டும் நிலைத்து நிற்கும் என்பது உறுதி.

**நன்றி :- தினமணி**

**கண்ணீர் அஞ்சலி**

# கவிமகான் இ. முருகையன் மறைவு



ஜூன் மாத இறுதியில் ஈழத்தின் மூத்த கவிஞர் இ. முருகையன் அமரரானார் என்ற செய்தி கலை இலக்கிய உலகில் பெரும் கவலையை ஏற்படுத்தியது. ஈழத்தின் நவீன கவிதை உலகில் பெரும் பாய்ச்சலை ஏற்படுத்திய மூலவர்களாக நீலாவணன், மஹாகவி, முருகையன் ஆகியோர் கணிக்கப்பட்டனர். இவர்களில் முதல் இருவரும் ஏற்கனவே அமரராகிவிட்ட நிலையில் முருகையன் மட்டுமே நம்மிடையே வாழ்ந்து வந்தார். அவரையும் இப்போது இழந்து விட்டோம் என ஈழத்துக் கவிதையுலகு கலங்கி நிற்கிறது.

முருகையன் 1956ல் விஞ்ஞானப் பட்டதாரியானவர். அதனைத் தொடர்ந்து லண்டன் பல்கலைக்கழகம் சென்று 1961ல் கலைப் பட்டதாரியானார். 1985ல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதுகலைமாணிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டவர். 1956ல் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராகப் பணியைத் தொடங்கிய முருகையன் 1995ல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதுதுணை பதிவாளராக கடமைபுரிந்து ஓய்வு பெற்றார்.

கவிதையின் வாயிலாக இலக்கியப் பிரவேசம் செய்த முருகையனின் ஆங்கிலப் புலமையும் விஞ்ஞான அறிவும் தமிழ் மொழியின் பாண்டித்தியமும் அவரை கவிதை, விமர்சனம் மொழிபெயர்ப்பு, நாடகம் எனப் பல்வேறு தளங்களில் தடம்பதிய வைத்துள்ளன.

இவருடைய கவிதைகள், தனிக்கவிதை, நெடும்பாட்டு, பாநாடகம் என மூன்று வகையாகக் காணப்படுகின்றன. இவரது கவிதைத் திறனைக் கருத்தில் கொண்டு, பேராசிரியர் க. கைலாசபதி இவரைக் 'கவிஞருக்குக் கவிஞர்' எனக் கணிப்பீடு செய்து பெருமைப்படுத்தினார். "உருவத்திற்கும் உள்ளடக்கத்திற்குமுள்ள நுட்பமான இயங்கியல் ரீதியான உறவைத் தெளிவுற உணர்ந்து கவிதை படைப்பவர் முருகையன்" என்ற காரணத்தினாலேயே தான் இவ்வாறு கணிப்பீடு செய்தமைக்குக் காரணத்தையும் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

ஞானம் 90ஆவது இதழில் இந்த மாபெரும் கவிஞனை அட்டைப்பட அதிதியாகக் கௌரவிக்கும் பெரும்பேறு ஞானத்திற்குக் கிடைத்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவரது புலமைக்காக 'கௌரவ கலாநிதி' பட்டம் வழங்கிப் பெருமை கொண்டது.

இலங்கையில் ஓர் எழுத்தாளனுக்கு வழங்கப்படுகிற அதியுயர் அரச விருது "சாஹித்திய இரத்தினம்" 2007ல் இவருக்கு வழங்கப்பட்டது.

# 'அந்திமத்தில் யாருமின்றி......'

ஆறுமுகம் வாத்தியாருக்கோ
பொன்னென பிள்ளைகள்
அறுவர்!

அன்பான மனைவியுடன்
அன்னியோன்யமாக குடும்பத்தை
அரவணைத்தார்!

கடமை கண்ணியம்
கண்டிப்புடன் அன்பையும்
கொண்டிருந்தவர்!

எல்லோரும் சமமென்று
கல்வியை புகட்டி
ஏணியானவர்!

இவரின் பின்ளைகளும்
மனம்போல கல்வியிலே
இமயமானார்கள்!

காலங்கள் கனிந்துவர
உயர் பதவிகளும் இவர்களை
கைப்பற்றியது!

இல்லறத்தில் மக்களை
இணைத்து மனதார
இன்புற்றார்!

தந்தை சொல்மிக்க
மந்திரம் இல்லையென்பதும்
திண்ணமாயிற்று!

நாட்கள் நகர்ந்தன
தத்தம் குடும்பமென்ற
நிலைக்குள்ளானார்கள்!

தந்தையின் மந்திரமும்
படிப்படியாக வலுவிழுந்து
தடம் புரண்டது!

அறுவரும் குடும்பத்தோடு
வெளிநாடு சென்று
அகதியானார்கள்!

தாய் தந்தையோ
சொந்தமண்ணில் அகதிகளாகி
தனித்தனர்!

பணத்தை மட்டும்
அனுப்பி வைத்து
பற்றறுத்தனர்!

வருடமொன்று கழிந்திங்கே
நோயுற்ற தாயவளும்
வானமடைந்தபோது
பிள்ளைகளின் வரவிற்காய்
காத்திருந்து ஏமாந்தார்
பண்பாளர்!

மனைவிக்கு கொள்ளியிட்டு
தன் கடன் இதுவென்று
மேன்மையுற்றார்!

தன்னிலை என்னவாகும்
என்றெண்ணி முடிவொன்றை
தேடி வைத்தார்!

அம்மாவுக்கு வரமுடியவில்லை
அப்பாவுக்கு கண்டிப்பாக
வருவோம்!

பிள்ளைகளின் வாக்குறுதியை
நம்ப மறுத்து
பேதலித்தார்!

மனைவியின் நினைவுகளோடு
மறுமாதமே ஆறுமுகத்தாரும்
மரணித்தார்!

செய்திதனை பிள்ளைகளுக்கு
அனுப்பி மறுமொழியும்
சேர்ந்தது!

ஆறிரு நாட்களுக்காக
'எம்பாம்' செய்யப்பட்டார்
ஆசானும்!

உரிய நேரத்தில்
வந்தனர் அறுவரும்
ஊருக்கு!

மேளங்கள் தேவாரங்கள்
சோககீதங்கள் அலங்காரங்கள்
மேலோங்கின!

கண்ணீரற்ற கண்களுடன்
பூநூல் தரித்திட்டார்கள்
கொள்ளியிட!

கிரியைகள் முடிந்து
யாத்திரை ஆரம்பிக்க
காத்திருந்த வேளை
வேகமாக வந்து
தரித்து நின்றது
வாகனமொன்று!

ஆறுமுகத்தார் உடலை
தானமாக பெற்றுக்கொள்ள
அவர்கள் தோன்றினர்!

பத்திரங்களை காட்டியங்கு
உடற்தானம் பெற்றுமே
போயினர்!

மருத்துவ பீடத்திற்கு
அன்பளித்தது தெரிந்தது
மக்களுக்கு!

வேதனையின் மத்தியில்
வெட்கித்து தலைகுனிந்தனர்
வியப்புற்றனர்!

மனைவிக்கு இடாத
கொள்ளியோ தனக்கெதற்கென
முடிவாக்கியவர்!

கொள்ளியிட்டால் கடமை
முடிந்துவிடும் என்றவர்க்கு
கொள்ளியிட்டார்.

- கவிஞர் வதிரி கண. எதிர்வீரசிங்கம்.

# சாதியின்மையா, சாதிமறைப்பா?

**'பின் காலனித்துவச் சூழலில் சாதியம் பற்றிய வாசிப்பு' ஒரு சமூகவியல் நோக்கு**

*- பெருமாள் சரவணகுமார்*




தென்னாசிய நாடுகளில் வாழும் மனித சமூகத்தின் பண்பாட்டு நியமங்களை அடையாளப்படுத்தும் கூறுகளில் சாதியம் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. மனிதர்களின் உருவத் தோற்றம், தொழில் வகைமை, குண இயல்புகள் என்பவற்றை மையப்படுத்தி சாதியம் பற்றிய கருத்துருவாக்கம் கட்டமைக்கப்பட்டது. இந்திய, இலங்கை சமூகப்புலங்களில் சாதியம் வெறும் பண்பாட்டுக் கூறாக மாத்திரமன்றி சாதியத்துடனான அரசியல் கட்டமைப்பு மிக நீண்ட காலமாகவே வடிவமைக்கப்பட்டு வந்துள்ளது. தமிழகச் சூழலில் இந்துத்துவம் கட்டமைத்த வர்ணாச்சிரம தத்துவத்தூடாகவே சாதியம் அரச அங்கீகாரத்தோடு நிலைநிறுத்தப்பட்டது. இந் நீண்ட கட்டமைப்புக்குள் வளர்ந்துவந்த சாதியம் பற்றிய எண்ணக்கரு காலச்சூழலுக்கு ஏற்ப வடிவமைத்தும் வாசிக்கப்பட்டும் வந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. காலனித்துவம், பின்காலனித்துவக் காலங்களில் சாதியம் பொருள் கொள்ளப்பட்ட விதமும் வாசிக்கப்பட்ட முறையும் நுண்ணரசியல் சார்ந்தவைகளாகவே அமைந்துள்ளன. வர்க்க முரண்பாட்டின் முதற்படியாகவே சாதியத்தை மார்க்சியம் பொருள்கொண்டது. எனவே, சாதியத்தை பொருள் கொள்வதிலும் அதனை வாசிப்பதிலும் அவரவர் சார்ந்துள்ள கருத்துநிலை கூடுதல் செல்வாக்கு பெற்றிருக்கும். இந்தப் பின்புலத்தை அடிப்படையாகக் கொண்டு சாதியின்மையா, சாதிமறைப்பா? என்ற நூலைக் கட்டவிழ்த்துப் பார்ப்பது பொருத்தமானது.

சர்வதேச தலித் கூட்டொருமைப்பாட்டு வலைப்பின்னலின் அனுசரணையோடும் அது சார்ந்த நுண்ணரசியல் இயங்கு நிலையோடும் இந்நூல் வெளிவந்துள்ளது. இந்நூல் ஏழு அத்தியாயங்களையும் மூன்று பின்னிணைப்புகளையும் கொண்டமைந்துள்ளது. தனிப்பட்ட கட்டுரையாசிரியர்களின் கருத்துநிலை சார்ந்த கட்டுரைகள் இடம்பெறவில்லை. இணையாசிரியர்களின் கட்டுரைகளாகவே ஒவ்வொரு அத்தியாயமும் அமைந்துள்ளது. எனவே, தனிப்பட்டவரின் சமூகம், பிரதேசம், கருத்துநிலை சார்பு வாதங்கள் இந்நூலில் ஆதிக்கம் பெறவில்லை எனலாம்.

காலனித்துவக் காலத்திலும், பின்காலனித்துவக் காலத்திலும் சாதியம் பொருள் கொள்ளப்பட்ட விதம் வேறுவேறானது. ஒவ்வொரு காலத்திலும் மேலோங்கி இயங்கிய அரசியல் வேறுபட்ட வாசிப்புக்கு காரணமாக அமைந்தது. அவ்வகையில், இந்நூலின் ஆய்வுப் பின்னணியை காலிங்க டியூடர் சில்வா, பரஞ்சோதி, தங்கேஸ் பி.பி. சிவப்பிரகாசம் ஆகியோர் எழுதியுள்ளனர். இலங்கைச் சூழலில் சிங்கள, யாழ்ப்பாண, மலையகச் சமூகக் குழுமங்களிடையே சாதியம் வளர்க்கப்பட்ட அல்லது வடிவமைக்கப்பட்ட விதத்தை மிகச் சுருக்கமாக முதலாவது அத்தியாயம் பதிவு செய்துள்ளது. சிங்கள, யாழ்ப்பாண, மலையகச் சமூகங்களிடையே சாதியம் எவ்வாறு இயங்குநிலைகளாக இருக்கின்றது என்பதை அறிமுகஞ் செய்வதோடு ஆய்வின் நோக்கம், முறையியல்கள் என்பவற்றையும் இவ்வியல் வெளிப்படுத்தி நிற்கின்றது.

காலனித்துவத்துக்கு முன்பும் பின்பும் சாதியம் பொருள் கொள்ளப்பட்ட விதத்தையும், சாதியத்தை கையாள்வதில் ஆங்கிலக் காலனித்துவ வாதிகள் எவ்வாறு செயற்பட்டனர் என்பதையும் இரண்டாம் அத்தியாயம் விளக்குகின்றது. காலனித்துவக் காலங்களில் சிங்கள, யாழ்ப்பாணம் மற்றும் மலையகப் பகுதிகளில் சாதியத்தின் இயங்குதன்மைகளையும் வெளிப்படுத்துகின்றது. காலனித்துவத்தின் நுண்ணரசியல் சார்ந்த மேலாண்மை சாதியைக் கையாள்வதிலும் இழையூடுகின்றது. இதுபற்றி கட்டுரையாசிரியர்கள் கூறும் கருத்து ஆழ்ந்த சிந்திப்புக்குரியது.

**'காலனித்துவம் சாதியமைப்பினை சில வழிகளில் பலவீனப்படுத்தியது போல் அதுவே வேறு சில வழிகளில் சாதியை பலப்படுத்தியும் மீள் கண்டுபிடிப்பும் செய்துள்ளது'. (பார்க்க ப.18)**

பெருந்தோட்டப் பகுதிகளில் சாதியத்தை தொழில் அடிப்படையில் மீட்டுருவாக்கம் செய்தது காலனித்துவக் காலமே எனலாம். நிலப்பிரபுத்துவச் சமூக அமைப்பில் காணப்பட்ட சாதிய அமைப்பு பெருந்தோட்ட உற்பத்தி முறைக்கு ஏற்ப தொழில் அடிப்படையில் வடிவமாறுதல் பெறுகின்றது. கங்காணி, கணக்குப்பிள்ளை முதலிய தொழில் பகுப்பும் அந்தஸ்து உருவாக்கமும் சாதியை முன்னிறுத்தியே வழங்கப்பட்டமை மனங்கொள்ளத்தக்கது. இரண்டாவது அத்தியாயம் வரலாற்று ரீதியான கண்ணோட்டம், யாழ்ப்பாணச் சமூகத்தில் சாதிப்பாகுபாடு, சிங்களச் சமூகத்தில் சாதிப் பாகுபாடு, மலையகப் பகுதியில் சாதிப் பாகுபாடு ஆகிய நான்கு உபதலைப்புகளை அடிப்படையாகக் கொண்டு பிரதான தலைப்பு விளக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது அத்தியாயம் சிங்களச் சமூகத்தில் சாதிப் பாகுபாடு என்ற தலைப்பில் அமைக்கப்பட்டுள்ளது. சிங்களச் சமூகத்தில் சாதியம் நிலைநிறுத்தப்பட்ட முறையினையும், அதன் தனித்துவமான இயல்பு நிலைகளையும் சுருக்கமாக வெளிப்படுத்துகிறது. இக்கட்டுரையை காலிங்க டியூடர் சில்வா, கொடிகபத்தே, நிலங்க சந்திமா அபேவிக்ரம ஆகியோர் எழுதியுள்ளனர். இந்திய சாதி முறைகளோடு ஒப்பிடும்போது

சிங்களவர்களின் சாதிப்பகுப்பும் சாதிகளுக்கான அந்தஸ்து உருவாக்கமும் வேறுவேறாக அமைந்துள்ளமையினை காணலாம். சிங்களச் சமுதாயத்தில் "இராஜகாரிய முறையே" சாதியத்தை இயங்குநிலையாக வடிவமைத்தது எனலாம். சிங்களச் சமூகத்தில் சாதிப்பாகுபாடு என்ற பொதுத் தலைப்பில் இக்கட்டுரை அமைந்தாலும் மூன்று கிராமங்களை அடிப்படையாகக் கொண்டு சிங்களச் சமூகத்தில் சாதியம் எவ்வாறு இயங்குநிலைகளாக இருக்கின்றது என்பதை வெளிப்படுத்துகின்றது. வலிவிட்ட மேளம் அடிக்கும் சமூகத்தையும், ஹேனவல கின்னற சாதியினையும், குறகல றொடி சாதியினையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. காலனித்துவத்துக்கு முன்பும் பின்பும் சாதியை வடிவமைப்பதில் ஏற்பட்டுவந்த மாற்றங்களை இவ் அத்தியாயம் விபரிக்கின்றது.

நகரமயமாதல், கல்வி வாய்ப்புகள், திருமணமுறைகள், வேறுபட்ட சமூகங்களுக்கிடையிலான ஊடாட்டம் என்பன சாதியத்தின் இயங்குநிலைகளில் எவ்வாறு பாதிப்பு செலுத்துகின்றது என்பதை ஆய்வுக்கு உட்படுத்துவது அவசியமானதாகும். புதிய உற்பத்தி உறவுகளின் பின்னணியில் உருவாகும் சமூகத்தில் அச்சமுதாயம் கட்டமைக்கும் கருத்து நிலைக்கு ஏற்ப சாதியம் வடிவநிலையில் மாற்றங்களைப் பெறமுடியும். ஆயினும் சாதியத்தின் நுண்ணரசியல் சார்ந்த இயங்குநிலை சமூகத்தில் மேட்டிமை சக்தியாக விளங்குபவர்களின் அரசியலையே கொண்டிருக்கும். இந்தப் பின்புலத்தை அடிப்படையாகக் கொண்டு சமூக அசைவியக்கத்தையும் சாதியத்தின் இயங்குநிலையையும் நோக்குவது பொருத்தமானது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணச் சமூகத்தில் சாதியப் பாகுபாடு என்ற கட்டுரை சமூக அசைவியக்கப் பின்புலத்தில் எழுதப்பட்டுள்ளது. தமிழ் தேசியத்தின் எழுச்சியும், தமிழர் விடுதலைப் போராட்டத்தின் வகைமாதிரியும் இறுக்க நிலையில் இருந்த சாதியத்தை எவ்வாறு பாதித்தது என்பதை இக்கட்டுரை விளக்குகின்றது. குறிப்பாக யுத்தத்தின் விளைபொருளாக்கப்பட்ட அகதி வாழ்வு, முகாம்களின் உருவாக்கம், கிராமிய சிதைவு என்பன சாதியத்தின் இயங்குநிலைகளில் எவ்வகையான பாதிப்பினை செலுத்தின என்பது பற்றி கட்டுரை விபரிக்கின்றது. சாதியத்துக்கு எதிரான கருத்துநிலையை மையப்படுத்திய யாழ்ப்பாணத்தில் விடுதலைப் போராட்ட இயக்கங்கள் மேற்கிளம்பின. விடுதலைப் போராட்டங்களின் பலமும் பலவீனமும் சாதியத்தை பொருள் கொண்டதிலும் அதனை இன்னொரு தளத்தில் மீட்டுருவாக்கம் செய்ததிலுமே தங்கியிருந்தன.

மல்லாகம் அகதி முகாமில் வாழும் மக்களிடையே சாதியம் எவ்வகையில் வடிவம் கொள்கின்றது என்பதை கட்டுரையாசிரியர் பதிவு செய்கின்றார். சாதிய அடுக்கமைவில் வாழ்ந்தவர்கள் இன்று புலம்பெயர் நாடுகளிலும் தமது சாதிய மேட்டிமையை வடிவமாற்றம் செய்துள்ளமை மனங்கொள்ளத் தக்கது. இது பற்றிப் புலம்பெயர் புனைகதைகள் மிகச் சிறப்பாகப் பதிவு செய்துள்ளன. எனவே, புதிய சமூக மாறுதல்கள் ஏற்படும்போது சாதியம் என்ற எண்ணக்கரு எவ்வாறு மாற்று வடிவத்தைப் பெற்றுக்கொள்கின்றது அல்லது நுண்ணரசியல் சார்ந்து எவ்வாறு இயங்குகின்றது என்பது மிக முக்கியமானது.

மலையகச் சமூகத்தில் சாதியப் பாகுபாடு என்ற கட்டுரை மலையகச் சமூகப் பின்புலத்தில் எழுதப்பட்டுள்ளமை முக்கியமானது. மலையகத்தில் சாதி தொழில் ரீதியாக வடிவம் கொள்வதற்கு காலனித்துவ காலமே அடிப்படையாக அமைந்தது. சாதியத்தை தொழில் அடிப்படையில் மீட்டுருவாக்கம் செய்தலில் காலனியத்தின் நுண்ணரசியல் காரணமாகியது. எனினும், பெருந்தோட்டத்துறைகளில் சாதியத்தின் இயங்கு நிலைகளை ஆய்வுசெய்யும்போது சில முக்கிய அம்சங்களை அவதானிப்பது அவசியமாகும். தென்னிந்தியச் சூழலில் வேறுபட்ட தொழில், சாதிய அடுக்கமைவில் வாழ்ந்தவர்கள் இலங்கையில் (மலையகப் பிராந்தியம்) ஒரே வகையான பொருளாதார உற்பத்தி உறவுக்குள் அமர்த்தப்பட்டனர். இதனால் ஒரே சாதியக் குழுமத்தை சேர்ந்தவர்கள் குறிப்பிட்ட பிரதேசத்துக்குள்ளும் வேறு வேறு சாதி அந்தஸ்தில் உள்ளவர்கள் ஒரே பிராந்தியத்துக்குள்ளும் உள்வாங்கப்பட்டனர்.

மலையகச் சமூகத்தில் சாதியப் பாகுபாடு என்ற பொதுத் தலைப்பில் கட்டுரை அமைந்திருந்தாலும் ஒரு சில பிரதேசத்திலிருந்து எடுக்கப்பட்ட தகவல்களை முன்னிறுத்தியே இக்கட்டுரை அமைந்துள்ளது. மலையகத்தில் சில தோட்டப்பகுதிகளில் ஒரே சாதிக்குழுமம் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே, ஆய்வு பிராந்தியங்களை (தோட்டங்களை) தெரிவுசெய்வதில் கூடுதல் கவனம் அவசியமாகும். எனினும், மலையகத்தில் சாதியத்தின் இயங்குநிலைகளை கட்டுரை ஆசிரியர்கள் எடுத்துக் காட்டியுள்ளமை மனங்கொள்ளத்தக்கதே. சாதிய அடுக்கமைவில் வாழ்ந்தவர்கள் குறிப்பிட்ட தொழில் முறைமைக்குள்ளும், லய வாழ்க்கை முறைக்குள்ளும் உள்வாங்கப்பட்டதனால் சாதியத்தின் இறுக்கம் தளர்வடைவதற்கு காரணமாக அமைந்தது. காலனித்துவக் காலத்தில் கங்காணி, கணக்குப்பிள்ளை என்பவர்களை தெரிவுசெய்வதூடாக எவ்வாறு சாதியம் மீள் உருவாக்கம் பெற்றதோ அதுபோலவே பின்காலனித்துவக் காலத்திலும் தொழிற்சங்கங்கள் சாதியத்தை மீட்டுருவாக்கம் செய்தன. சாதியத்தை மையப்படுத்திய அரசியல் இயங்குதன்மை தற்போதும் செயற்பாட்டில் உள்ளமை மனங்கொள்ளத்தக்கது.

நகரமயமாதலும் அதன் விளைபொருளான சேரிப்புற வாழ்வியலும் சாதியத்தை எவ்வாறு கட்டமைத்தன என்பதை "கண்டி நகரிலுள்ள சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் நிலைமைகள்" என்ற கட்டுரை பதிவுசெய்கின்றது. வேறுபட்ட பிராந்தியம், சாதிகள், சமூகங்களின் ஊடாட்டங்கள் என்பன சாதியத்தின் இயங்குநிலைகளில் எவ்வகையான பாதிப்பினை செலுத்தியுள்ளன அல்லது சாதியம் எவ்வாறு இயங்கு தன்மையில் வடிவமாற்றம் பெறுகின்றது என்பதை கட்டுரையாசிரியர்கள் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே, இலங்கையில் சாதியப் பாகுபாடு என்ற பொது தலைப்பின் கீழ் இந்நூல் அமைந்திருந்தாலும் குறிப்பிட்ட ஆய்வுப் பரப்பினை வரையறுத்தே அமைந்துள்ளது எனலாம். சாதியத்தையும் அதன் போராட்ட இயங்குநிலைகளையும் ஒட்டுமொத்த சமூகப் பின்புலத்தில் இந்நூல் பார்க்கவில்லை என்பது சுட்டிக் காட்டத்தக்கது. காலனித்துவம், பின்காலனித்துவம் சார்ந்த நுண்ணரசியலின் சார்பு வாதங்கள் ஆங்காங்கே மேலோங்கி இருப்பது கவனத்துக்குரியது. உலக மயமாக்கல் என்ற நுண்ணரசியல் சாதியம் பற்றிப் பொருள் கொள்வதிலும் வாசிப்பதிலும் கூடுதல் ஆதிக்கத்தை செலுத்துகின்றது என்பதை இந்நூல் வெளிப்படுத்தி நிற்கின்றது.

## சொப்பன முண்டம்...

ஸோ. சுதர்ஷினி - பொகவெந்தலாவ

*இரவின்*
*ஊமை ஜாலங்களில்*
*இரகசிய பீதியாய்*
*நானாய்*
*எனக்குள் மட்டும்*
*தனியனாய்*
*நலம் விசாரித்து*
*மறையும் - நெற்றியின்*
*உதிரம் சொட்டும்*
*ரணப் பொழுதுகள்...*

*தெரு நாயின்*
*ஊளைச்சத்தங்களில்,*
*சந்தடியில்லாத தெருக்களின்*
*வெறுமையில்*
*தலை கவிழ்ந்து*
*தொங்கும் - சொப்பன*
*முண்டமாய்*
*என் துணிச்சலை*
*முடமாக்கிப்போகும்*
*மோகினி பிசாசுகளின்*
*புகைப்படச்சுருள்...*

*மயானங்களில்,*
*சாம்பலை உதிர்த்து*
*எட்டிப்பார்க்கும்*
*எரிந்த கொள்ளிக்கட்டையாய்,*
*தனிமையை*
*விழுங்கிவிட்ட - சில*
*இரத்தக்காட்டேறிகள்*
*பற்றிய பயம்...*

*தப்பிக்கும்*
*முயற்சியில்*
*தலையணையை*
*இறுகக்கட்டிக்கொண்டு*
*ஆந்தையின்*
*வசைச்சத்தங்களில்*
*வாழ்ந்து*
*முடித்துவிட்டேன்,*

*என்*
*தாயில்லாத*
*அந்த இரவினையும்...*

## வயிற்றழல் போக்க விரைந்திட வேண்டும்

ஜின்னாஹ்

பற்றி எரிந்தது நாடு – புகை
பாரெல்லாம் செறிந்து பரவிய கேடு
முற்றிலும் அமைதியின் றென்றார் – இன்றும்
மக்கள் படும்துயர் யாரிடம் சொல்வோம்

பெற்ற குழந்தைகள் தம்மை – விட்டுப்
பிரிந்தவர் பற்பல ஆயிரம் போர்கள்
உற்றவர் சுற்றமும் பெற்ற – தங்கள்
உயிரி னனயதம் தாய்தந்தை யற்றோர்

யுத்தம் கணவரை உண்ண – எந்த
உறுதுணை யற்றுமே எம்நாட்டுப் பெண்கள்
நித்தம் தவிக்கின்ற கேட்டை – எண்ணி
நெஞ்சம் கனக்குதே ஈடிதற் குண்டோ

அள்ளிக் கொடுத்திட்ட கைகள் – இன்று
அங்கையை நீட்டி அலைகின்ற(து) அந்தோ!
கிள்ளிக் கொடுப்பதைத் தானே – உண்டு
காலத்தை யோட்டிடும் கொடுமையைக் காண்போம்

ஆட்சியைக் கைப்பற்ற வேண்டி – அண்டை
ஆன அயலவர் தம்வழி கொண்ட
மேட்டிமைப் பேச்செல்லாம் இன்று – ஏனோ
மண்ணில் புதைந்து மறைந்ததாம் அந்தோ!

பொய்யாய் அழுகின்ற பேர்கள் – ஒன்றைப்
புரிந்து தெளிந்து செயற்பட வேண்டும்
வையமே சேர்ந்தழு தாலும் – எம்மோர்
வயிறின்னும் காய்ந்திடில் வேஷமஃ தென்றே

கையள வேயெங்கள் நாடு – இங்கு
கஷ்டம் உறுபவர் பாதியில் மேலாம்
துய்ய மனங்கொண்ட மேலோர் – மக்கள்
துன்பந் துடைத்திடத் துணைசெய்கு வாரோ!

பாவமென் றெங்களைப் பார்த்து – யாரும்
பரிதாபங் கொண்டே துயருற வேண்டாம்
சாவினைத் தொட்டிடு முன்னே – உங்கள்
சக்திக்கென் றானதைத் தந்திட்டாற் போதும்.

*சென்ற இதழ் தொடர்ச்சி....*




### விரதிகளைக் கேலிசெய்த சீடப்பிள்ளை

**முன்னீடு :**

திங்கஸார் காயதௌ மத்திய பர்மாலிலுள்ள பயின்மனாவுக்குப் போயிருந்தார். அன்று நோன்பு நாளாதலின் நூற்றுக்கணக்கான அடியார்கள் வந்து அவரிடம் அட்டசீலங்களைப் பெற்றுக் கொண்டனர். அவர்கள் உற்சாகமாக வழிபாடு செய்தபோதும், உல்லாசப் பயணிகள் போல நடந்து கொண்டனர். மௌனம், தியானம், பிரார்த்தனை ஆகியவற்றில் ஈடுபடுவதே விரதிகளுக்கு அழகு என்று கூறிய சாயதௌ கண்ணியமாக நடந்து கொள்ளுமாறு புத்திமதி கூறினார். அதை விளக்க விரதிகளைக் கேலிசெய்த சீடப்பிள்ளை கதையைச் சொன்னார்.

**கதை :**

அன்று பூரணைநாள். கண்ணியமான கிராமத்துப் பெண்கள் தானத்தோடு மடத்துக்கு வந்திருந்தனர். தாம் கொண்டு வந்த உணவை தலைமைக் குருவிடம் சமர்ப்பித்தனர். அவரிடமிருந்து அட்ட சீலங்களைப் பெற்றுக் கொண்டு, மடத்து வளவில் மாமர, புளியமர நிழலில் அமர்ந்தனர். உள்ளே பிக்குமார் சமய நூல்களை ஓதிக் கொண்டிருந்தனர். அன்று சீடப்பிள்ளைக்கு வகுப்பில்லை. வளவில் உலாவிக் கொண்டிருந்தான்.

அந்தக் கண்ணியமான பெண்கள் பக்கம் அவன் போன போது அவர்கள் ஜெபம், தியானம் ஆகியவற்றில் ஈடுபடுவதற்குப்பதில், கலந்துரையாடலில் பொழுது போக்குவதைக் கண்டு ஆச்சரியப்பட்டான். ஏதோ சமய, ஒழுக்கப் பிரச்சினை குறித்து அவர்கள் விவாதிப்பதாக நினைத்து, அருகே போய் உற்றுக்கேட்டான். உரையாடல் ;

முதற்பெண்மணி : எண்ணெய் விலை அடுத்தமாதம் உயரும் என நினைக்கிறாயா?

இரண்டாம் பெண்மணி : நிச்சயமாக என் கணவர் கையிருப்பில் இருக்கும் எண்ணெய் பெரிய லாபம் தரும். எனக்கு ஒரு சோடி தங்கக் காப்பு வாங்கித் தருவதாக வாக்களித்திருக்கிறார் அவர்.

மூன்றாம் பெண்மணி : பொற்கொல்லனிடம் ஏமாந்து போக வேண்டாம் என்று உன் கணவனிடம் சொல்லு. சென்ற மாதம் ஒரு சோடி காப்பு வாங்கினேன். தங்கம் தரமில்லையென்று நிச்சயம் தெரியும்.

நாலாம் பெண்மணி : அவன் நேர்மையற்றவன் என்று சொல்லமுடியாது. அவனுடைய இரண்டாவது மகள் தொழில் பயில்வோனுடன் ஓடிப் போனதிலிருந்து, அவன் புலன் வேலையில் இல்லை.

சீடப்பிள்ளை கேட்டுக்கொண்டேயிருந்தான். உரையாடல் உடன் போக்கிலிருந்து திருமணங்களுக்கு, மருமக்களுக்கு, குடும்பத்தகராறுகளுக்கு, வழக்குகளுக்கு, பாகப் பிரிவினைகளுக்கு, காணி விலைக்கு, பவுண் விலைக்குப்போய், பழையபடி எண்ணெய் விலைக்கு வந்தது. பொழுது பட்டு விட்டது. மதிப்புமிக்க அம்மகளிர் தத்தம் இல்லங்களுக்குப் போக ஆயத்தமாயினர். சீடப்பிள்ளை 'கேற்' அடியில் போய்க் குந்திக் கொண்டான்.

கேற் வழியே வெளியேறுகையில் சீடனிடம், அவர்கள், "இன்றைய விரதநாள் பிரயோசனமாகக் கழிந்தது. சீடப்பிள்ளாய், எங்கள் புண்ணியத்தில் ஒருபங்கு உனக்காகுக!" என்றனர். சீடனோ, சம்பிரதாயப்படி, "புண்ணியத்தில் ஒரு பங்கை ஏற்றுக் கொள்கிறேன்!" என்று சொல்வதற்குப்பதில் "பூபூ ... வூவூ!" என்று கத்தினான். மதிப்புமிக்க அப்பெண்கள் தாங்கள் அவமதிக்கப்பட்டதாகக் கருதினர். தலைமைக் குருவிடம் திரும்பச் சென்று சீடனைத் தண்டிக்கும்படி கோரினர்.

தலைமை குருவுக்குக் கடுங்கோபம். கையில் பிரம்பை எடுத்தார். தண்டனை வழங்கச் சீடப்பிள்ளையை அழைத்தார். "மன்னிக்கவேண்டும் குருவே, இவர்கள் விரதம் அனுட்டிக்கவில்லை. ஊர்வம்பு பேசிக்கொண்டிருந்தார்கள்!" என்று பதிலளித்த சீடன், அன்று பிற்பகல் முழுவதும் இந்த மதிப்புக்குரிய பெண்கள் உரையாட, தான் கேட்டதையெல்லாம் திருப்பிச் சொன்னான். தலைமைக்குரு திறந்தவாய் மூடாது கேட்டுக் கொண்டிருந்தார். சீடன் சொல்லி முடித்ததும் பெருமூச்சு விட்டார். கையிலிருந்த பிரம்பைத் தூர வீசினார். கண்ணியம்மிக்க அப்பெண்கள் பக்கம் திரும்பினார். "பூபூ...வூவூ!" என்று சத்தமிட்டார்.

### கருவாடு விற்ற பெண்

**முன்னீடு :**

கீழை பர்மாவிலுள்ள ஒரு பட்டினத்துக்கு திங்கஸார் சாயதௌ போனபொழுது ஐந்நூறு அடியார்கள் அவரை வரவேற்றனர். ஒரு மடத்துக்கு அவரை அழைத்துச் சென்றார்கள். அங்கு அவரை ஒரு சமயப் பிரசங்கம் செய்யுமாறு வேண்டினர். "இது ஒரு நோன்பு நாளல்லவே. இங்குள்ள ஆண்களும் பெண்களும் என்னை வணங்கவே வந்தவர்கள். அவர்கள் தத்தம் வேலைக்குப் போக வேண்டுமல்லவா? நான் கொஞ்சநாள் இங்கிருப்பேன். என் உரையைக் கேட்க உங்களுக்குச் சந்தர்ப்பமிருக்கும். அதைவிட்டு, நான் இப்பொழுதே பிரசங்கம் செய்யத் தொடங்கினால், நீண்ட

பிரசங்கம் கேட்ட கருவாட்டு வியாபாரிபோல நடந்து கொள்வீர்கள்.

**கதை :**

கிராமம் முழுவதும் கால்நடையாகச் சுற்றிக் கருவாடு விற்றுச் சீவித்து வந்தாள் அந்தப்பெண். ஒரு நாள் பிற்பகல், வழமை போல, ஊரைச் சுற்றி வருகையில் சமய தீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்த ஒரு வீட்டைக் கடக்க நேர்ந்தது. அந்த நேரம் பார்த்து, பிரதம குரு பிரசங்கம் செய்யத் தொடங்கினார். அந்தப் பெண் எண்ணினாள்; "கருவாட்டு வியாபாரத்தில் மூழ்கிப்போய் நான் என் சமய அனுஷ்டானங்களைப் புறக்கணித்து விட்டேன். இன்னும் பொழுது படவில்லை. வணக்கத்துக்குரிய இக்குருவின் அறிவுரைகளைக் கேட்போம்"

முதலில் அவளுக்குப் பிரசங்கம் சுவாரஸ்யமாக இருந்தது. ஆனால் பிரதமகுரு நெடுநேரம் தொண தொண என்று பேசிக் கொண்டிருக்க – சூரியன் மறையும் நேரம் – அவள் நிலை கொள்ளாமல் தவித்தாள். குருவைப் பார்ப்பாள், பொழுதைப் பார்ப்பாள், தன் முந்தானையால் மூடியிருந்த கருவாட்டைப் பார்ப்பாள். "அட, இன்று மாலை ஒரு துரும்பு கூட விற்கவில்லையே! பிரசங்கம் தொடருமாயின் நன்றாக இருட்டிவிடும். ஊர்மனைக்குள் போகமுடியாது" என்று எண்ணலானாள். குருவானவரோ பேசிக்கொண்டிருந்தார். கருவாட்டுக்காரி சுற்றுமுற்றும் பார்த்தாள், சபையிலிருந்து யாரும் வெளியேறினால், தானும் சேர்ந்து கொள்ளலாம் என்று. ஆனால் எல்லோரும் பிரசங்கத்தில் மூழ்கிப்போய் இருந்தனர். அவள் பதற்றம் அதிகரித்தது.

ஒருவாறு பிரசங்கம் முடிந்தது. வீட்டுக்காரர் எழுந்தார். "நாம் இன்று செய்த இந்நல்ல காரியத்தின் பயனில் எல்லா உயிர்களும் பங்குகொள்வதாக!" என்ற வழமையான வாழ்த்தைத் தெரிவித்தார்.

பாவம், கருவாட்டுக்காரி! பதகளிப்பில் தானிருக்கும் சூழலை மறந்தாள்; எழுந்தாள்; உரத்துகூவினாள். "கருவாடு! பதப்படுத்தப்பட்ட கருவாடு! காற்பணத்துக்கு ஒரு துண்டு! ஓடிவா, ஓடிவா!"

## மருமகனோடு சேர்ந்து ஒப்பாரிவைத்த மாமியார்

**முன்னீடு :**

திங்கஸார் சாயதெள மூல்மெயினில் தங்கியிருந்த காலத்தில் சல்வீன் ஆற்றங்கரையில் இருந்த ஒரு கிராமத்தைச் சேர்ந்த முதியோர் குழு அவரைக்காண வந்தது. "சுவாமி, தங்கள் பிரசங்கங்களைக் கேட்டதன் பயனாக, சமய மறுமலர்ச்சிக்காகப் பாடுபடத் தீர்மானித்து, ஒரு மடத்தை நிறுவி, பிக்குகள் சிலரை அங்கு வந்து தங்கும்படி வேண்டினோம். அங்கு வரும் பிக்குகள் ஒருவர் பின் ஒருவராக வெளியேறி விடுகின்றனர்" என்று முறையிட்டனர். சாயதெள தன் திருக்கூட்டதிலிருந்து ஒரு பிக்குவை அங்கு போய் வதியுமாறு அனுப்பினார்.

சில மாதங்களுக்குப் பின், சாயதெள மூல்மெயின் போக நேர்ந்தது. அப்பொழுதும் சில முதியோர் அவரிடம் வந்து, அவர் அனுப்பிய பிக்கு திடீரென மடத்திலிருந்து வெளியேறி விட்டதாகவும், மீண்டும் ஒரு பிக்குவைத் தங்கள் மடத்துக்கு அனுப்பும்படியும் வேண்டினர். இம்முறையும் வந்த முதியவர்களோடு தன் பரிவாரத்திலிருந்த ஒரு பிக்குவை சாயதென அனுப்பிவைத்தார். மேலும் சில மாதங்கள் கழிந்தன. சாயதெள திரும்பவும் மூல்மெயின் போனார். அவர் முன்பு அனுப்பிய பிக்கு சொல்லாமற் கொள்ளாமல் வெளியேறி விட்டதாக, இம்முறையும் முதியோர் முறையிட்டனர். மூன்றாம் முறையும் சாயதெள தன் திருக்கூட்டத்திலிருந்து ஒரு பிக்குவை அனுப்பினார்.

அடுத்தமுறை சாயதென மூல்மெயின் சென்றார். "ஐயனே, தங்கள் மூன்றாவது சீடரும் எங்கள் மடத்தை விட்டு வெளியேறி விட்டார். எங்களுக்குத் தீராத கவலை" என்று முறையிட்டனர் மூத்தோர்.

"மதிப்புக்குரிய இல்லறத்தீர்! தன் மருமகனோடு சேர்ந்து ஒப்பாரி வைத்த மாமியார் போல, நானும் ஒப்பாரி வைக்க வேண்டியது தான்! "என்றார் சாயதெள.

**கதை :**

ஒரு கிராமத்தில் ஒரு குடியானவனும் அவன் மனைவியும் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு மூன்று அழகிய பெண்கள். ஒருநாள் 'சுகவாசி' என்னும் அழகிய இளைஞன் குடியானவனிடம் வந்து, தான் குடியானவனுடைய பண்ணையில் மூன்று வருடம் தொழில் பயில விரும்புவதாகச் சொன்னான். அவன் மிகவும் பணிவும் பண்பும் உள்ளவனாக இருப்பதைக் கண்ட தாய், மூன்று வருட முடிவில், மூத்த மகளுக்கு அவனை மாப்பிள்ளை ஆக்கினாள். துரதிர்ஷ்டவசமாக, கொஞ்ச நாளில் அப்பெண் இறந்து போனாள். இழவு வீட்டில் 'சுகவாசி' அழுதான்;

*"நீயில்லா உலகத்தில் நான் வாழ்வேனோ – மன*
*நிம்மதியை நீ கொண்டு போனாய் அன்பே!"*

இந்த ஒப்பாரியைக் கேட்ட மாமியார், வாய் திறந்தாள்.

*"துன்பம்வந்தாலும் சோராதே மருமகனே*
*இரண்டாம் பெண் இருக்கிறாள் போகாதே மருமகனே!"*

ஆக, சுகவாசி தொடர்ந்து பண்ணையில் வேலை செய்தான். சில காலம் செல்ல, இரண்டாவது மகளை அவனுக்குக் கட்டி வைத்தார்கள். அக்குடும்பத்துக்கு மீண்டும் சோதனை. இரண்டாவது மகளும் செத்துப் போனாள்.

*"நீயில்லா உலகத்தில் நான்வாழ்வேனோ – மன*
*நிம்மதியை நீகொண்டு போனாய் அன்பே!"*

என்று மருமகன் புலம்பினான். அது கேட்ட மாமியார்,

*"மனங்கலங்கி அழுதழுது மாயாதே மருமகனே*
*எனக்கின்னும் மகளொருத்தி இருக்கின்றாள் மருமகனே"*

என்று ஒப்பாரிவைத்தாள்.

ஆக சுகவாசி தொடர்ந்தும் பண்ணையில் வேலை செய்தாள். மாமியார் கடைசிமகளை அவனுக்குக் கட்டி வைத்தாள். ஆனால் கஷ்டகாலம். அந்தப் பெண்ணும் இறந்து போனாள். செத்த வீட்டில் சுகவாசி முன்புபோலப் புலம்பினான்:

*"நீயில்லா உலகத்தில் உயிர்வாழ்வேனோ! – மன*
*நிம்மதியை நீ கொண்டு போனாய் கண்ணே!"*

முந்திய சந்தர்ப்பங்களிற்போல, இம்முறையும் மாமியார் சேர்ந்து ஒப்பாரி வைத்தாள்.

*"புலியா நீ? பாம்பா என் பெண்களைநீ விழுங்கினையே!*
*வெளியேபோ என் வீட்டில் இடமில்லை, போடா போ!"*

*(தொடரும்)*

# கலைச்செல்விக் காலம்

**சிற்பி**



### 14. ஆசிரியர் தலையங்கங்கள்

அந்தக் காலத்தில் நிலவிய அரசியல் சூழ்நிலையே ‘‘கலைச்செல்வி’’யின் தோற்றத்துக்கு உடனடிக் காரணமாக இருந்தபோதிலும், அது என்றுமே ஒரு கலை, இலக்கிய ஏடாகத்தான் வெளிவந்துகொண்டிருந்தது. ‘‘தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவவேண்டும். தமிழனின் மொழி, கலை, கலாசாரம் ஆகியவற்றிற்கு அவற்றின் தொன்மை மணம் குன்றாமல் புதுமெருகேற்ற வேண்டும். இவைதான் ‘‘கலைச்செல்வி’’யின் நோக்கங்கள் என அதன் முதலிதழிற் குறிப்பிட்டிருந்ததை இந்தக் கட்டுரைத் தொடரின் ஆரம்பத்தில் நான் நினைவூட்டியிருந்தேன். எனினும் அரசியலை முற்று முழுதாகப் புறக்கணிக்க ‘‘கலைச்செல்வி’’யால் முடியவில்லை. அரசியல் நிலை சம்பந்தமான கருத்துக்களைச் சில சந்தர்ப்பங்களில் வெளியிடவேண்டித்தான் இருந்தது.

தனிச் சிங்களச் சட்டம், பண்டா – செல்வா ஒப்பந்த முறிவு, இனக்கலவரம் போன்றவற்றிற்குப் பின்னர் இந்த நாடு பொதுத் தேர்தலொன்றைச் சந்திக்கவிருந்த வேளையில் ‘‘கலைச்செல்வி’’யில் வெளிவந்த ஆசிரியத் தலையங்கம் முழுக்க முழுக்க அரசியல் சம்பந்தமானதாகவே இருந்தது.

‘‘நம் தாய்த்திருநாடு முன்னேற வேண்டுமானால், தமிழன் தமிழனாகவே வாழவேண்டும்; சிங்களவன் சிங்களவனாகவே வாழவேண்டும். தனித்தன்மையைக் காப்பது அவசியம்; பொதுப்பணியில் ஒத்துழைப்பது இன்றியமையாதது. வேற்றுமைகள் தவிர்க்கமுடியாதவை. அவற்றினூடாக ஒற்றுமை காண்பது உயரிய பண்பு.

பொதுத் தேர்தல் வருகின்றது. நமது தலைவிதியை நாமே நிர்ணயிப்போம்.

அதைத்தான் மறந்தாலும் ஒன்றை மட்டும் மறக்கக்கூடாது.

நாம் தமிழர்கள்.

இது வகுப்புவாதமென்றால், இந்த வகுப்பு வாதம் அடியோடு வாழ்க!

அந்தத் தலையங்கத்தின் ஒரு பகுதி – முக்கியமான பகுதி இது.

தலையங்கம் அழுத்திய கருத்தையும் அது சொல்லப்பட்ட முறையையும் பாராட்டிப் பல வாசகர்கள் எழுதியிருந்தனர். மகிழ்ச்சியாக இருந்தது.

ஆனால், நண்பர் சு. இராஜநாயகம் இரண்டே இரண்டு வரிகளில் எழுதிய ஒரு கடிதம் பேரதிர்ச்சியை ஏற்படுத்தி விட்டது. தனிப்பட்ட சில காரணங்களுக்காகக் ‘‘கலைச்செல்வி’’யின் இலக்கிய சேவையில் தன்னால் தொடர்ந்து இணைந்துகொள்ள முடியாதிருப்பதாகவும், தன் பெயரை வெளியீட்டாளர் எனப் போடவேண்டாம் என்றும் அவர் எழுதியிருந்தார். எழுத்தாளர்கள் – வாசகர்கள் மத்தியில் மெல்ல மெல்ல நல்ல பெயரைக் ‘‘கலைச்செல்வி’’ பெற்றுக் கொண்டிருந்த வேளையில் தரமான ஓர் எழுத்தாளரும் பண்பாளரும் நல்ல நண்பருமான அவர் அத்தகைய முடிவை எடுத்ததற்காக நான் வருந்தினேன். காரணத்தை வெளிப்படையாக அவர் எழுதவில்லை. எனினும் என்னால் அதைச் சரியாக ஊகிக்க முடிந்தது. மேலே நான் குறிப்பிட்ட தலையங்கம் ‘‘கலைச்செல்வி’’யில் இடம்பெற்றது அவருக்குப் பிடிக்கவில்லை!

அந்தக் காலத்தில் தமிழ்ப் பிரதேசங்களில் அதிக செல்வாக்கைக் கொண்ட கட்சிகளாக இலங்கைத் தமிழரசுக் கட்சியும், அகில இலங்கைத் தமிழ்க் கொங்கிரசும் விளங்கின. இரண்டையும் வகுப்புவாதக் கட்சிகளாகக் கருதியோரும் தமிழ் மக்களுக்குச் சம உரிமை வழங்கப்படவேண்டும் என்பதைத் தம் கொள்கையாகக் கொண்ட லங்கா சமசமாசக் கட்சி, பொதுவுடைமைக் கட்சி போன்ற அகில இலங்கை ரீதியாக இயங்கும் கட்சிகளால் தான் தமிழர்களுக்கு விமோசனம் உண்டு என நம்பியவர்களும் அந்தக் கட்சிகளை ஆதரித்தனர். ஆனால், தமிழர்கள் எல்லோருமே கட்சி வேறுபாடின்றி – தமிழர்களின் தனித்தன்மை காப்பாற்றப்பட வேண்டும்; சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதிற் கண்ணாயிருந்தனர். லங்கா சமசமாசக் கட்சியின் உறுப்பினராயிருந்த நண்பர் இராஜநாயகன் அந்த ஆசிரியத் தலையங்கத்தில் என்ன குற்றத்தைக் கண்டார் என்பது எனக்கு விளங்கவில்லை. இவ்விடயமாக நான் அவருடன் எவ்வித விவாதத்திலும் ஈடுபட விரும்பவுமில்லை. அந்தத் தலையங்கத்தைச் ‘‘சுதந்திரன்’’ மறுபிரசுரஞ் செய்திருந்தது. ‘‘கலைச்செல்வி’’யின் அரசியற் போக்குச் சம்பந்தமான சில சந்தேகங்கள் அவரிடம் ஏற்பட்டிருக்கக்கூடும்; அத்தகைய ஒரு சஞ்சிகையின் பதிப்பாசிரியனாகச் சமசமாசக் கட்சியைச் சேர்ந்த தான் இருப்பது பொருத்தமில்லை எனவும் நினைத்திருக்கக்கூடும்.

‘‘வாழ்க வகுப்பு வாதம்’’ என்ற தலையங்கத்தைப் படித்துவிட்டு பாராட்டிப் பலரும் கண்டித்துச் சிலரும் எழுதியுள்ளனர். இலங்கை மக்களிடையே ஒற்றுமை மிகமிக அவசியமாகத் தேவைப்படுகின்ற இந்த நேரத்திலே இப்படியான ‘‘துவேஷக்’’ கருத்துக்கள் கூடாது என்பதைக் ‘‘கண்டிப்புக்’’ கடிதங்கள் காட்டுகின்றன. தமிழன், தான் தமிழன் என்பதை மறந்துவிடக் கூடாது என்று நாம் சொல்வது எவ்வாறு துவேஷப் பிரசாரமாகும். பாரதியார், திரு. வி. க., டாக்டர் மு. வ முதலிய பெரியோர்கள் கூறிய கருத்தைத்தானே நாமும் கூறினோம்! திறந்த உள்ளத்துடனும் பொறுமையுடனும் அத்தலையங்கத்தை மீண்டும் படித்தால் நமது கருத்து ஒற்றுமைக்கு வித்திடுமே தவிர வேற்றுமைக்கு வழி வகுக்காது என்பதை இலகுவில் உணரலாம்’’ எனக் ‘‘கலைச்செல்வி’’ பெப்ரவரி – மார்ச் இதழில் ‘‘அன்பார்ந்த நேயர்களே’’ பகுதியில் என் விளக்கத்தை எழுதியிருந்தேன்.

‘‘கலைச்செல்வி’’யை நடத்திய யாழ். தமிழ் இலக்கிய மன்றத்தின் உறுப்பினர்கள் யாருமே அரசியல்வாதிகளல்லர். தனிப்பட்ட முறையிற் சிலர், சில கட்சிகளின் ஆதரவாளர்களாக

இருந்தனர். ஆனால், ''கலைச்செல்வி''யில் வெளியிடக்கூடிய ஆக்கங்களைத் தெரிவு செய்வதில் அவற்றை எழுதியவர்களின் அரசியல், சமூக, சமயச் சார்புகள் எவையுமே தடையாக இருந்ததில்லை; அவற்றின் இலக்கியத் தரம் மட்டுமே கணக்கிலெடுக்கப்பட்டது. ''கலைச்செல்வி'' – தமிழரசுக் கட்சிக்காரரின் பத்திரிகை, முற்போக்கு அணிக்கு எதிரான பிற்போக்குப் பத்திரிகை என்ற கருத்தைச் சிலர் இடைக்கிடை வெளியிட்டு வந்தனர். ''முற்போக்கு இயக்கத்திற்கு எதிராக செயற்பட்டுவந்தபடியால்தான் ''கலைச்செல்வி'' தொடர்ந்து வெளிவரமுடியாமற் போய்விட்டது என்ற சாரப்பட அமரர் கலாநிதி க. கைலாசபதி அவர்களும் ஒரு தடவை குறிப்பிட்டிருந்தார்கள்.

''கலைச்செல்வி'' வெளிவரத் தொடங்கிச் சில மாதங்கள் கடந்தபின் ''கலைமதி'' என்ற ஒரு மாத இதழ் உதயமானது. கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஆசிரியர்களாகப் பணிபுரிந்த திருவாளர்கள் வ. பொன்னம்பலம், சி. ஆறுமுகம் (வித்துவான்), வ. கந்தசாமி (மாதகல்), இ. பொன்னையா (நீர்வை பொன்னையன்) முதலியோரடங்கிய குழுவொன்று அதன் வெளியீட்டிற்குப் பொறுப்பாக இருந்தது. இந்தக் குழுவில் வேறு யாரும் இருந்தார்களா என்பது இப்போது என் நினைவில் இல்லை. அது ஒரு முற்போக்கு இலக்கியச் சஞ்சிகையாகவே வெளிவந்தது. இருந்தபோதிலும், சில இதழ்களுடன் அது தன் ஆயுளை முடித்துக்கொண்டது. ஆனால் அதற்குரிய காரணத்தை அமரர் கைலாசபதி எங்கும் குறிப்பிட்டதாகத் தெரியவில்லை.

''இலக்கியம் என்பதில் முற்போக்கும் இருக்கின்றது. ஆகவே, மேலதிகமாக 'முற்போக்கு இலக்கியம்' என்று சொல்லத் தேவையில்லை என்பதே ''கலைச்செல்வி''யின் நிலைப்பாடு. சிறந்த சிந்தனையாளரும் இலக்கிய விமர்சகரும் முற்போக்கு இலக்கியம் சம்பந்தமான விளக்கக் கட்டுரைகள் சிலவற்றை எழுதியவருமான கலாநிதி கா. சிவத்தம்பி விமர்சன ரீதியான ஆய்வின்போது, சில ஆக்கங்களுக்கிடையேயுள்ள வேறுபாடுகளைக் காட்டுவதற்கு வசதியாக முற்போக்கு இலக்கியம் என்ற தொடர் கையாளப்பட்டதே தவிர, உண்மையில் அப்படியான இலக்கியப் பிரிவு இல்லை எனச் சில ஆண்டுகளின் முன்னர் ஒரு பேட்டியில் கூறியுள்ளார் என்பதை இவ்விடத்தில் நினைவூட்ட விரும்புகின்றேன்.

எனினும், ''கலைச்செல்வி''யின் இலக்கியப் போக்கைக் கண்டித்துக் கருத்து வெளியிடுவோர் இருக்கத்தான் செய்தனர். ஆனால், அவர்களைப் பற்றி அதிகம் அலட்டிக்கொள்ளாமல் அது தன் பணியைத் தொடர்ந்தது.

''கலைச்செல்வி''யின் பிரசுரிப்பாளர் என்ற நிலையிலிருந்து நண்பர் இராஜநாயகன் தன்னை விடுவித்துக் கொண்ட போதிலும் அவருக்கும் எனக்குமிடையே இருந்த நட்பு எவ்வித பாதிப்புமின்றித் தொடர்ந்தது. சில மாத இடைவெளியின் பின்னர், கலைச்செல்வியின் வளர்ச்சியில் மீண்டும் அவர் அக்கறை எடுக்கத் தொடங்கியது எனக்கு உற்சாகத்தை அளித்தது.

தமிழ் இலக்கியம், தமிழ் எழுத்தாளர் என்பவற்றுக்கும் மேலாக இந்தத் தேசத்தின் இலக்கியம் சம்பந்தமாக 1960 ஏப்ரல் – மே இதழின் ஆசிரியத் தலையங்கம் அமைந்திருந்தது.

''இன்று எல்லாத் துறைகளிலும் தேசியம் பற்றிப் பேசப்படுகின்றது. அரசியலில் தேசியம், மொழியில் தேசியம், இலக்கியத்திலும் தேசியம்.

அந்த நாட்டவர்க்குப் பதிலாக இந்த நாட்டவர் ஆட்சியை நடத்துவது – அரசியலில் தேசியம்.

வந்த மொழி வகித்த இடத்தை நம் சொந்த மொழி வகிப்பது – மொழியில் தேசியம்.

மற்றவர் கால்களில் நிற்காது உற்றவர் கால்களில நிற்பது பொருளாதாரத்தில் தேசியம்.

ஆனால், இலக்கியத்தில்....?

நம் நாட்டிலுள்ளோரின் பெயர்களைக் கதாபாத்திரங்களுக்குச் சூட்டுவதாலோ, நமது மொழியைப் பேச வைப்பதாலோ, உருவத்தையும் உடையையும் மாற்றுவதாலோ தேசிய இலக்கியம் பிறந்துவிடுமா?

இவை வேண்டும்; இன்னமும் வேண்டும்.

இந்நாட்டு மக்களின் நோக்கம், ஏக்கம், இன்பக் கற்பனை, இலட்சியக் கனவு, உள்ள நெகிழ்ச்சி, உணர்ச்சிப் பரப்பு – ஆகிய எல்லாம் எங்கள் இலக்கியப் படைப்புக்களிற் பிரதிபலிக்க வேண்டும்; எங்கள் நாட்டு மண்ணின் வாசனை வீச வேண்டும்.

உலகத்தின் பிரதான மொழிகளில் எழுந்த இலக்கியங்கள் பல நோபல் பரிசு பெற்றுவிட்டன. தமிழிலோ, சிங்களத்திலோ எந்த நூலாவது பரிசு பெற்றுள்ளதா?

அதுதான் போகட்டும்.

உலகத்தின் இலக்கியப் படையல்கள் அனைத்தும் குவிந்திருக்கின்ற இடத்தில் யாராவது தகுதி வாய்ந்த திறனாய்வாளர்கள் ''இது இலங்கையின் இலக்கிய சிருஷ்டி'' என்று பிரித்தெடுத்துப் பெருமை பாராட்டுமளவிற்காவது தனித்தன்மையுடன், தனித் திறமையுடன் நாம் இலக்கியம் சமைக்க முடியாதா?''

''தேசிய இலக்கியம்'' என்ற மகுடத்துடன் வெளியான இந்த ஆசிரியத் தலையங்கத்தைப் பலர் பாராட்டி வரவேற்றிருந்தனர். ''வாழ்க வகுப்பு வாதம்'' என்ற தலையங்கத்தைக் கண்டித்திருந்த சிலரும் இந்தத் தலையங்கத்தைப் பாராட்டி எழுதிக் ''கலைச்செல்வி''யுடன் சந்து செய்து கொண்டனர்.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் அட்டைப் படத்துடன் வெளியான 1960 பெப்ரவரி – மார்ச் இதழில் இரண்டு சிறுகதைகள் இடம்பெற்றன. ''வாழ்வளித்த தெய்வம்'' என்ற இந்தக் கதையின் மூலம் எழுத்துலகில் இறங்கும் ''வதனி'' யாழ்ப்பாணத்திலுள்ள கல்லூரி ஒன்றிற் கல்வி பயில்பவர். அன்பு அழியாது என்ற அருமையான கருத்து; அழகான நடை – இவற்றைக் கதையிற் காணலாம் என்ற குறிப்புடன் ''வதனி''யின் கதை பிரசுரமானது.

எழுத்துலகிற்குப் புத்தம் புதியவர் செல்வி. ராஜவதி ராஜரெத்தினம் B.A ''அன்பின் வெற்றி'' அவருடைய முதற்கதை. தமிழ்ப் பெண்ணின் பரம்பரைச் சொத்தான அன்பையும் தியாகத்தையும் பண்பட்ட நடையில் வெளியிடுகின்றது கதை என்ற குறிப்புடன் ராஜவதியின் கதை வெளியிடப்பட்டது.

அறிமுகத்திற் குறிப்பிட்டிருந்ததைப் போல் இருவருமே புதிய எழுத்தாளர்கள்; பெண்கள். கதைகள் நன்றாக இருந்தபோதிலும் அவர்கள் தொடர்ந்து ''கலைச்செல்வி''யில் எழுதியதாகத் தெரியவில்லை. நியூசிலாந்தை வாழ்விடமாகக் கொண்ட ராஜி வல்லிபுரநாதன் அவர்களின் ''உன் மனம் நானறிவேன்'' சிறுகதைத் தொகுதி சென்னை மணிமேகலைப் பிரசுரமாக வெளிவந்துள்ளது. கதாசிரியரின் முன்னுரையிலிருந்து அவரே ''வதனி'' என்பது தெரிகின்றது. புலம்பெயர் இலக்கிய உலகில் அடிக்கடி பேசப்படும் பொ. கருணாகரமூர்த்தி அவர்களின் உறவினர் அவர். தன்னை எழுத்தாளராக அறிமுகப்படுத்தி வைத்த ''கலைச்செல்வி''க்கு அந்த முன்னுரையில் நன்றி தெரிவித்திருக்கின்றார். செல்வி ராஜவதி ராஜரெத்தினம் எழுத்தாளராகவே தொடர்ந்தும் இருக்கின்றாரா என்பது தெரியவில்லை.

இனி அடுத்த இதழில்

# நேர் காணல் (6)

சந்திப்பு : தி. ஞானசேகரன்



தெளிவத்தை ஜோசப்

**16.02.2009ல் அகவை எழுபத்தைந்தை நிறைவு செய்து பவள விழா ஆண்டில் தடம்பதித்துள்ள தெளிவத்தை ஜோசப் அவர்களின் இலக்கியப் பணிகளைக் கௌரவிக்கும் முகமாக இந்த நேர்காணல் தொடரை ஞானம் வழங்குகின்றது.**

**தி.ஞா :- அந்நாட்களில் இந்தியாவிலிருந்து வந்தவர்கள் மண்டபம் முகாமினூடாக வரவேண்டும் என அறிகின்றேன்... உங்களுக்கு மண்டப முகாம் அனுபவம் கிடைத்தா?**

ஆண் துணையின்றி அம்மா தனியாக வருவதால் தோட்ட நிர்வாகம் மூலம் இந்தியா சென்று திரும்பிவரும் தோட்டத் தொழிலாளர்களைக் கூட்டிவரும் ஒரு கங்காணியுடன் கும்பகோணம் ரயில்வே நிலையத்தில் நாங்கள் மூவரும் – அம்மா – அண்ணன் – நான் – இணைத்துவிடப்பட்டோம்.

கண்காணம் – கண்காணிப்பு – என்ற இரு சொற்களும் மேல்விசாரணை, மேற்பார்வை, காவல் என்றவாறாக அர்த்தம் கற்பிக்கின்றன.

நாங்கள் சேர்த்துவிடப்பட்ட கறுப்புக்கோட் கட்டைக் கால்சட்டை கங்காணியும் இவை மூன்றையும் மிக அருமையாகச் செய்தார்.

முதலில் விசாரித்தார், அப்புறம் மேற்பார்வையாளராக இருந்தார். ஹாலி எலை ரயில் நிலையத்தில் கடைசியாக இறக்கிவிட்டு ஆஞாவிடம் ஒப்படைக்கும்வரை காவலாக உடன் வந்தார்.

கங்காணி என்ற சொல்லின் மூலமே கண்காணமும் – கண்காணிப்பும்தான்!

மண்டபம் கேம்பில் ஒரு வாரம் தங்காமல் பயணத்தைத் தொடர அம்மா எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. கங்காணியும் அதற்கு ஒத்துழைக்கவில்லை.

“நான் கூட்டிக்கிட்டுப்போற ஆளுகல்லாம் மண்டபத்துல ஏழு நாள் தங்கித்தான் போகும்! அம்மா மாத்திரம் தம்பிமார்களோட இப்பவே போகணும் ஏத்தி விடுன்னா எப்புடி... கூட வாறது யாரு... ஏதாவது ஆயிட்டா எங்கப்பன் வெள்ளைக்காரனுக்கு பதில் சொல்லுறது யாரு” என்பது கங்காணியின் வாதம்.

“கேம்பில் தங்காமல் போகவேண்டும் என்றால் அதற்கான சில வழிமுறைகள் உண்டு. மலேரியாக் காய்ச்சல், அம்மைநோய், வயிற்றோட்டம், ஆகியவைகள் கிடையாது என்பதற்கான, பயணத்துக்கு முந்திய மெடிக்கல் றிப்போர்ட் இருக்க வேண்டும்” என்பது மண்டபம் முகாம் உத்தியோகத்தர் களுடைய வாதம்.

அம்மாவின் முறைப்பாடுகள், எதிர்வாதங்கள் ஒன்றும் சரிப்படாத நிலையில் மண்டபம் கேம்பில் தொழிலாளர்களுடன் ஏழு நாள் தங்கல் ஊர்ஜிதமாயிற்று.

கடற்கரைபோல், மெத் மெத்தென்று ஊன்றிய பாதத்தை உள்ளிழுத்துக் கொள்ளும் மணற் பிரதேசம் இந்த கேம்ப்.

பருத்து, உயர்ந்து கிளைபரப்பி நிற்கும் வேப்பமரக்காடு. வீசும் காற்று வேப்ப மர உச்சிகளில் விளையாடி மகிழ்வதால் எழும் சலசல ஓசை, தரைநோக்கி மிதந்து வரும் பழுத்த வேப்பிலைகள். இலைகளை முந்திக்கொண்டு மெல்லிய பொத் பொத்தென்ற ஒலியுடன் மெத்தை மணலில் விழுகின்ற வேப்பம் பழங்கள்.

கட்டை விரல் மொத்தமான இந்தப் பழங்களைப் பொறுக்கிச் சேர்ப்பதும், காம்பு பிய்ந்த இடத்தில் ஒட்டிக்கிடக்கும் மணலை ஊதி ஊதி அகற்றிவிட்டு வாய்க்குள் வீசிச் சப்பிச் சுவைப்பதும் எங்கள் இருவருக்கும் மகிழ்வான தருணங்கள்.

ஒரு இனிமை கலந்த கசப்புடனான அந்தவேப்பம் பழச்சுவை – மண்டபத்தின் கொழுத்தும் வெய்யிலுக்கு இதம் தருவது.

முகாம் மண்டபத்தின் சிமிந்தித்தரையில், பாய் விரித்து அமர்ந்திருக்கும் அம்மாவைச் சுற்றி ஆறேழு பெண்கள் பேசிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஏழு நாள் பொழுது போகவேண்டுமே! கதைகள் வேண்டாமா! பொழுது போகவும் கதைகள் எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும் இருந்திருக்கின்றன தான்! அதற்கான தேவையும் இருந்திருக்கின்றதுதான்!

இதோ அம்மாவும் அவர்களைச் சுற்றி ஆறேழு பெண்களுமாக – எத்தனைக் கதைகள்.

பொழுதுபோக்குக் கதைகள். புகார்க்கதைகள்; எதிர்ப்புக் கதைகள், ஏளனக் கதைகள்...

இவைகள் எல்லாவற்றிலுமிருந்து மீண்டெழுந்து வரும் கதைதான் ‘சிறுகதை’ என்னும் வகை. கதைக்கும் சிறுகதைக்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு. சிறுகதை என்பது தன்னளவில் முழுமைபெறும் ஒரு தனி வடிவம்.

தமிழின் முதல் சிறுகதையாளர்களாகக் கொள்ளப்பட்ட மூவரில் முதியவரான அ. மாதவய்யா அவர்கள் ஹிந்து

ஆங்கிலப் பத்திரிகையில் 1910ல் வாரம் ஒரு கதையாக எழுதிய கதைகள் இரு தொகுதிகளாக Kusika's Short Stories என்று வெளியிடப்பட்டன. இந்த நூல் பற்றிய விமர்சனத்தை எழுதிய றிச்சர்ட் கென்னடி என்னும் அமெரிக்க விமர்சகர் 'மாதவய்யாவுக்கு சிறுகதை என்பது ஒரு தனியான இலக்கிய வடிவம் என்ற உணர்வு இருந்ததில்லை: Short Story என்பது சின்னதான கதை அல்ல குட்டிக்கதையும் அல்ல அது ஒரு புதிய இலக்கிய வடிவம் என்கின்றார்.

மாதவய்யாவின் கதைகள் வெறுமனே தகவல்களைத் தரும் செய்திகள் தான் என்று வேதசகாயககுமார் கூறுகின்றார். தனது தமிழ்ச் சிறுகதை வரலாறு நூலில்.

ஆங்கில இலக்கியத்தில் இவருக்கிருந்த அறிவு காரணமாக இவருடைய சிறுகதைகளில் உருவம் சிறப்பாக அமைந்து விடுவதாகக் குறிக்கின்றார் பேராசிரியர் சிவத்தம்பி.

சிறுகதைகள் போலவே இந்த விமர்சனங்களும் எந்த இலக்கணத்துக்கும் கட்டுப்படாதவைகள்.

**தி.ஞா :- மண்டபம் கேம்பிலிருந்து மாதவய்யாவிடம் ஓடிவிட்டீர்கள்...**

நினைத்தேன்! இப்படிக் கேட்பீர்கள் என்று நினைத்தேன்! அம்மாவுடன் அந்தப் பெண்கள் கதை பேசிக்கொண்டிருந்ததால் கடிவாளம் அறுந்துவிட்டது. கதை – சிறுகதை என்று எங்கோ ஒடிவிட்டேன். பேசிக்கொண்டிருந்த பெண்களின் கால்களுக்கடியில் தெரிந்த அம்மாவின் பாதங்களைச் சுரண்டி கை நிறைந்த வேப்பம்பழங்களைக் காட்டினோம். வேண்டாம் என்று தலையாட்டியபடி "போய் வெளையாடுங்க... தூரப் போகக்கூடாது. இப்ப மருந்துக்கழைப்பானுக..." என்றார்கள் அம்மா. காலையில் தேத்தண்ணி நல்லாவே இல்லை.. களனித்தண்ணியாட்டம்... என்று ஒரு பெண் அம்மாவிடம் கூறிக்கொண்டிருந்ததை காதில் வாங்கியபடி மணலில் குதித்து ஓடினோம்.

முட்கம்பி வேலி அடித்துள்ள வேம்பின் எல்லை வரை சென்று விளையாடிய நினைவு இருக்கிறது. திரும்பி வரும்போது சில பெண்கள் கூட்டமாக நின்று வேப்பம்பழம் சப்பிச் சுவைத்து முகத்தைக் கோணலாக்கிக்கொண்டிருந்தனர். அந்த இனிப்பும் கைப்பும் முகத்தை அப்படி வைத்துக் கொள்ளத்தான் செய்யும். முகத்தையும் சுளித்துக்கொண்டு அதைச் சுவைக்காவிட்டால் என்ன என்று கேட்கக்கூடாது. மனித இயல்பு அது.

பயமாக இருக்கும் என்று தெரிந்து கொண்டே காசு கொடுத்து ஏன் பயங்கரப் படங்களைப் பார்க்கப் போகின்றோம். நம்மைப் பயமுறுத்திக் கொள்வதில் நமக்கு ஒரு சுகம் இருக்கிறது. இதுவும் அதைப்போலத்தான்! 'ஸ்வீட் அன்ட் சவர்' ஹோட்டல்கள் போல.

முகம் சுளித்த பெண்கள் எங்களைக் கண்டதும் வேப்பங்காய்களை மணலில் உமிழ்ந்து துப்பிவிட்டு 'தம்பி தம்பி' என்று அழைக்கின்றார்கள். அண்ணன்தான் என்னக்கா என்று கேட்டார்.

"கம்பிக்கு வெளியே கடைகள் ஏதாவது இருக்கிறதா?"

"ஓ, இருக்கே... கம்பிக்கு வெளியே கொஞ்சம் தூரத்தில் தேத்தண்ணிக்கடை கூட இருக்கு"

"கம்பிக்குள்ளால பூந்து போய் கொஞ்சம் வடை வாங்கியாறியா தம்பி..."

நாங்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டோம். மாட்டேன் என்று மறுத்து ஓடிவிடுவோமோ என்ற அச்சம் அவர்களின் முகத்தில் தெரிகிறது.

"நீங்க ரெண்டு பேரும் ஆளுக்கொரு வடை எடுத்துக்கிறுங்க..." என்கின்றார்கள்.

இந்தத் தூண்டிலில் அண்ணன் வசமாகவே மாட்டிக் கொண்டார். இருவருமாக ஓடினோம் முட்கம்பி எல்லைவரை. முட்கம்பியை உயர்த்தி நுழைந்து எல்லை தாண்டி ஓடி வடைப் பார்சலுடன் அண்ணன் திரும்பி வருகின்றார். சுற்றும் முற்றும் பார்த்து டக்கென உள்நுழைந்து எங்கள் வருகைக்காக காத்து நிற்கும் பெண்களிடம் வந்தோம். பார்சல் கை மாறியது. முதலில் மறுத்தாலும் பிறகு ஆளுக்கொரு வடை பெற்றுக்கொண்டோம். வேப்பமர நிழலில் அமர்ந்து சிறிது நேரம் கழித்து வெறும் கையுடன் அம்மாவிடம் வந்தோம்.

வடை தின்ற கதை அம்மாவுக்குத் தெரிந்தால் தொலைந்தோம்.

மற்றப் பெண்களுடன் அம்மாவும் ஊசி குத்திக் கொண்டு வருகின்றார்கள். "எங்கே போனீர்கள்? மருந்து கொடுக்கத் தேடுகிறார்கள். கங்காணி ஒரு பக்கம் தேடுகின்றார்" என்று எங்களை இழுத்துக்கொண்டு ஓடுகின்றார் அம்மா.

மண்டபம் முகாமில் சுகவீனச் சோதனைக்காகத் தங்க வைத்திருக்கும் ஆட்களுக்கு கேம்பிற்குள்ளே காலையில் தேநீர், பிறகு காலை உணவு, பகல் சாப்பாடு, இராச் சாப்பாடு என்று சகலதும் வழங்கப்படுகின்றது. வெளியில் இருந்து சாப்பாட்டுப் பொருள் ஏதும் உள்ளே கொண்டு வரக்கூடாது என்பது சட்டம். சட்டத்தை மீறிய இரண்டு குற்றங்கள் எங்கள்மேல் இருப்பதாக எனது சின்ன மனம் குத்திக் காட்டுகிறது.

காலையில் கொடுத்த தேநீர் களனி நீர்போல் இருந்ததாக அந்தப் பெண் அம்மாவிடம் முறையிட்டார்.

அம்மாவிடம் கூறி என்ன செய்ய! ஆபீசர் மார்களிடம் கூறவேண்டும். அந்த வடை கேட்ட பெண்களுக்கும் பசியாக இருக்க வேண்டும். அல்லது வழமையான அவர்களது உணவு சலிப்பைக் கொடுத்திருக்க வேண்டும். அதற்குத்தான் அந்த குறுக்கு வழி – சட்ட மீறல்.

அதுவும் குற்றம்தான். பொறுப்பானவர்களிடம் முறை யிட்டிருக்க வேண்டும். மாற்றுணவுக்காக கம்பிகளுக்குள் நுழைய முடியும் என்பதற்காக சின்னப் பையன்களை பலிக்கடாவாக்குவதா! எல்லை தாண்டும்போது மாட்டிக் கொண்டால்...

மாட்டிக்கொண்டால்என்ன;மூன்றாவது நாள் வடையுடன் வந்து நுழையும் போது முரட்டுக்கரம் ஒன்று பற்றி இழுத்துக் கொண்டது.

அண்ணன் பிடிபட்டதும் முட்கம்பியோரம் நின்ற நான் மணலில் புதையுண்டு புதையுண்டு தலைதெறிக்க ஓடிவந்தேன். வடையுடன் அண்ணனை காவல்காரன் பிடித்துக்கொண்ட விஷயம் தெரிந்ததும் வாங்கிவரச் சொன்ன அந்தப் பெண்கள் மாயமாய் மறைந்து போயினர். ஓடிவந்த நான் அம்மாவிடம் கூறினேன். அம்மா ஆபீஸ் ரூமை நோக்கி ஓடினார்கள். கங்காணி அங்கே காவலாளியுடன் சமரசம் பேசிக் கொண்டிருந்தார்.

வடை பறிமுதலாகிவிட்டது. அண்ணனை விட்டு விட்டார்கள்.

"ஏன்மா சின்ன பிள்ளையாட்டம்" என்னும் கங்காணியின் கேள்விக்கு அம்மாவால் பதில் கூற முடியவில்லை. கவிழ்ந்த தலை நிமிரவுமில்லை!

குற்ற உணர்வு எங்களைக் கொல்கிறது.

'இன்னமுது ஊட்டி, இன்பத்தாலாட்டி எங்களை ஆளாக்கிய அன்னை... அண்ட சராசரம் கண்கண்ட தெய்வம்...' என்று கும்பகோணம் லிட்டில் பிளவர் ஹைஸ்கூலில் மேடையேறிப் பாடிய பாடல்... எனது நினைவுகளில் வந்தது. அம்மாவின் மௌனம் என்னையும் அண்ணனையும் சித்திரவதை செய்தது.

அடுத்த நாள் "வா விளையாடப் போவோம்" என்றழைத்தார் அண்ணன்.

நேற்றைய நிகழ்வு – அதனால் அம்மாவுக்கு ஏற்பட்ட தலைக்குனிவு ஆகியவை அண்ணனுக்கு மறந்து போய் விட்டதோ என்கின்ற கோபத்துடன் உடன் நடந்தேன்.

கங்காணியார் இருக்கும் அறை நோக்கி நடக்கின்றார் அண்ணன். மூன்று நாட்கள் நடந்த சட்ட மீறல் பற்றி – எல்லை மீறிய கம்பி நுழைவு பற்றி விரிவாகக் கூறி விளக்குகின்றார். கங்காணியைக் கவர்ந்துவிட்ட அண்ணனுடைய விபரிக்கும் திறமை எனக்கு வியப்பளிக்கவில்லை! அமலத்தானும் அண்ணனும் S.I.R. என்கின்ற சவுத் இன்டியன் ரயில்வேக்காரர்களையே கதிகலக்கியவர்கள் ஆயிற்றே! இந்த கங்காணி எந்த மூலை!

'அவளுகளா... நம்ம பேட்ச் இல்லையே... சரியான இவுளுகளாயிற்றே என்று குறைபட்டுக் கொண்டவர் அம்மாவிடம் வந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். அம்மா மௌனமாகப் புன்னகைத்தார்கள்.

ஆறு நாட்கள் முடிய ஏழாவது நாள், தரையில் காலூன்ற முடியாத உச்சி வெயிலில் ஓடி ஓடி கோச்சேறி, கப்பல் ஏறி, மீண்டும் கோச்சேறி பொல்காவலை ஜங்ஷனில் இறங்கி பதுளை ரயில் வரும் வரை அங்குள்ள தங்குமடத்தில் தங்கி ரயிலேறி ஹாலி எல்லையில் இறங்கினோம்.

வேஷ்டியும் கோட்டும் சிரித்த முகமுமாக ஆஞா நிற்கின்றார்கள். பெட்டியிலிருந்து குதித்திறங்கிய கங்காணி அண்ணனின் கையைப் பற்றி ஆஞாவின் கைக்குள் திணித்து "பிடிங்கய்யா உங்கள் பிள்ளைகளை... போதும் போதும் என்றாகிவிட்டது எனக்கு" என்றபடி "வர்றேங்கம்மா" என்று அம்மாவிடமும் விடைபெற்று விசிலடித்து நகரும் ரயில் வண்டியில் தொத்தி ஏறிக்கொள்ளுகின்றார்.

பிந்திய எழுபதுகளில் தேடலும் ஆவணச் சேகரிப்புமாக நான் இருந்த நாட்கள் ரம்மியமானவைகள்.

அமரராகிவிட்ட தேசாபிமானி பி. ராமநாதன் அவர்கள் கோ. நடேசய்யர் வெளியிட்ட சில நூல்களைப் பார்வைக்காகக் கொடுத்தார்.

அதில் ஒரு நூலில் அய்யர் இப்படிக் குறிக்கின்றார்.

'மண்டபம் கேம்பில் சுமார் ஆறு நாட்கள் வரை தங்கி இருக்கவேண்டும். பூச்சி மருந்து கொடுத்தும் அம்மைப்பால் குத்தியும், 6 நாட்கள் வைத்திருந்து யாதொருவித சுகவீனமும் இல்லாதிருந்தால் இலங்கைக்கு அனுப்புவார்கள்.

மண்டபம் கேம்பில் ஏற்படும் சாப்பாட்டுச்செலவு தொழிலாளி கொடுக்கவேண்டியதில்லை. காலையில் தேநீரும், ரொட்டியும், பகல் சாப்பாடும், இராச்சாப்பாடும் இலங்கை கவர்ண்மெண்டார் கணக்கில் கொடுப்பார்கள். சாப்பாடு திருப்தியில்லாவிட்டால் அங்குள்ள உத்தியோகத்தர்களிடம் தெரிவியுங்கள். அதற்குப் பயப்பட வேண்டாம்; தொழிலாளர்களின் சௌகரியத்தைக் கேட்கத்தான் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். தொழிலாளர்கள் புகார் சொல்லுவது குற்றமாகாது. நீங்கள் புகார் செய்யாவிட்டால் அங்குள்ள கஷ்டங்கள் எப்படித் தெரியும். அவற்றை எப்படிப் போக்க முடியும்.

அங்குள்ள குறைகளைச் சொல்லியும் யாரும் கவனிக்கா விட்டால் கீழ்க்கண்ட உத்தியோகத்தர்களுக்கு எழுதுங்கள்.

1. இந்தியா கவர்ன்மெண்ட் ஏஜெண்ட்
2. கண்ட்றோலர் ஆப் லேபர், கொழும்பு
3. கோ. நடேசய்யர், சட்டசபை அங்கத்தினர் – ஹட்டன்.

இந்த மக்களுக்கு உணர்வூட்டலை விடவும் அறிவூட்டல் முக்கியமானது என்பதை உணர்ந்திருந்த ஒரு மக்கள் தொண்டன் அவர்.

இந்த மக்களின் பிரதிநிதியாக சட்டசபையில் இருக்கும் ஒருவருக்கு இந்த மக்களின்; குறைகள், கஷ்டங்கள், பிரச்சினைகள் தெரிந்திருக்க வேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தவர் அவர். அதனால்தான் உங்கள் குறைகளை, கஷ்டங்களை எனக்கு எழுதுங்கள் என்று குறிப்பிடுகின்றார் அவர்.

சட்டமன்ற விவாதங்களின்போது இவைகளும் அவருக்குப் பக்கபலமாக அமைகின்ற குறிப்புக்களாகும்.

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருபவர்கள் அங்குள்ள தொற்றுநோய் போன்றவைகளை இங்கும் கொண்டுவந்து விடாமல் இருக்கும் தற்காப்பு நடவடிக்கையே இந்த மண்டப முகாம் என்கின்றபோது இலங்கை அரசாங்கமே அதற்கான செலவுகளையும் ஏற்கவேண்டும் என்பதுதான் நியதி.

அதையும் தன்னுடைய நூலில் பதிந்து வைக்கின்றார் நடேசய்யர்.

'ஆறாவது நாள் பகல் இரண்டு மணிக்கு உங்களைக் கப்பலில் கொண்டு போய் ஏற்றுவார்கள். ரயில் ஏறும்போதோ, கப்பலில் ஏறும்போதோ நீங்கள் அவசரப்படத் தேவையில்லை. அடித்துப் பிடித்துக்கொண்ட ஏறத் தேவையில்லை. உங்களுக்காகவே போடப்பட்டுள்ளவை இவை. உங்களை விட்டுவிட்டு அவைகள் போகாது' என்றும் எழுதுகின்றார் அய்யர்.

மண்டபம் முகாமிலிருந்து வெளியேறியதும், ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டும், பைகளுடன் முட்டி மோதிக் கொண்டும், அவசரத்தில் படி தவறி விழுந்து காயப்படுத்திக் கொண்டும் இந்த மக்கள் கோச்சேறும் காட்சி என் மனதில் தோன்றி மறைகின்றது.

இந்த அவசரப்படுதல் தேவையற்றது. அறியாமை காரணமாக நிகழ்வது என்பதை அய்யர் நினைவுறுத்தும் பாங்கு எதார்த்தமானது. மக்களுடன் மக்களாக நெருங்கி நின்றவர் அவர்.

உங்கள் குறைகளை எழுதி அனுப்புங்கள் என்று நடேசய்யர் மூன்று பேரைக் குறிக்கின்றார். அதிற் கடைசியாக அவர் பெயரும் இருக்கிறது.

இந்திய கவர்ன்மெண்ட் ஏஜென்ட்டுடன் தன்னையும் இணைத்து எழுதிக்கொள்ள அய்யருக்கு என்ன தகுதி இருக்கிறது என்றவொரு பிரச்சினை அய்யரின் எதிரிகளால் பூதாகாரமாகக் கிளப்பிவிடப்பட்டது!

1947ல் பிரித்தானியரால் அறிமுகப்படுத்தப்பட்ட சோல்பரி அரசியல் திட்டத்தின் மூலம் பாராளுமன்ற ஆட்சிமுறை அமுல்படுத்தப்பட்டது. தேர்தல் வந்தது. கோ. நடேசய்யர் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகவில்லை.

*(தொடரும்)*

# பாக்குப் பட்டை

பிரமிளா பிரதீபன்



"சின்னையா கங்காணி சேனையில் ஒரு பாக்குப்பட்டை விழுந்திருக்குடா......"

"பாக்கு பட்டையா......?"

காந்தி ஆவலுடன் கேட்டான்.

"ஆமாண்டா நல்ல பெரிய்...ய பாக்குப்பட்டை"

ராஜன் தன் கைகளை அகல விரித்து பாக்குப்பட்டையின் அளவை காட்டிக்கொண்டிருந்தான்.

"நெஜமாலுமே நீ பாத்தியா...?"

இது சுலுத்தான்.

"சத்தியமா பார்த்தேண்டா... வா காட்டுறேன்"

ராஜனுடன் அனைவரும் சேர்ந்து சின்னையா கங்காணியின் சேனையை அடைந்தனர்.

"அந்த தொங்கல்ல பாருங்கடா..."

"சரிதான் எப்பிடி எடுக்குறது?"

"நீ போய் எடுத்துட்டு வாறியா காந்தி..."

"வேணாண்டா சாமி... போனதடவையும் நான்தான் மாட்டிக்கிட்டேன்"

"அப்ப சுல்தான் போ..."

"மாட்டேன் நீயே போ..."

ராஜனுக்கு கோபம் வந்து விட்டது.

"சரி நான் எடுக்கிறேன், ஆனா யாருக்கும் சவாரி தரமாட்டேன்"

யாருமே இதற்கும் சம்மதிக்கவில்லை.

அவர்களுக்கு ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு வகையான விளையாட்டு. அதில் இந்த பாக்குப்பட்டை சவாரிக்கு கொஞ்சம் போட்டி அதிகம். காரணம் அவ்வளவு எளிதாக பாக்குபட்டைகள் கிடைப்பதில்லை. அப்படியே கிடைத்தாலும் இவர்கள் சவாரி செய்யும் வேகத்தில் இரண்டு நாட்களுக்கு கூட தாங்காது.

ஆள் நடமாட்டம் குறைந்த ஒற்றையடிப் பாதையில் அல்லது பொட்டல் தேயிலைச்சரிவில் தான் இந்த பாக்குப்பட்டை சவாரி சூடு பறக்க பறக்க நடக்கும்.

ஒரு தடவை ராஜனுக்கு கால்சட்டை கிழிந்து குண்டியெல்லாம் உராய்ந்து கொண்டு உட்காரமுடியாமல் தவித்தும் கூட...... அவ்விளையாட்டில் அத்தனை ஆர்வம் அவனுக்கு.

பாக்கு பட்டையின் இலை உதிர்க்கப்பட்ட காம்பு பகுதியை கெட்டியாய் பிடித்துக் கொண்டு, அதன் பரந்திருக்கும் பட்டையில் அமர்ந்து கொள்ள வேண்டும். நீண்டிருக்கும் காம்பு பகுதியின் நுனியை யாராவது படு வேகமாய் மண் பாதையில் இழுத்துக்கொண்டு போவார்கள். இதுதான் பாக்குப்பட்டை சவாரி.

சவாரி செய்யும் போது படு ஜோராய் இருக்கும். காற்று முகத்தை கிழித்துக்கொண்டு போகிற வேகத்தில் தூசு துகள்களெல்லாம் அதிருண்டு பறக்க, மூச்சு முட்ட முட்ட சவாரி போவதற்கு அந்த தோட்டத்தில் எல்லா சிறுசுகளுக்குமே நல்ல விருப்பம்.

இந்த பாக்குப்பட்டைகளை திருடப்போய் உதைப்பட்டு விழுந்தெம்பி வந்த சம்பவங்களும் அனேகம் உண்டு. அதுவொன்றும் அத்தனை கஷ்டமல்ல... என்றாலும் காய்ந்துபோய் தானாக அந்த பாக்குப்பட்டை விழும்வரை காத்திருக்க வேண்டுமே அதுதான் கஷ்டம்.

சில நேரம் இலவு காத்த கிளி கதையாயும் ஆனதுண்டு. இந்த சிறுசுகளுக்கு போட்டியாய் ஏதாவது ஒரு பெரிசு சோறுகட்டவென்று அந்த பட்டையை வெட்டி தோல் போல உரித்துக்கொண்டுப் போய்விடும்.

பாக்குப்பட்டையை உரித்து அதை மெல்லிய தாள் போல அளவாய் வெட்டி சூடு காட்டி பின் அதில் சாப்பிடுவதும் அனேகருக்கு பிடித்த ஒன்றுதான்.

மொத்தத்தில் உதவாத ஒரு குப்பை பொருள் பல்வேறு விதங்களில் பயன்படுகிறது...... மேலதிக தேவையாயும் இருக்கிறது.

தன் சேனையில் எத்தனைதான் பாக்குப்பட்டை விழுந்து கிடந்தாலும் யாரையும் தொடவிட கூடாதென்று சின்னையா கங்காணி நினைத்துக்கொள்ளுவார். நினைப்பது போலவே வேலியோரமெல்லாம் கறல் பிடித்த ஆணிகளையும் போத்தல் ஓடுகளையும் போட்டு வைத்தும் விடுவார்.

வேறு எதற்காவது அவரது சேனைக்குள் நுழைந்தாலும் கூட காலை குத்தி கிழித்தெடுத்து விடும்.

தோட்டத்தில் பாதிப் பேருக்கு காலில் போத்தலோடு கிழிபட்ட தழும்பு உண்டு. கூடவே சின்னையா கங்காணியின் சேனைக்குள் புல் மேயவென்று போன மாடுகளின் கயிற்றையும் விட்டுவைக்காமல் அறுத்து வைத்துக்கொள்ளுவார்.

இப்படியெல்லாம் பட்ட அனுபவங்கள் மனதில் பதிந்து போயிருக்க... இப்போ எப்படி பாக்குப்பட்டையை எடுப்பது...?

ராஜன் மனம் தளராதவன். புத்திசாலியும் கூட......

ஆணிகளையும் போத்தலோடுகளையும் அப்புறப்படுத்தி விட்டு மெதுமெதுவாய் அடியெடுத்து வைத்தான். பாக்கு மரத்தை எக்கி எக்கி காய்ந்து தொங்கிய பட்டையை சரக்கென்று இழுத்தான்.

"எவண்டா அது...... நாசமாபோறப் பயப்புள்ள......!"

ராஜன் சின்னைய்யாவின் கண்களுக்கு அகப்பட்டு விடாமல் குனிந்து ஓடி வந்து வேலியை தாவுகையில் தவறி விழுந்து தொடையில் லேசாய் ஆணி கிழித்து விட...... ஒருவாறு எல்லோருமே தப்பித்துக் கொண்டனர்.

"ஏண்டா எடுக்கலயா...?"

"அந்த கெழமுண்டம் உள்ளுக்கு இருக்குது"

“ச்சேய்... சொதப்பிட்டியே...” சுல்தான் சலித்துக் கொண்டான்.

“அந்தாளுக்கு என்னவாவது பண்ணுனும்டா...”

“அப்படீன்ற...?”

மூவருமாய் யோசித்தனர்.

“பின்ன என்னடா வீணாப்போற பாக்குப்பட்டையை குடுத்தா கொறஞ்சுடுவாங்களா...?”

“காந்தி சொல்றதும் சரியாத்தான் இருக்கு... என்னத்தை செய்றது...?

ராஜன் யோசித்தான்.

“கல்லடிக்கலாமா...?”

“வேணாம் தலையில பட்டா பிரச்சனையாயிடும்”


ராஜன் அதற்கும் ஒத்துக்கொள்ளவில்லை.

ஒரு மூன்று நாட்கள் கூட நகர்ந்திருக்காது... யாரோ கத்தி சத்தமிட்டார்கள். அடி இத்துப்போயிருந்த பாக்கு மரமொன்று சின்னையா கங்காணி தலையில் விழுந்து விட்டதாம். அவர் கத்திக்கொண்டு கிடக்கிறாராம்.

மனதில் கோபமிருப்பினும் போனால் போகட்டுமென்று ஒரு நாலைந்துபேர் அவரை தூக்கிவர ஓடினர். அவர்களுடன் ராஜன், சுல்தான், காந்தி மூவருமாய் சேர்ந்துக்கொண்டனர்.

மெய்தான் அதுவொரு பெரிய பாக்குமரம். ஒன்றுக்கு இரண்டு பாக்குப்பட்டைகள் அதில் இருந்தன.

சரக் சரக் என்று இரண்டையும் இழுத்துக்கொண்டு... மூவருமாய் நாலாம் நம்பர் தேயிலைப் பொட்டலுக்கு அவசரமாய் ஓடினர்.




## ‘ஞானம்’ சந்தா விபரம்

**உள்நாடு**

| | | |
|---|---|---|
| தனிப் பிரதி | : | **ரூபா 50/=** |
| ஆண்டுச் சந்தா | : | **ரூபா 600/=** |
| ஆறு ஆண்டுச்சந்தா | : | **ரூபா 3000/=** |
| ஆயுள் சந்தா | : | **ரூபா 20000/=** |

சந்தா காசோலை மூலமாகவோ, மணியோடர் மூலமாகவோ அனுப்பலாம். மணியோடர் *வெள்ளவத்தை*தபால் நிலையத்தில் மாற்றக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

**இலகுவாக மேலதிகச் செலவின்றி சந்தா அனுப்பும் வழி :-** உங்கள் பகுதியில் உள்ள ஹட்டன் நஷனல் வங்கியில் **T. Gnanasekaran, Hatton National Bank - Wellawatte** நடைமுறைக் கணக்கு இலக்கம் – 009010309024 என்ற கணக்கில் வைப்பு செய்து வங்கி ரசீதை எமக்கு அனுப்புதல் வேண்டும்.

**வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்ப :** Swift Code : HBLILKLX

***அனுப்ப வேண்டிய பெயர்/ முகவரி :***

**T. Gnanasekaran**
**Gnanam Branch Office**
3-B, 46 th Lane, Wellawatte.

**ஞானம் விளம்பர விகிதம்**

| | | |
|---|---|---|
| பின் அட்டை | : | **ரூபா 10000/=** |
| முன் உள் அட்டை | : | **ரூபா 8000/=** |
| பின் உள் அட்டை | : | **ரூபா 8000/=** |
| உள் முழுப்பக்கம் | : | **ரூபா 5000/=** |
| உள் அரைப்பக்கம் | : | **ரூபா 3000/=** |

| *வெளிநாடு* | ஓராண்டு | இரண்டு ஆண்டு | மூன்று ஆண்டு |
|---|---|---|---|
| **Australia (AU$)** | **35** | **70** | **100** |
| **Europe (€)** | **25** | **50** | **70** |
| **India (Indian Rs.)** | **500** | **950** | **1400** |
| **Malaysia (RM)** | **50** | **95** | **140** |
| **Canada ($)** | **35** | **70** | **100** |
| **UK (£)** | **15** | **30** | **40** |
| **Other (US $)** | **25** | **50** | **70** |

மூன்று சந்தாதாரர்களைச் சேர்த்துத் தருபவர்களுக்கு ஒரு வருடம் ‘ஞானம்’ இனாமாக அனுப்பப்படும்.

# எஸ். மோசேஸ்
# அரச தொலைக்காட்சி விருது
# பெற்றார்



இலங்கையில் ஒளிபரப்பாகும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலிருந்து தெரிவு செய்யப் படும் சிறந்த தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு வருடாவருடம் தேசிய மட்டத்திலான விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அண்மையில் இடம்பெற்ற 2008ம் ஆண்டுக்கான விருது வழங்கல் நிகழ்வில் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தமிழ் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் எஸ். மோசேஸ் அவர்களுக்கு சிறந்த தொலைக்காட்சி நாடக நெறியாளருக்கான விருது வழங்கப்பட்டது.

இம்முறை இடம்பெற்ற விருது வழங்கலில் சக்தி தொலைக்காட்சியின் இரண்டு நிகழ்ச்சி தயாரிப்பாளர்களுக்கும் மூன்று அறிவிப்பாளர்களுக்கும் (தேசிய, சக்தி) தமிழ் நாடகத்திற்காக எஸ். மோசேஸ் அவர்களுக்கும் என மொத்தமாக ஆறு விருதுகள் தமிழ் நிகழ்ச்சிகள் தொடர்பாக வழங்கப்பட்டன. ரூபவாஹினி தேசிய தொலைக்காட்சி நிகழ்ச்சி தயாரிப்புக்கு மாத்திரமே இம்முறை விருது கிடைத்தது என்பதும் அதுவொரு சிறந்த தொலைக்காட்சி நாடகம் (மாற்றம்) என்பதும் எஸ். மோசேஸ் அவர்களது விருதை கனதியாக்கியுள்ளன.

ரூபாவாஹினி கூட்டுத்தாபனத்தில் கடந்த பத்து வருடங்களாக நிரந்தர நிகழ்ச்சித் தயாரிப்பாளராக கடமையாற்றி வரும் இவர் கடந்த வருடம் இடம்பெற்ற தொலைக்காட்சி விருது வழங்கல் நிகழ்வில் வருடத்தின் சிறந்த தமிழ் தொலைக்காட்சி விவரண தயாரிப்பாளராக விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

எஸ். மோசேஸ் கடந்த பத்து வருடங்களாக தொலைக்காட்சி நாடகம், தொலைக்காட்சிப் பாடல்கள், விவரணங்கள், சஞ்சிகை நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள் மற்றும் நேரடி ஒளிபரப்புகள் எனப் பல நிகழ்ச்சிகளை தயாரித்து வருகிறார். 2006ம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற தெற்காசிய நாடுகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளை ரூபாவாஹினி கூட்டுத்தாபனம் சர்வதேச ரீதியில் ஒளிபரப்பியபோது அந்நிகழ்ச்சிகளுக்கான தயாரிப்பாளர்களில் ஒருவராக செயற்பட்ட ஒரேயொரு தமிழ் தயாரிப்பாளர் இவர் மட்டுமே என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மட்டுமின்றி எழுத்தாற்றலும் மிக்க எஸ். மோசேஸ் இவ்வருடம் இடம்பெற்ற கிழக்கு மாகாண சாகித்திய விழாவில் தனது நூலான 'தொழில்நுட்பக் கலைகள்' என்ற நூலுக்காக சாகித்திய விருது பெற்றார். அத்தோடு 'வெகுஜன ஊடகம்', 'இலங்கையில் தொலைக்காட்சி' உட்படப் பல நூல்களையும் ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

'இலங்கையில் தொலைக்காட்சி – சமூகவியல் பார்வை', 'தமிழின் கதை கூறும் மரபு', 'கட்டிளமைப்பருவத்தினர் மீதான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் தாக்கம்' என்பவை இவரது குறிப்பிடத்தக்க ஆய்வுகளாகும்.

1995ம் ஆண்டில் சிறுவர் இலக்கியத்திற்கான தேசிய விருதினையும் 1990களின் பின்னர் தேசிய, மாகாண மட்டத்திலான பல விருதுகளையும் தமது சிறுகதை கவிதை, நாடகம் என்பவற்றுக்காகவும் பெற்றுள்ள இவர் கடந்த 2007ம் ஆண்டில் வி.பி. கணேசன் ஞாபகார்த்த மன்றத்தினால் கலைஞர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

கலாசார திணைக்களத்தினால் வருடாந்தம் நடாத்திவரும் தேசிய நாடகப் போட்டிகளின் இறுதிச் சுற்றுக்கான நடுவராக கடந்த சில வருடங்கள் பணியாற்றியுள்ளார்.

ஊடகவியலும் மக்கள் தொடர்பாடலும் துறையில் (Journalism & Mass Communication) கலாநிதி (Ph.D) பட்டத்திற்கான ஆய்வை மேற்கொண்டுவரும் இவர் ஊடகவியலில் (Journalism) முதுமாணி (M.A) பட்டத்தையும் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் ஊடகவியல் அதிவிசேட பட்டத்தையும் (Diploma in Journalism - Distinction, University of Colombo) தமிழ் விசேட துறையில் சிறப்புக் கலைமாணி (B.A.Hon., Eastern University) பட்டத்தையும் பெற்றிருக்கிறார்.

கொழும்புப் பல்கலைக்கழக ஊடகவியல் துறையின் வருகை விரிவுரையாளராக கடமையாற்றும் இவர் நாட்டின் பல பகுதிகளிலும் இடம்பெற்று வருகின்ற ஊடகவியல் தொடர்பான கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் என்பவற்றுக்கும் தன் பங்களிப்பை வழங்கி வருகிறார்.

**கி ரு ஷி**

சிறந்த தமிழ் தொலைக்காட்சி நாடகத்திற்கான விருதினை பிரதமர் ரத்தினசிறி விக்கிரமநாயக்கவிடமிருந்து மாற்றம் நாடக நெறியாளர் எஸ். மோசேஸ் பெறுகிறார்.



# மானாமக்கின் ஓசையில்லா ஓசைகள்...



இதை ஓசையிடுகிற நேரத்தில் இந்தப் பெண்ணிய பிரபலப் படைப்பாளிக்கு அகவை 84 ! (5.11.1925). மருத்துவ மனையொன்றில் அனுமதி. அபிமானிகள் படிக்கும் சமயம் அவர் உடல்நலம் பெற்றிட உள்ளார்ந்த பிரார்த்தனைகள்.

என் பேனா பிரார்த்திக்கிற திருமதி ராஜம் கிருஷ்ணன் அவர்கள், நான் துள்ளித் திரிந்த இளங்காலத்தில் 'ஆனந்த விகடன்' நாவல் போட்டி (1958)யில் முதல் பரிசாக 'மலர்கள்' வழங்கிப் பின் சாகித்ய அகாடமி விருதாக (1973) 'வேருக்கு நீர்' கொட்டி அசாத்திய பெண்மணி! அப்புறம் எத்தனையெத்தனையோ விருதுகள், பரிசுகள்.

இதுவரை சுமார் 70 நூல்கள். பல படைப்புகள் பள்ளி மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் 'ஈடேற'ப் பரிந்துரைக்கப் பட்டுள்ளன. 'கலாநிதி'களானோரும் உண்டு.



தனது ஆளுமைக்காக சோவியத் யூனியன், ஈராக், இலங்கை என அலைகடலுக்கு அப்பால் பறந்திட்ட அபூர்வத் தமிழ்ப் பெண் எழுத்தாளர்.

இங்கு வந்தபொழுது முற் போக்காளர் எனப்படுவோர் இவரைக் கொண்டாடிய விதம் கண்டதுண்டா, கேட்டதுண்டா?

பரவாயில்லை, இப்பொழுது நான் எழுப்பும் 'ஓசையில்லா ஓசையைக் கேளுங்கள்.

இந்த 85 வயது மூதாட்டிக்கு மருத்துவமனையிலிருந்து துண்டு வெட்டப்படுகிறபொழுது, போக ஒரு போக்கிடம் இல்லை!

அதாவது அக்கடா எனப் போய் உறங்கிட ஓய்வுகொள்ள அவருக்கென்று ஒரு குடில் இல்லை! கொடுமை! கொடுமை!

எஞ்சிய அவரது காலம் ஒரு கேள்விக்குறி!

ஜூலை 10ல் கலைஞர் தொலைக்காட்சி ஏழு மணி மாலை செய்திகளைப் பார்த்துக்கொண்டிருந்த பொழுது திருமதி ராஜம் அம்மாவுக்கு ஒரு சிறிய உதவியாக தமிழக முதல்வர், கலைஞர் மூன்று லட்சம் ரூபாய் உதவித்தொகை வழங்கும் தகவல் கவலையைச் சற்று மறக்கடித்தது.

அட! குடிசைவாரிய அடுக்ககத்தில் ஓரிடம் காலியில்லையா?

**தமிழினி குலேந்திரனின் உறவுப் பாலம்!**

புலம்பெயர்ந்திருப்பவர்களில் இலண்டன் 'தமிழினி' வ.மா.குலேந்திரன் ஒரு தனிரகமான மனிதர். யாருக்கும் உதவும் குழந்தை மனத்துடன் எளிமையாகக் காணப்படும் அந்தச் சட்டத்தரணியிடம் எப்பொழுதும் தமிழை உயர்த்தும் சிந்தனைகள் சிறகடித்துப் பறந்தவண்ணம் ! இங்கும் அங்கும் (தமிழகம்) இருக்கும் பொழுதெல்லாம் ஏதாவது தமிழின் பெயரால் நிகழ்த்த முனைவார்.



இத்தகையவர் இரண்டொரு ஆண்டுகளுக்குமுன் இலங்கை வந்தபொழுது பதிப்புத்துறையில் சிலபல செய்ய விழைந்தும் இயலவில்லை. நம்மவர்களுக்கே நஷ்டம் விழைந்தது.

தமிழகம் நேர் எதிர்! அவரால் பெரும் இலாபக் கணக்கு!

அன்புப் பாலம் என்றொரு அமைப்பைக் கொண்டு பலகாலம் பொதுத்தொண்டுகள் புரிந்து வரும் முதிய பெரியவர் கல்யாணசுந்தரம் என்பார், மணிமேகலைப் பிரசுர நிர்வாக இயக்குநர், ரவி தமிழ்வாணன் மூலம் அறிமுகமாக நல்ல பல திட்டங்களுக்கு அத்திவாரமிடப்பட்டது.

இது 2007இல். இப்பொழுது அனைத்துலக சிறுகதை, நாவல் போட்டி நடத்தி முதலாவது, இரண்டாவது, மூன்றாவது மற்றும் ஆறுதல் பரிசுகள் என மொத்தமாக ஓர் இலட்சம் இந்திய ரூபாய்களை அள்ளிக் கொடுத்திருக்கிறார் தமிழினி குலேந்திரன்!

நாவலுக்குரிய முதற்பரிசைத் தட்டிக்கொண்டு போனவர் நம்மவரே! நாடறிந்த நீ. பி. அருளானந்தம் 'ஞான'த்திற்கோ மற்றவர்களுக்கோ புதியவரல்லர்! பாராட்டப்படவேண்டியவர்.

இந்த இலக்கியப்போட்டி அமரர் வல்லிக்கண்ணன் நினைவில் நடந்து முடிந்துள்ளது.

மேலும், தமிழினியாரின் மற்றொரு பணியாக பேரறிஞர் அண்ணா நூற்றாண்டுக் கட்டுரைப் போட்டி! முடிவுத் தேதி இவ்வாண்டு மார்ச்சுடன்! திருச்சி மாநகரை முகவரியாகக் கொண்டு "சமம்" என்றொரு அமைப்பை உருவாக்கி அதன்மூலம் நடக்கும் தடபுடல்! (இப்பொழுது வைபவமே முடிந்திருக்கலாம்)

மேலும், இந்தச் 'சமம்' மூலமாக அவசிய உதவிகள் தேவைப்படுவோருக்கு உதவும் கரங்களாகவும் செயல்படவும் திட்டமாம்!

திரு. தமிழினி குலேந்திரன் மேலும் அதிரடியாகச் செய்திருக்கிற ஒரு விடயம் அதிர்ச்சி வைத்தியமாக அமைந்திருக்கிறது.

ஏற்கனவே குறிப்பிட்டேனே, முதியவர் கல்யாணசுந்தரம், அவர் தனது தள்ளாத வயதில் தடுமாற்றம் இல்லாமல், சிரமம் இல்லாமல் சேவையாற்ற கார் ஒன்று அன்பளிப்பு!

ஆஹா! இதுவல்லவா அன்புப் பாலம்!

அதுமட்டுமா, எம்மவர் சார்பில் அங்கே ஒருவருக்கு ஊர்தி கிடைத்திருப்பது இதுவே முதல் தடவை.

(தகவல்: திரு. ரவி தமிழ்வாணன்)

## திரைகடலாடி வரும் தமிழ்நாதம்!

கணீரென்று இனிமையான துல்லிய ஓசை.

என்றாலும் ஒரு சிலரைத் தவிர யாரும் கேட்பதாகச் சொல்ல முடியாது.

தமிழகத் துறைமுக நகரங்களுலொன்றான 'முத்து நகர்' தூத்துக்குடியிலிருந்து, "திரைகடலாடி வரும் தமிழ்நாதம். இலங்கை நேயர்களுக்கான சிறப்பு ஒலிபரப்பு" எனக் கட்டியங் கூறி ஒரு வானொலி அரசு சார்பில் இயங்குகிறது. இங்கே இந்திய அமைதிப்படை நிலைகொண்டிருந்த நேரத்தில் அவர்களது செய்திப் பரிமாற்றங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட அலைவரிசையில் ஒலிபரப்பு!

காலையில் 6.45 – 9.00 வரையும், மாலை 5.45 – 6.30, அப்புறம் இரவு 8.30 – 9.00.

அறநெறி – பக்திப்பாடல்கள் – இன்று ஒரு தகவல் – திரை கானம் (பழையது, புதியது) – இசைக்கச்சேரி – மருத்துவக் குறிப்புகள் – நேர்காணல்கள் – இலக்கிய உரைகள் – நாடகம் – சிறுகதை வாசிப்பு என இருக்கிற கொஞ்ச நேரத்தில் அறுசுவை அளிக்கிறார்கள். காந்திஜியின் 'சத்திய சோதனை' பக்கங்களையும் புரட்டிக் காட்டுகிறார்கள்.

இவை போக, காலை 6.45 க்கும் 8.10க்கும் சென்னை வானொலியின் செய்தியறிக்கையும், காலை 7.15க்கு டெல்லி தமிழ்ச் செய்தியும் அதி விசேடம். (நம்ம ஊரு முக்கிய செய்திகள் தவறாது இடம்பெறுகின்றன!)

மேலும் வாரம் ஒரு தடவை செவ்வாய்க்கிழமை காலை 8.30க்கு 'வண்ண முத்துக்கள்' கதம்ப நிகழ்ச்சி, வியாழக்கிழமை காலை 8.30க்கும் ஞாயிறு இரவு 8.30க்கும் நேயர் விருப்பம் எல்லாம் உண்டு.

இப்பாடல் ஒலிபரப்புகளில் ஒரு சிறப்பு, எமது வானொலிகளைப் போல அதிகமான விளம்பர ஆக்கிரமிப்புகள் கிடையாது. அளவோடு உள்ளது. அதனால் நன்றாக அனுபவிக்கலாம்.

அலைவரிசை 294 மீற்றர் – 1053 கிலோ சைக்கிள்ஸில் இன்றோ நாளையோ நுழைந்து அனுபவித்துப் பாருங்கள். (வடபகுதியில் ரொம்பத் தெளிவாம்).

## பெருமைமிகு இரு நாவல்கள்

'அட்லாண்டிஸ் மனிதன் மற்றும் சிலருடன்'

'சிலுவையில் தொங்கும் சாத்தான்'

இவ்விரண்டுமே தமிழ் நாவலிரண்டின் தலைப்புகள்தான். வெளியாகி சுமார் 10 ஆண்டுகளாகின்றன.

கண்டிருப்பீர்களா? கேட்டிருப்பீர்களா?

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் பிரதம சிஷ்யர் முனைவர், கவிஞர் பூவண்ணன் இந்நாவல்களின் அறிமுகத்தை வரலாற்றுக் கதாசிரியர், 'அமுதசுரபி' விக்கிரமன் வெளியிடும் இலக்கியப் பீடம் சஞ்சிகையில் எப்பொழுதோ வாரி வழங்கிவிட்டார் இப்ப;

"அட்லாண்டிஸ் மனிதன் மற்றும் சிலருடன்" என்னும் நாவல் தமிழுக்கு முற்றிலும் புதியது. எம்.ஜி. சுரேஷ் இந்தப் பன்முக நாவலை க்யூபிஸ (Cubism) நாவலை எழுதி, "தமிழ் நாவலை நவீன யதார்த்த வாதத்தின்" அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் சென்றுள்ளார்.

நாவல் என்று வழங்கப்பட்டாலும், இது ஒரு கதையன்று. பன்னிரண்டு கதைகள் அடங்கிய புதுவகை நாவல். கதைகளைக் கொடுத்திருக்கும் வரிசையில் வாசிக்கலாம். கடைசிக் கதையிலிருந்து பின்னோக்கியும் வாசிக்கலாம்; நடுவில் ஏதாவதொரு கதையிலிருந்தும் வாசிக்கத் தொடங்கலாம். தமிழ் யாப்பில் "அடிமறி மண்டில யப்பா"வின் அமைப்பை – யுக்தியை ஒத்தது இது என்றும் கூறலாம்.

அண்மைக் காலத்தில் வெளிவந்த மொழிபெயர்ப்பு நாவல்களில் மிகச் சிறந்தது எது என்று கேட்டால் ஒரு நொடியும் தயங்காமல் கென்ய எழுத்தாளர் வா. தியாங்கோ எழுதிய "சிலுவையில் தொங்கும் சாத்தான்" என்று கூறலாம். இதை அமரந்தா – சிங்கராயர் ஆகியோர் தமிழில் அருமையாக – தமிழுக்குப் பெருமையாக மொழிபெயர்த்திருக்கிறார்கள்.

கிழக்கு ஆபிரிக்க நாடான கென்யாவின் அரசியல் போராட்டத்தை, ஒர தனி நபரின் வாழ்வின் மூலம் விளக்குகிறது இந்த நாவல். சாத்தானின் சீடர்களது அதிகாரத்துவ ஆட்சியில் மக்கள் எப்படி ஏமாற்றப்பட்டனர், இன்னலுற்றனர் என்பதை படிப்பவரையே அனுபவிப்பவராக மாற்றிவிடும் வகையில் விளக்குகிறது இந்த நாவல்.

முதுபெரும் திறனாய்வாளர் அமரர் வல்லிக்கண்ணன் அவர்கள் மேற்படி 'அட்லாண்டிஸ்...' பற்றிக் குறிப்பிடுகையில் "வழக்கமாகத் தமிழில் எழுதப்படுவது போன்ற சராசரி நாவல் இல்லை. இது... ஒரு புதுமையான சோதனை முயற்சி... வாழ்க்கையின் புதிர், சுவாரஸ்யம், அவலம், இனிமை முதலியவற்றைப் பன்முகத் தோற்றத்தில் பதிவுசெய்துள்ள அருமையான படைப்பும் ஆகும்" என்கிறார்.

அடிக்குறிப்பு : இவ்விரு நாவல்களையும் அறிந்த ஒரிருவர் நம்மிடையே இருக்கலாம். அவர்கள் இந்த ஓசையைக் காதில் போட்டுக்கொள்ள வேண்டாம்.

## சோழர் வம்சத்தில் ஒரு முஸ்லிம் பெண்!

தமிழகத் தஞ்சையைத் (தஞ்சாவூர்) தலைநகராகக் கொண்டு 9ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் (கி.பி 846) தோன்றிய சோழப் பேரரசில், 10ஆம் நூற்றாண்டு இறுதி, 11ஆம் நூற்றாண்டு தொடக்கப்பகுதி இரண்டிலும் இராசராசன் (கி.பி 985 – 1016), இராசேந்திரன் (கி.பி 1012 – 1044) எனும் தந்தையும் தனயனும் இரண்டு 'ரஜினிகாந்த்'களாக ஆட்சிப் பொறுப்பில்!

இல்லையெனில், பொலனறுவைக்கு 'ஜனநாதபுரம்' என்றோ 'புலத்திய நகரம்' என்றோ பெயர் சூட்டி, இலங்கைத் தலைநகராக்கி ஆண்டிருப்பார்களா?

சமீபத்தில் ஒரு வாய்ப்பு – அங்கே இப்போதைய புதுநகரத்தில் மகளார் அஞ்சானா மருத்துவராக இருப்பதால் என் 'நிழ'லுடன் அந்தக் காடுமுழுக்க அலைந்தேன்.

ஆஹா! ஒன்றுக்கு இரண்டாக இடிந்து தகர்ந்த சிவாலயங்கள்! ஒன்றின் பெயர் 'வானவன் மாதேவி ஈசுவரமுடையார் ஆலயம்'.

இன்னொரு தாதுகோபத்தின் வாயிலில் ஒரு தமிழ்க் கல்வெட்டு!

இவற்றை அப்பாவி, சராசரி சிங்கள மக்கள் வெறுப்பின்றி விருப்பாகப் பார்த்துச் செல்கின்றனர்.

இங்கே விலாவாரியாக விவரித்து ஓசையிட இடமோ நேரமோ போதவே போதாது!

எவ்வாறாயினும் அபிமானிகளை அதிர்ச்சியுற வைக்கிற தகவலொன்றை அடுத்த இதழில் வெளிச்சமிடப் போகிறேன்.

மேலே, தலைப்பை திரும்பப் படியுங்கள். புரிவீர்கள்!

உம்! சோழர் வம்சத்தில் ஒரு முஸ்லிம் பெண்! எங்கே, பொலன்னறுவையிலா? இல்லையில்லை, திருச்சி, மலைக்கோட்டை அருகே. நீங்கள் இன்னும் ஒரு மாதம் பொறுக்க வேண்டும்! (அமரர் 'கல்கி' 'பொன்னியின் செல்வ'னில் 'தொடரும்' போட்டது போல் செய்துவிட்டேனோ?)

# நானும் எனது நாடகங்களும்
## சில மனப் பதிவுகள்

அந்தனி ஜீவா



ஆரம்ப காலங்களில் இலங்கையில் வீதி நாடக முயற்சிகளை முன்னெடுத்தவர்கள் சகோதர சிங்கள கலைஞர்களே. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கில விரிவுரையாளராகப் பணியாற்றிய காமினி அத்தெட்டுவேகம என்கிற பேராசிரியரே வீதி நாடகமுன்னோடி. இவரின் வீதி நாடகக் குழுவினரே நாட்டின் நாலா பாகங்களிலும் வீதி நாடக முயற்சிகளை முன்னெடுத்தவர்கள்.

ஆனால், தமிழ் நாட்டில் வங்க நாடக மேதை பாதல் சர்க்கார் நடத்திய வீதி நாடகப் பயிற்சிப் பட்டறையில் கலந்து பயிற்சி பெற்றுத் திரும்பிய பின்னரே, வீதி நாடக முன்னோடி காமினி அத்தெட்வேகமவின் தொடர்பும் நட்பும் எனக்கு ஏற்பட்டன. அவர் சில தன்னார்வக்குழுக்களுக்கு நடத்திய பயிற்சி பட்டறைகளில் இவருடன் சேர்ந்து பணியாற்றியதன் காரணமாக மேலும் பல அனுபவங்களையும் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

சென்னையில் அடையாறைத் தாண்டி மாமல்லபுரம் செல்லும் பாதையில் கடற் காற்று தழுவிக் கொண்டிருக்கும் சோழ மண்டலம் எனும் இடத்தில் அமைந்த ஓவியர் கிராமத்தில் பத்து நாட்கள் வீதி நாடகப்பயிற்சி பட்டறை நடைபெற்றது.

அந்த நாடகப்பட்டறையில் கலந்து கொள்ள தலைமன்னார் வழியாக கப்பல் மூலம் சென்னைக்கு சென்ற நான், சிரமம் காரணமாக திரைப்பட மேடை நாடக நடிகர் தில்லைராஜன் வீட்டில் ஒரு நாள் தங்கி ஓய்வெடுத்துக் கொண்டேன். வீதி நாடகப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்ளும் நாள் பிந்தி விட்டது.

மறுநாள் அவசரமாக பெட்டியுடன் வீதி நாடகப் பயிற்சி பட்டறை நடக்கும் சோழமண்டல ஓவியர் கிராமத்திற்கு சென்றேன். அங்கு பயிற்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

பயிற்சி பட்டறை இரண்டு நாட்கள் நடைபெற்றுவிட்டன. மூன்றாம் நாள் தான் நான் கலந்து கொள்ள வந்துள்ளேன் – பயிற்சியாளரான நாடக மேதை பாதல் சர்கார் கட்டுப்பாடான நெறி முறைகளில் பயிற்சி பட்டறை நடத்துபவர். கண்டிப்பானவர். அவர் என்னைச் சேர்த்துக் கொள்வாரா? என எல்லோரும் சிந்தித்தனர்.

இந்த வீதி நாடகப் பயிற்சி பட்டறையின் பதிவுகளை ''மனசில் பதிஞ்ச காலடிச் சுவடுகள்'' என்ற தலைப்பில் எழுதி நூலாக வெளியிட்டுள்ளார்கள். அதில் எனது வருகையைப் பற்றி ''சிலோன்கார அந்தனி ஜீவா பெரிய பெட்டியுடன், பட்டறை நடக்கும் இடத்திற்கு வருகிறார். கிட்டத்தட்ட அவர் இரண்டு நாள் பயிற்சிகளை இழந்து விட்டார். இடையில் அவரைச் சேர்த்துக் கொண்டால் இரண்டு நாள் பயிற்சிகளையும் கற்றுக் கொண்டு தொடர்ந்து மற்ற நாள் பயிற்சியில் ஈடுபட முடியுமா? இவை எல்லாம் சந்தேகங்கள், பாதல் சர்தார், அந்தப் பிரச்சினையை, அவரை பட்டறையில் சேர்த்துக் கொள்ளலாமா என்று அந்த வட்டத்தில் எல்லோருக்குமிடையே பொதுவாக வைத்தார்.

அவரைச் சேர்த்துக் கொண்டால், நாம் அனைவரும் சேர்ந்து, இந்த இரண்டு நாளும், நாம் விளையாடிய விளையாட்டுகளை, அவருக்குச்சொல்லி கொடுத்து, அவரை இனிமேல் நடக்கவிருக்கிற பயிற்சிகளில், பின் தங்கி விடாத பொறுப்பு இருக்கிறது.

முடியுமா என்று யோசித்து பாருங்கள். முதலில் நேரம் ஒரு பிரச்சினை. பட்டறை வேலை நேரம் போக மற்ற நேரங்களில் தான், நாம் அவருக்கு கற்றுத் தர வேண்டும். ஆனால் சிரமங்கள் எவ்வளவு இருந்தாலும். சிலோனிலிருந்து இவ்வளவு தூரம் வந்திருக்கிறார். தூரத்தின் காரணமாக நாம் தாமதங்களை ஏற்கத்தான் வேண்டும். அது பிரச்சினையின் இன்னொரு முகம்.



ஆகவே, வட்டத்தில் எல்லோரும் யோசித்து முடிவு சொல்லுங்கள் என்று வட்டத்திற்கே அந்த பிரச்சினையை வைக்கிறார்.

வீதி நிர்வாகிகள், வட்டம், அவரைச் சேர்த்துக் கொள்ள முடிவு செய்தால், அதற்குத் தகுந்தபடி, உணவு தங்குமிடம் ஏற்பாடுகளை, செய்வதில் சிரமம் இல்லை என்று விளக்கினார்கள்.

அக்கினிப் புத்திரன் தூரம் கருதி, தாமதங்களை அங்கீகரித்து ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொன்னார். நாம் பட்டறை நேரம் போக, மற்ற நேரங்களில் அவருக்குப் பயிற்றுவிக்கலாம் என்று அபிப்பிராயங்கள் வட்டத்தில் தெரிவிக்கப்பட்டன. சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

அந்த புகழ் பெற்ற வட்டத்தில் ஒருவராக, அந்தனி ஜீவா உட்கார வைக்கப்பட்டார். வட்டத்தின் தத்துவத்தை சுருக்கமாக தெரிவித்தார் பாதல் சர்க்கார்.

சக்தி பரிமாற்றம் விளையாட்டை அந்தனி ஜீவாவுடன் சேர்ந்து வட்டம் கொஞ்ச நேரம் விளையாடிய பிறகு வட்டத்தில் ஒருவரானார், அந்தனி ஜீவா.

நாடக மேதை பாதல் சர்க்கார் நடத்திய பயிற்சி பட்டறைப்பற்றி பதிவுகள் நூலின் குறிப்புகளே மேலே உள்ளவை.

இந்த வீதி நாடக பயிற்சி பட்டறை எனக்கு பல அனுபவங்களை தந்தது. தோழமைமிக்க அன்பு உள்ளங்களை எனக்கு தேடித் தந்தது.

ஒவ்வொரு நாளும் இரவு மிகவும் இனிமையாக கரையும், பாண்டிச்சேரி சங்கரதாஸ் நிகழ்கலை பல்கலைக்கழகத்தில் இணைப் பேராசிரியராக இருக்கும் கலைஞர் கே.ஏ. குணசேகரன் பாடல் பாடி எங்களை மகிழ்விப்பார்.

இரவு குளு குளு கடற்காற்று சிலு சிலுத்து வீசும். வெளியே மணல் வெளியில் போர்வை விரித்து படுத்தவாறு நானும், கே.ஏ. குணசேகரனும் எழுத்தாளர் பிரபஞ்சனும் பலரும் பத்தும் பேசி மகிழ்வோம்.

வீதி நாடகப் பட்டறையில் பங்கு பற்றியவர்கள் இதுவரை பெற்ற பயிற்சிகளிலிருந்து பட்டறை கடைசி இரண்டு நாட்களில் ஒவ்வொருவரும் தானே இயக்கி, தானே கதையமைத்து தானே நடிகர்களை தேர்ந்தெடுத்து தானே காட்சிமைப்புகளை உருவாக்கி ஐந்து நிமிட நாடகம் ஒன்றை நடத்தி காட்ட வேண்டும்.

ஒவ்வொருவரும் தமது நாடகத்திற்கு தேவையான நடிகர்களை நாடகப்பட்டறையிலிருந்து தெரிவு செய்து கொள்ளலாம்.

இதுபற்றி எஸ். சாமிநாதன் தான் எழுதிய பதிவுகளில் குறிப்பிடுகிறார்.

அப்படி, 28 பேரும் தயாரித்த நாடகங்களைப் பற்றி, அமைப்பு ரீதியில்; படிவரீதியில், கருத்து ரீதியில், விமர்சன ரீதியில், நிறையச் சொல்லலாம். ஆனாலும், அவர்கள் என்ன மாதிரியான நாடகங்களைப் போட்டார்கள் என்று சுருக்கமாக, பார்க்கலாம்.

பிரபஞ்சன் : ஆண்டன் செகாவின். பச்சோந்தியை மந்திரியின் நாய் என்ற தலைப்பில் நிகழ்த்தினார். சந்தையில் நாய் ஒருவனைக் கடித்துவிடும். கடிபட்டவன் அலறுவான். அங்கே வந்த போலீஸ்காரர்கள், கடித்தநாய், பெரிய இடத்து நாய் என்று அறிந்ததும், நாய் யாரைக் கடித்ததோ அந்தக் கடிபட்டவனை, தண்டிப்பார்கள்.

ஆல்பர்ட் : கறக்கிற மாடு ஒன்றை எல்லோரும்; தங்கள் சுயநலத்திற்கு பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதை விளக்கி.

முருகேசன் : ஏழை விவசாயின் வாழ்க்கை, அவன் உழைத்து பயிரிடும் பொருள், அவனுக்கே கிடைக்காமல் போவது பற்றி

அம்ஷன்குமார்: சாலையொன்றில் விபத்தில் அடிபடுகின்ற ஒருவனுக்கு, உதவி செய்கின்ற 'பெரிய' மனிதர் ஒருவர் அந்த உதவிகளையே புகைப்படம் பிடிக்க ஏற்பாடு செய்து, சமூகசேவையென விளம்பரப்படுத்தி கொள்வதுபற்றி.

கார்வர்ணன் : கரடிகதை, ஏமாற்ற நினைப்பவர்களே, ஏமாந்து போவது பற்றி.

பாராவி : வெள்ளத்தில் சிக்கிய கரடியை, சமூக மூட நம்பிக்கைகளில், மனிதகுலம் அழிந்து கொண்டிருப்பதற்கு உருவமாக சித்தரித்து. அதனைக்காப்பாற்றப் போன மனிதனும், வெள்ளத்தில் அடித்துச் செல்வதை பற்றி.

சந்திரன் : மனிதன், தான் உருவாக்கிய யந்திர வசதிகளுக்கு தானே அடிமையாகி, எளிமையான வாழ்வை இழந்து போதல் பற்றி.

விவேகானந்தன் : சுதந்திரம்பெற்ற நாட்டில், அநீதிகளுக்கு எதிராக மக்களைக்காக்க வேண்டியவர்களே, மக்களுக்கு அநீதிகள் இழைப்பதைப்பற்றி.

அரவிந்தன் : அத்தியாவசியத்தேவையுள்ள பொருட்களின் பற்றாக்குறை, சாதாரண மக்களை ஒரு பரிணாமவளர்ச்சி எப்படி கிழர்ந்தெழச் செய்கிறது என்பதை விளக்கி.

சாமிநாதன் : முற்போக்குத்துவம், உதட்டளவால் பேசுபவர்கள், சூழ்நிலையின்போது, அதிகாரவர்க்கத்துக்கு சோரம் போய் விடுவதைப்பற்றி.

கே.வி. ராமசாமி : 4 மாடும் சிங்கமும் பற்றிய கதையை, புதிய அர்த்தங்களில் பாவித்தல்.

பழனிவேலன் : மலைவாசிகளிடையே நிகழும் மூடப் பழக்க வழக்கங்களை எதிர்த்துப் போராடும் மனிதனைப்பற்றி.

கோவிந்தராஜன் : திருமணங்கள் ஒரு சடங்கே தவிர வேறில்லை. ஆணும் பெண்ணுமான இல்வாழ்வில், மனது விரும்புகின்றவருடன் வாழ்வதே முக்கியம், சடங்குகளுக்கு கட்டுபட்டு வாழ்வதல்ல என்பது பற்றி.

செல்வராஜ் : புலி வருது புலி வருது என்று பொய் சொல்லி, புலியே வந்து விடுதல் பற்றி, புதிய அர்த்தங்களில்.

மனோகர் : ஒரு அறிவுஜீவி, கடைசியில் சாதாரண குடும்பத்தளைகளிலேயே சிக்கி விட நேர்கின்ற சமூகச் சூழ்நிலைபற்றி.

மீனாட்சிசுந்தரம் : உண்மையான குற்றவாளிகள், சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிவிடுகின்ற சமூகச் சூழல்பற்றி.

எம். ராமசாமி : கீழ வெண்மணி சம்பவத்தின் நீதிமன்ற அறிக்கைபற்றி.

குணசேகரன் : தீண்டாமையை நகைச்சுவையுடனும் சிந்தனையுடனும் பார்க்க வைக்க முயற்சி செய்யும் நாடகம்.

சம்பந்தன் : குடும்பக் கட்டுபாட்டுக்கு ஆள் பிடித்துவர நிர்ப்பந்திக்கும் பள்ளி நிர்வாகம். அதிலே பாதிக்கப்படும் ஒரு பெண் டீச்சரின் சோகங்கள் பற்றியும்.

ஞாநி : மகாபாரத சூதாட்டக்காட்சியை 33 ஆண்டுகால சுதந்திர இந்தியாவின் வரலாற்றோடு ஒப்பிட்டு விமர்சித்தல்.

அந்தனி ஜீவா : சாத்தான் வேதம் ஓதுகிறது என்ற தலைப்பில், தேர்தல் குறித்தும் வாக்குறுதிகள் குறித்தும் மக்கள் ஏமாற்றுவது குறித்தும் ஒரு பார்வை.

அக்னி புத்திரன் : இராமாயணத்திலிருந்து ஒரு காட்சி. அக்னிபிரவேசம். சீதை, இராமனையும், தீயில் புகுந்து வெளியே வரச் சொல்லிக் கேட்டல்.

ராஜேந்திரன் : மக்களின் நல்வாழ்வுக்காக என்று சமூக வாதிகளால், அரசியல்வாதிகளால் இதுவரை போடப்பட்ட எல்லாக் கோஷங்களும், மக்களை மேலும் மேலும் வறுமைக்குள்ளாகிறது என்பதை சித்தரித்து.

இந்த 28 நாடகங்களைப் பற்றியும், நிறையச் சொல்ல வேண்டும். முற்றாகவும், மூன்றாவது தியேட்டரின் கொள்கைகளுக்கிணங்க, தயாரிக்கப்பட்ட நாடகங்கள்.

பத்தே நிமிடங்களில் ஒவ்வொரு நாடகமும் தயாரிக்கப்பட்டது.

நாடக மேதை பாதல் சர்காரிடம் பயிற்சி பெற்ற அத்தனை விசயங்களையும் பயன்படுத்தி, மனித உடல்களை மாத்திரம் வைத்து நாடகங்கள் நடத்தி காட்டப்பட்டன.

நாடகத்தை மிகவும் அக்கறையுடன் பார்த்த பாதல் சர்க்கார் "எனக்கு வயதாகி விட்டது. நான் வயதானவன் இது போன்ற நாடகப்பயிற்சி பட்டறைகளில் பயிற்சி பெற்று செல்கின்ற நீங்கள் தான், இந்த 28 பேரும் இந்த தீபத்தை பல்வேறு பகுதிகளுக்கு எடுத்துச் சென்று பிரகாசிக்கச் செய்யப் போகிறீர்கள் என்று நான் நம்புகிறேன்." என்றார்.

நாடக மேதை பாதல் சர்காரின் வீதி நாடக பயிற்சி பட்டறை என்னை புது மனிதனாக, புதிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தை என் உள்ளத்தில் விதைத்தது.

நாடு திரும்பியதும் என் நாடகப் பணி தொடர்ந்தது.

*– இன்னும் வரும்*

---






**மனித உரிமை ஆர்வலரும். தொழிற்சங்கவாதியுமான காசிப்பிள்ளை தவபாலச்சந்திரன் கண்டியில் வரி ஆலோசகராகப் பணியாற்றி வருகின்றார். அரசியல் விஞ்ஞானப் பட்டதாரியும். கணக்கியலாளருமாகிய இவர் பேராதனை இந்துக்கல்லூரியின் அபிவிருத்திச் செயலாளராகவும். கண்டி சத்திய சாயி கலாலயம், உள்நாட்டு இறைவரிச் சேவைச் சங்கம் ஆகியவற்றின் மத்திய குழு உறுப்பினராகவும் பணி புரிந்ததோடு மேற்படி தொழிற்சங்கத்தின் தமிழ்ப் பிரிவுப் பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். ஞாயிறு தினக்குரல் பத்திரிகையில் 'தசரதன்' என்ற புனைபெயரில் கட்டுரைகளை எழுதிவரும் இவர் ஞானம் சஞ்சிகைக்கு கா. தவபாலன் என்ற பெயரில் ஆக்கங்களை வழங்கி வருகின்றார்.**

*குடும்பமே ஒன்றாகி, குதூகலமாய் குந்தி,*
*ஒடியல் கூழ் நான்மீண்டும் குடிக்கும் நாள் எந்நாளோ?*
*அம்மாவின் கையால் அருமையான சோறு கறி*
*நான் மீண்டும் தின்னும் நன்னாள் எந்நாளோ!*

*சேற்றில் இறங்கி, செம்மையாய் நெல் நாட்டி,*
*உழவர் பெருமக்கள் எப்போது சோறிடுவர் எமக்கு?*
*தேனும், பசுப்பாலும், எருமைத் தயிருமுண்டு*
*நானும் எம்மவரும் மகிழும் நாள் எந்நாளோ?*

*மூலைப்பலாவில் முத்தான பலாப் பழங்கள்,*
*முற்றத்து மா மரத்தில் முற்றிப்பழுத்த மாம்பழங்கள்,*
*கடற்கரையில் கனமீன்கள், ஆலடியில் மரக்கறிகள்*
*எல்லாம் இருந்தும் ஏனிந்தப் பட்டினியோ?*

*கணுக்கேணிக் குளத்தினிலே கச்சிதமாய் நீந்தி,*
*சோழகக் காற்றின் சுகம்தன்னை அனுபவித்து,*
*சீனட்டி வயலினிலே சீராய் நடந்து வந்து,*
*குமாரபுரம் குமரனை நான் கும்பிடும் நாள் எந்நாளோ?*

*சேவலும், குயிலும் மாறி மாறிக் கூவிடும்*
*சத்தம் கேட்டுச் சடுதியாய் துயிலெழுவேன் அன்று*
*சேவலும் இல்லை, குயிலும் இல்லை, விடியலும் இல்லை இன்று.*
*வற்றாப்பளை அம்பாளே! அகதிகளுக்கருள்புரிவாய்.*

# முட்கம்பிக்குள்...

**வாகரை வாணன்**

முட் கம்பிக்குள்
மூன்று லட்சம் தமிழ் முகங்கள்
சொற்கள் இல்லை
அவர்கள்
சோகத்தைச் சொல்ல!

முல்லைத் தீவில்
மூடு திரைக்குள்
அல்லலை
அணு அணுவாக
அனுபவித்தவர்கள்
அதுவும் போதாதென்று
இன்று
கம்பி வேலிக்குள்
அடைக்கப்பட்டிருக்கிறார்கள்
கைதிகளாக...!

உறுப்பிழந்தவர்கள்
ஊனமானவர்கள்...
ஒன்றா? இரண்டா?
வெறுப்பு... விரக்தி
அவர்கள் விழிகளில்
கறுப்பு யூலை
இதன் முன்
ஒரு சிறு கடுகு!

முன்னாள் தலைமை நீதிபதியின்
கண்கள்
இந்தக் காட்சியைக்
கண்டு தானே கலங்கின!

என்ன பாவம் செய்தார்கள்
இந்தச் சனங்கள்?
மண்ணில் தமிழனாகப்
பிறந்தது
மகாபாவமா?

அந்நிய நாடுகள்
ஆயிரம் சொன்னாலும்
புண்ணியவான்
புத்தி மட்டும்
மாறாது போலும்!

பிறந்த மண்ணிலிருந்து
பெயர்த்தெறியப் பட்டவர்கள்
நிரந்தரமாகவே
இந்த முள் வேலிக்குள்
நிறுத்தப்படலாம்!

சந்தேகம் இல்லை
நமது சமூகத்திற்கு
இந்தியா செய்த
மகா உதவி இது!

பழி தீர்த்துக் கொண்ட
பஞ்ச சீலத் தேசமே,
இந்த இழிவு உன்னோடு
எப்போதும் இருக்கும்!

---




புதன்கிழமை, திருமண ஆற்றுப்படுத்துநர் அலுவலகத்துள் வழமையைவிட அதிக சனம். பாவம் திருமண ஆற்றுப் படுத்துநர்! கருமங்களை ஆற்றுவதில் மிகவும் சிரமப் படுகின்றார்.

பற்றாக்குறைக்குத் தொலைபேசி தொந்தரவு வேறு. கோல் மேல் கோல் வந்தபடி. ரெலிபோனைக் கவனிப்பதா, வாடிக்கையாளரைக் கவனிப்பதா? – திருமண ஆற்றுப்படுத்துநர் தடுமாறுகிறார்; தத்தளிக்கின்றார்!

ஒரு இளைஞன் விடுவிடென்று அலுவலகத்துள் உள்நுழைந்தான். வந்தவன் அமரவில்லை; ஆறுதலாக – அமைதியாக அமர வேண்டுமென நினைக்கவுமில்லை; தனது கையடக்கத் தொலைபேசியை முடுக்கினான்; உளறிக் கொட்டினான்.

அவஸ்தையைத் தாங்கமுடியாத ஆற்றுப்படுத்துநர் இளைஞனிடம் அவனின் கையடக்கத் தொலைபேசியைத் செயலிழக்க செய்யும்படி வேண்டினார்.

அவனின் அசட்டைப் பதில் எமக்கு அதிர்ச்சியைத் தந்தது. அவன் சொன்னான்: "என்ரை கரைச்சல் எனக்குத்தான் தெரியும்! வட்டிக்குக் கைமாறாக வேண்டிய மூதேசி... வாங்கிய காசைத் தாறானில்லை"

-யாவும் கற்பனையல்ல

# சமகால கலை இலக்கிய நிகழ்வுகள்

குறிஞ்சிநாடன்

## இருநூல்கள் அறிமுகவிழா

வடக்குமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அண்மைக்கால நவீன இலக்கியப் போக்குகள் (வடமாகாணம்) ஈழநாடு சிறுகதைகள் (தொகுதி I) ஆகிய இருநூல்களின் அறிமுகவிழா கடந்த 04.07.2009 சனிக்கிழமை இடம்பெற்றது. யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கத்தின் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வே. கணேஷ் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

நூல் அறிமுகவுரையை யாழ். மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி. சு. விஜயரத்தினமும் மதிப்புரை திரு. மா. அருள் சந்திரனும் வழங்கினர். நூல் ஆய்வுரையை யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் ம.பா. மகாலிங்கம்சிவம் நிகழ்த்தினார். ஏற்புரை நிகழ்த்திய ஈழநாடு சிறுகதைகள் நூலின் தொகுப்பாசிரியரான செங்கை ஆழியான் அவர்கள் கலாசார உத்தியோகத்தர்கள் தத்தமது பிரதேச செயலகப் பிரிவுகளில் மாதாந்தம் ஒரு கலாசார விழாவையாவது நடத்த ஒழுங்கு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அத்துடன் யாழ். மாவட்டத்தில் மிகப் பெரிய அளவிற் சாகித்திய விழா ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டு 2007, 2008ஆம் ஆண்டுகளுக்குரிய சிறந்த கலைஞர்களுக்கான விருதுகளும் வழங்கப்படவேண்டுமென வேண்டுகோள் விடுத்தார்.

## கைகேயி சூழ்வினைப்படலம் உரைநூல் வெளியீட்டு விழா

க.பொ.த (உ/த) மாணவர்களுக்கான புதிய பாடத்திட்டத்தில் கம்பராமாயணத்திலுள்ள கைகேயி சூழ்வினைபடலமும் இணைக்கப்பட்டுள்ளது. இப்படலத்திற்கான உரை விளக்கக் குறிப்புக்கள் அடங்கிய நூல் யா/புனித பத்திராசிரியர் கல்லூரித் தமிழ் ஆசிரியர் திருமதி ஓம் சக்தி யசோதன் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

புனித பத்திராசிரியார் கல்லூரித் தனிநாயகம் அடிகளார் முத்தமிழ் மன்றத்தினால், கல்லூரி மண்டபத்தில் 01.07.2009இல் நடத்தப்பட்ட இவ்விழாவிற்குக் கல்லூரி அதிபர் அருட்தந்தை ம. ஜெறோ செல்வநாயகம் அவர்கள் தலைமை தாங்கினார். கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி. சி. திருநாவுக்கரசு அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

நூலிற்கான வெளியீட்டுரையை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரித் தமிழ்த்துறை விரிவுரையாளர் திரு. ஆ. ரவீந்திரனும் ஆய்வுரையை ம.பா. மகாலிங்கசிவமும் நிகழ்த்தினர். முதற் பிரதியை தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணக் கிளையின் முகாமையாளர் திரு. வி. அருளானந்தம் பெற்றுக் கொண்டார். ஏற்புரையை நூலாசிரியர் திருமதி. ஓம் சக்தி யசோதன் வழங்கினார்.

தகவல். ம.பா. மகாலிங்கசிவம்

## மலையக நாடகங்களில் பபூன் பாடல்கள் - விளக்கம்

அண்மையில் கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் கலாபூஷணம் மு. சிவலிங்கம் தொகுத்த மலையக நாட்டார் பாடல்கள் தொகுதியில் இருந்த 'பபூன் பாடல்கள்' என்ற தலைப்பில், கண்டி பெண்கள் உயர்நிலைப் பாடசாலை ஓய்வு பெற்ற பிரதி அதிபர் திருமதி. நவம் வெள்ளைச்சாமி பேசினார். திருமதி வசந்தி தயாபரன் அவர்கள் தமிழ்மொழி வாழ்த்துப்பாட 'ஞானம்' சஞ்சிகை ஆசிரியர் திரு. ஞானசேகரன் அவர்கள் தலைமை தாங்கினார். அவர் தமது தலைமையுரையில், ஆங்கிலேயர் காலத்தில் காட்டை அழித்து தேயிலை றப்பர் பயிர் செய்ய தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர்களை இறக்குமதி செய்தனர். பண்ணையார், ஜமீந்தார்களிடம் அடிமைப்பட்ட நிலையில் வறுமையுடன் வாழ்ந்த மக்கள் கூட்டம் நல்ல வளமான வாழ்வு பெறும் பொருட்டு படகுகள் மூலம் இலங்கை வந்தனர். வரும் வழியிலேயே மலேரியா போன்ற நோய்களால் அநேகர் இறந்தனர். காலால் நடந்து மாத்தளை அடைந்து பல இடங்களுக்கும் கங்காணிமாரால் அழைத்துச் செல்லப்பட்டனர். தங்கள் தங்கள் கிராமங்களில் தாம் கற்றுக் கொண்ட பல கலைகளை தோட்டங்களில் ஓய்வு நேரங்களில் துன்பங்களை மறப்பதற்காக ஆடிப்பாடினர்' என்றார்.

மலையக நாடகங்களில் பபூன் பாடல்கள் என்னும் தலைப்பில் திருமதி நவம் வெள்ளைச்சாமி கருத்துரை வழங்கினார். இந்தியாவில் இருந்து வந்த மக்கள், அர்ச்சுனன் தபசு, நல்லதங்காள், காமன் கூத்து, பொன்னர் சங்கரர் கதை, அல்லி அரசாணி, கோவலன் கதை போன்றவைகளை திருவிழாக் காலங்களில் மேடை ஏற்றினர். நாடகம் பார்க்கவரும் மக்கள் இரவிரவாக விழித்திருக்க வேண்டும் என்ற விருப்பில் நகைச்சுவை நடிகராக பபூன் வேஷமிட்டு நடிப்பவர் விளங்கினார். மக்களுக்கு மகிழ்ச்சியூட்டவும், நாடகம் தொய்வு பெறாமல் இருக்கவும். பபூன் சந்தர்ப்ப சூழ்நிலை அனுசரித்து தனது பாகத்தை சிறப்பாகச் செய்தார். பாமரர் இலக்கியமாகத் திகழ்ந்த நாட்டார் பாடல்களை பபூன் வேசமிட்டவர் பாடியும் ஆடியும் காட்டி சபையோரின் கரகோஷங்களையும் பெற்றார். நாட்டு நடப்பு விஷயங்கள், தோட்டத்தில் நடைபெறும் அராஜகங்கள் என்பனவற்றையும் பாட்டில் அமைத்து பாடத் தவறுவதில்லை. இந்த மக்கள் தம்மோடு தங்கள் கலையையும் கலாசாரத்தையும் கொண்டுவந்தனர். வானொலி, சினிமா, தொடர் நாடகங்கள் இடம்பெறும் இக்காலத்தில் பபூன் பாடல்கள் அருகி வருகின்றன என்றார். திரு. எழில்வேந்தன் திரு. வைரவநாதன் முதலியோர் பாராட்டிப் பேசினர்.

## ஓர் வரலாற்றுப் பார்வை நூல் வெளியீடு

சரவணை பள்ளம்புலம் அருள்மிகு முருக மூர்த்தி திருக்கோவில் ஓர் வரலாற்றுப் பார்வை என்னும் நூல்வெளியீட்டு விழா அண்மையில் கொழும்புத் தமிழ்ச்சங்க மண்டபத்தில் இடம்பெற்றது. மேற்படி விழாவுக்கு முதுபெரும் தமிழ் அறிஞரும், தமிழ்க் காவலரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கா.பொ. இரத்தினம் அவர்கள் தலைமை வகித்தார். மேற்படி நூலை ஆசிரியர் திரு. மகாலிங்கம் எழுதி இருந்தார். திரு. கேதாரநாதன், திரு. திருமதி. பன்னீர் செல்வம் ஆகியோர் சுடரேற்றி விழாவை ஆரம்பித்தனர். திரு. தவயோகராஜா தேவாரம் பாட திருமதி. சிவமலர் மன்மதராஜன் வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. மாணிக்கவாசகர் முனைவர் கா.பொ. இரத்தினம் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி, பூமாலை அணிவித்து கௌரவப் படுத்தினர். தினக்குரல் பத்திரிகை நிறுவனர் எஸ்.பி. சாமி அவர்கள் நூலாசிரியர் மகாலிங்கம் தம்பதிகளுக்கு பொன்னாடை கௌரவம் செலுத்தினார். கம்பன் கழக கம்பவாரிதி அவர்கள் வாழ்த்துரை வழங்கும்போது குறளை அறியவும் தமிழ்மீது காதல் கொள்ளவும் வைத்தவர் மூதறிஞர். கா.பொ. இரத்தினம் அவர்கள். அரசியலில் இருந்து கொண்டே தமிழை வளர்த்த பெருமகன். எங்கே கடவுள் பக்தியும், மூத்தோரிடம் நன்றிக் கடனும் மிக்கவர்களாக மக்கள் இருக்கிறார்களோ அவர்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும். வாழ்வு சிறக்கும். இந்த இரண்டு திறத்தையும் கொண்டவர்களாக யாழ்மக்கள் இருப்பதால் உயிர் இழப்பு பொருள் இழப்பு இருந்தாலும், தெய்வ நம்பிக்கையையும் நன்றி மறவாமையையும் கைக் கொண்டவர்களாகவும் இருப்பதால் அவர்களுக்கு அழிவு இல்லை. சிறிய வயதிலேயே தீவுப் பகுதியில் உள்ள அனைத்து கோயில்களிலும் பேசி இருக்கிறேன். எனக்கு உணவு கொடுத்து நேசித்து வளர்த்தவர்கள் அவர்கள். ஆகையால் அவர்களை வாழ்த்தும் உரிமை எனக்கு உள்ளது என்று பேசினார். அருள்மொழி அரசி வித்வான் வசந்தா வைத்தியநாதன் பேசுகையில் பிறந்த வீட்டை விட புகுந்த வீட்டையே நான் நேசிக்கிறேன். இறைவனுடைய அநுக்கிரகத்தாலும் எனது கணவருடைய ஒத்துழைப்பாலும் வடபுலத்தில் உள்ள அனைத்து கோயில்களிலும் பேசும் வாய்ப்பும் மக்களுடன் பழகும் வாய்ப்பும் கிடைத்தன. தெய்வமணமும் தமிழ்மணமும் கலந்து வீசும் ஊர் யாழ்ப்பாணம். உரிமையோடு தன்னை அழைத்தவர்களெல்லாம் நன்றி கூறினார். வேலணை வேணியன் அவர்கள் வெளியீட்டுரை நிகழ்த்தினார். முதற் பிரதியை தினக்குரல் அதிபர் எஸ்.பி. சாமி அவர்கள் பெற்றுக்கொண்டார். கவியரசர் கண்ணதாசன் மன்றம் சார்பாக நூலாசிரியருக்கு 'இறைபணிச் செம்மல்' என்ற கௌரவ பட்டத்தை மன்றத் தலைவர் கவிஞர். வேலணை வேணியன் வழங்கிக் கௌரவித்தார்.

## ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம் நூல் வெளியீடு

ஈழத்து தமிழ் நாவல் இலக்கியம் நூல் வெளியீடு அண்மையில் கொழும்பு தமிழ்ச்சங்க விநோதன் மண்டபத்தில் இடம்பெற்றது. மேற்படி விழா மங்கல விளக்கேற்றத்துடன் ஆரம்பமானது. இவ்விழாவை குமரன் புத்தக இல்லமும், ஞானம் இலக்கியச் சஞ்சிகையும் இணைந்து நடத்தியது. டாக்டர் ஞானசேகரன் தனது உரையில் பெரியமண்டபத்தில் நடத்த முடியாது போனதற்கு உரிய காரணங்களை விளக்கியதுடன் நூலாசிரியர் கலாநிதி நா. பாலசுப்பிரமணியன் அவர்கள் நாடு அறிந்த இலக்கிய கர்த்தா சிறந்த விமர்சகர் ஏற்கனவே வெளிவந்த நூலை புதுப்பித்து நிறைவாக்கித் தந்துள்ளார். ஈழத்து இலக்கிய உலகம் என்றும் அவருக்குக் கடமை பட்டிருக்கும் என்று கூறினார்.

மேற்படி விழாவுக்கு தலைமை தாங்கிய பேராசிரியர் சண்முகதாஸ் அவர்கள் பேசும் போது. புகழ்பெற்ற இலக்கிய கர்த்தா ஒருவருக்கு படிப்பிக்கும் பாக்கியம் எனக்கு கிடைத்தமை நான் பெற்ற பேறாகும். இவர் ஓர் இலக்கியப் பிரியர். எந்த நேரமும் ஏதாவது படித்துக் கொண்டே இருப்பார். 1977ம் ஆண்டுவரை வந்த நாவல்களை அடக்கிய நூல் முதலில் வெளிவந்தது. 1977ம் ஆண்டுக்குப் பின்னரான நூல்களையும் சேர்த்து ஒரு நூலாகப் படைத்து நம்முன் வைத்துள்ளார். ஆக்க இலக்கியக் காரருக்கு இந்நூல் வரப்பிரசாதமாக அமையும் என்றார். மேற்படி நூலை விமர்சனம் செய்யவந்த பிரபல எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப், நாங்கள் அரசியல் அநாதைகள் ஆனது போல, இலக்கியவுலகிலும் அநாதைகளாக உள்ளோம். சிலர் கண்டு கொள்வதில்லை, சிலர் வேண்டுமென்றே இருட்டடிப்புச் செய்கிறார்கள். திரு. ந.சு. அவர்கள் பார்வை காய்தல் உவத்தல் இன்றி இருக்கிறது என்றார். விமர்சனத்திற்காக அடுத்து வந்த திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்கள் நான் ஒரு எழுத்தாளி மட்டுமே. ஆய்வுரைக்கு அழைத்தபோது நான் சங்கடமடைந்தேன். எங்கள் நூலை பேராசிரியர் விமர்சிப்பதே பொருத்தம். அவரது நூலை நாங்கள் விமர்சனம் செய்வதற்கான தகுதி இல்லை. எனினும் அழைத்தமைக்காக நன்றி. அவரது ஆழமான வாசிப்பும். எழுத்தை ஊக்குவிக்கும் தன்மையும், நேர்மையான பார்வையும் எவரையும் மட்டம் தட்ட நினைக்காத மனப்பாங்கும் எல்லோருக்கும் வந்து விடாது. எமது நாவல்களை மேநாட்டு நாவல்களுடன் ஒப்பிட்டு நோக்கி அபிப்பிராயம் சொன்னால் கூடுதல் நன்மை பயக்கும் என்றார். டாக்டர் நடேசன் அவுஸ்திரேலியாவில் இருந்து வந்தார். திருமதி ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியமும் கலந்து கொண்டனர். திரு. மானா மக்கீன், திரு.கே. சண்முகலிங்கம் ஆகியோர் குறிப்பு கூறினர். ஞானம் நடத்திய சிறுகதைப் போட்டியில் வெற்றி பெற்றோர்க்கு பணப்பரிசும் சான்றிதழும் வழங்கப்பட்டன.

## 'தொழிற் சட்டத்திற்கு ஒரு வழிகாட்டி' நூல் வெளியீடு

அண்மையில் இலங்கை மன்றக் கல்லூரியில் மேற்படி நூல் வெளியீட்டு வைபவம் இடம்பெற்றது. 'தொழிற் சட்டத்திற்கு ஒரு வழிகாட்டி' என்ற நூலை தொழில் சட்ட நிபுணர் திரு. வே. விமலராஜா எழுதியுள்ளார். நூலின் முதற்பிரதியை நூலாசிரியர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. கே. ஸ்ரீபவன் அவர்களுக்கு வழங்கினார். மேற்படி வைபவத்தில் மேன் முறையீட்டு நீதிபதி எஸ். ஸ்ரீஸ்கந்தராஜாவும் இன்னும் பலரும் உரையாற்றினர். சட்டத் தரணிகளும் வேறும் பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

## யாழ்ப்பாண பிரதேசத்தின் கலைஞர் விபரத்திரட்டு நூல்வெளியீட்டு விழா

யாழ்ப்பாணப் பிரசேத்தில் வாழ்ந்த, வாழ்கின்ற கலைஞர்கள் பற்றிய விபரங்கள் அடங்கிய கலைஞர் விபரத்திரட்டு (தொகுதி I) நூல் வெளியீட்டு விழா 12.07.2009இல் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் இடம்பெற்றது. இவ்விழாவிற்கு யாழ் அரச அதிபர் திரு. கே. கணேஷ் அவர்கள் தலைமை தாங்கினார்.

இந்நூல் பல்துறைகளைச் சேர்ந்த 554 கலைஞர்களைப் பற்றிய விபரங்களையும், புகைப்படங்களையும் உள்ளடக்கியதாக உள்ளது. இவ்விழாவிலே பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத்தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜாவும் சிறப்பு விருந்தினராக கலாபூஷணம் செ. மெற்றாஸ் மெயில் அவர்களும் கலந்து கொண்டனர். இவ்விழாவில் நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், யாழ் ஆயர் இல்லத்தைச் சேர்ந்த அருட்திரு எ.எவ்.எக்ஸ். ஜெயசேகரம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இங்கு உரையாற்றிய பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா 'எமது பண்பாட்டுப் பாரம்பரியத்தில் கலைஞனை வாழும் போதே பாராட்டும் பண்பு குறைவாக உள்ளது. கலைஞர் பற்றிய தகவல்களை அவர்கள் காலத்திலேயே பதிவு செய்து வைப்பது பின்னர் வரும் ஆய்வாளருக்கு உதவுவதாக அமையும். எமது வாழ்வியலைப் பேண வரலாற்றினை நிலை நிறுத்தக் கலைஞர் பற்றிய பதிவுகள் அவசியம் என்றார்.

தலைமையுரை ஆற்றிய திரு. கே. கணேஷ் அரச அதிபர் 'எமது மண்ணுக்குத் தமது கலைப்படைப்புக்களால் உரமூட்டிய கலைஞர்கள் எம்முடன் நிரந்தரமாக வாழவேண்டும் என்ற ஆர்வத்தினாலேயே இந்த நூல் வெளியிடப்படுகின்றது. இதுவரை காலமும் இலைமறைகாய்களாக இருந்த சிற்பம், ஓவியம், இலக்கியம் முதலிய பல்துறைகளையும் சேர்ந்த பல்துறைச்சாதனையாளர்களை இந்நூல் அறிமுகப்படுத்துகின்றது'' என்றார். நூலுக்கான ஆய்வுரையை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் நிகழ்த்தினார். மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், செ. மெற்றாஸ் மெயில் முதலியோரும் இங்கு உரை நிகழ்த்தினார்.

**தகவல். ம.பா. மகாலிங்கசிவம்**

## வதிரி. இ. இராஜேஸ்கண்ணனின் "தொலையும் பொக்கிசங்கள்" சிறுகதை நூல் வெளியீட்டு விழா

இவ்விழா கடந்த 11.07.2009 சனிக்கிழமை யா/ தேவரையாளி இந்துக் கல்லூரியில் இடம் பெற்றது. மீரா பதிப்பக வெளியீடாக வெளிவரும் இந்நூலின் வெளியீட்டு விழாவிற்கு கலாபூஷணம் தெணியான் அவர்கள் தலைமை தாங்கினார். நூல் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழகக் கல்வியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. த. கலாமணி நிகழ்த்தினார்.

இந்நிகழ்விலே தலைமையுரையாற்றிய தெணியான் அவர்கள் 'எழுத்தாளர்கள் இலக்கியம் என்றால் என்னவென்பதைச்சரியாக விளங்கிக் கொண்டு எழுத வேண்டும். சமூகத்திற்குப் பயனற்ற கதைகளைத் தவிர்த்துப் பயன் நிறைந்த இலக்கியங்கள் தோன்ற வழிவகுக்க வேண்டும். இந்தவகையில் இராஜேஸ்கண்ணனின் எழுத்துக்கள் சமூகப் பயன் வாய்ந்தவையாக உள்ளன'' எனத் தெரிவித்தார்.

வெளியீட்டுரை ஆற்றிய த. கலாமணி அவர்கள் பல்வகை ஆளுமைகள் கொண்ட எழுத்தாளராக விளங்கும் இராஜேஸ்கண்ணன் சமூகயதார்த்தத்தைப் புரிந்து கொண்டு எழுதுகின்றார் என்றார். நூல் ஆய்வுரைகளைப் புலம்பெயர் இலக்கிய ஆய்வாளர் திரு. சு. குணேஸ்வரனும் ஆசிரியர் வேல் நந்தகுமார் அவர்களும் நிகழ்த்தினர்.

**தகவல் : பூ. நகுலன், ம.பா. மகாலிங்கசிவம்**

## சிவத்தமிழ் செல்வம் நூல்வெளியீட்டுவிழா

அண்மையில் தெல்லிப்பழை 'கலை இலக்கியக் களம்' ஏற்பாடு செய்த ஒன்று கூடலும் நூல் வெளியீட்டு விழாவும் கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப் பிள்ளை மண்டபத்தில் கோலாகலமாக இடம் பெற்ற போது சிவத்தமிழ்ச் செல்வியின் ஓராண்டு பூர்த்தி விழாவும் நடைபெற்றது.

மங்கள விளக்கை இந்து கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி திருநாவுக்கரசன், தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் க. இரகுபரன், ஞானம் ஆசிரியர் ஞானசேகரன் உலக சைவப் பேரவை இலங்கைக்கிளை மு. கதிர்காமநாதன், சமூக ஜோதி இலகுப்பிள்ளை, ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி முதலியோர் ஏற்றிவைக்க அமரர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் திருவுருவப் படத்திற்கு திருமதி நேசபூபதி நாகராஜன் மலர் மாலை சூட்டினார். திருமதி பாரதி ஜெயதீசன் தேவாரம் ஓத, சந்திர குமாரன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

மேற்படி விழாவுக்கு தலைமை தாங்கிய கலாபூஷணம் சைவப்புலவர் சு. செல்லத்துரையவர்கள் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் அரும்பெரும் பணிகள் பற்றி எடுத்துரைத்தார். தமிழுக்கும் சைவத்திற்கும் செய்த தொண்டுகள் உலகளாவிய ரீதியில் பரந்து உணரப்பட்டுள்ளன. அவரது பிறந்தநாளன்று அறக்கொடை மூலம் எழுத்தாளர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இவரது அரிய பணிகள் பற்றி இளம் சமுதாயம் அறிய வேண்டும் என்பதற்காக நூல்களும் வெளியிடப்படுகின்றன என்றார். சாந்தி நாவுக்கரசன் பேசுகையில் இன்றைய விழா மூன்று அங்கங்களைக் கொண்டதாகவுள்ளது. அன்னையை ஈழத் தமிழர் மட்டுமன்றி உலகவாழ் சைவ மக்கள் அனைவரும் அன்னையாக ஏற்று மதித்துத் துதிக்கின்றனர். அவரது ஆழ்ந்த சைவப்பற்றும் தமிழ்ப் பற்றும் சமூகப் பணிகளும் அனைவராலும் போற்றப்படுகின்றன. அவரது பிறப்பெண்ணும் கூட்டு எண்ணும் ஏழாக விருப்பதால் ஆன்மீகத் துறைக்கு இழுத்து விட்டது என்றார்.

திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள் அன்னையின் அறப்பணிகள் குறித்தும் தலைமைத்துவப் பண்புகள் குறித்தும் பேசினார். அவரது ஆளுமைப்பண்புகள் எல்லோருக்கும் முன்மாதிரியாக அமைந்தன. அவருடன் நெருங்கிப் பழகிய காரணத்தால் அவரது ஆளுமையின் இருபத்து மூன்று பண்புகளை இனம் கண்டேன். எனினும் எழு பண்புகளையே என்னுடைய நூலில் எழுத முடிந்தது. அவரிடம் புகழும் பணமும் அதிகாரமும் இருந்தன. இருந்தும் நேர்மையாகவே வாழ்ந்தார் என்றார்.

கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் இரகுபரன் பேசும் போது, நாவலரையும் அம்மையாரையும் ஒப்பிட்டுப் பேசினார். இருவரும் பிரமச்சிரியம் பூண்டவர்கள். சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றியவர்கள். இருவரும் வெளிநாடுகளில் பேருரையாற்றியவர்கள். நாவலரை விட அம்மையார் முன்நிற்கிறார். காரணம் நாவலர் விமர்சனத்திற்கு உள்ளானார். சிவஞானச் செல்வியோ விமர்சனத்திற்கு அப்பாற்பட்டிருந்தார் என்றார்.

திருமதி ஹம்சானந்தி தர்மபாலன், சேதுபதி கோணேஸ்வரன், திருமதி லலிதாங்கி மயூரன் ஆகியோர் இசை அஞ்சலி வழங்கினர்.

## கூத்துக் கலைபற்றிய கருத்துரை

இலங்கை மற்றும் இந்திய கூத்துக்கள் பொதுமையும் வித்தியாசமும் என்ற தலைப்பில் கொழும்புத் தமிழ்ச்சங்கம் நடத்தும் படித்ததும் பிடித்ததும் நிகழ்வில் கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. சி. ஜெய்சங்கர் கருத்துரை வழங்கினார். மேற்படி நிகழ்வுக்கு வைத்திய கலாநிதி ஜின்னா ஷெரிப்புத்தீன் தலைமை வகித்தார். கூத்துக் கலை பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களிலும் காணப்படுகின்றன என்றும் மன்னர்களையும் மக்களையும் மகிழ்விப்பதற்காகவே இது அமைந்திருந்த தென்றும் கூறினார். திரு ஜெய்சங்கர் பேசும்போதும் கூத்துக்கலை அருகி வருகிறது இதனை வளர்க்க வேண்டும் என்று குரல்கள் எழும்பியுள்ளன. இந்தியாவிலும் இலங்கையிலும் கூத்துக்கள் இரவிரவாக நடத்தப்பட்டன. இப்போது சூழ்நிலைகளை அனுசரித்து இரண்டு மூன்று மணித்தியாலங்களுக்குள் அடக்கப்படுகின்றன. இதனால் முழுமையான பாரம்பரிய பண்பாட்டினை அறிந்து கொள்ள முடியாது போகின்றது. இந்தியாவில் குழுமமாக இருந்து இக்கலை வளர்க்கப்படுகிறது. அவர்கள் சங்கம் அமைத்து அரச வருமானமும் பெறுகின்றனர் என்றார். ஞானம் ஆசிரியர் வெளிநாடுகளில் இரவிரவாக கூத்துக்கள் ஆடப்படுகின்றதா? இலங்கை சிங்கள பாரம்பரியக் கூத்துக்கள் சர்ச்சைகளை கிளப்பியுள்ளனவே ஏன் என்றார். பதிலளித்த பேராசிரியர் வெளிநாடுகளில் 'கசெற்' போட்டு ஆடுகின்றனர். முழு இரவும் நடப்பதாகத் தெரியவில்லை என்றும், சிங்கள கூத்து முரண்பாடு தற்கால இளைய சமுதாயம் ஒரு குறிப்பிட்ட வகுப்பினரை தாழ்த்துவதை விரும்பவில்லை என்றார். திரு. எழில் வேந்தன், நடிகமணி வைரமுத்துவின் கூத்து வகைக்குள் அடங்குமா எனக் கேட்டபோது அவரது வடிவம் இசை மரபுக்குரியது என்றார் பேச்சாளர்.

## அகதியின் யாசிப்பு

எங்கள் சுயசரிதைகள்
இனிய சுயமிழந்துபோன
சூனிய வெளியிலிருந்தே
தொடங்கும்
ஞாபகப் பொக்கிசமாய்
தாலாட்டும் நினைவுகளில்
மீண்டும் போய்
குந்தியிருந்து குதூகலிக்க
ஆசை எழும்
ஆனாலும் இன்னும் வடுமாறா
எங்கள் ரணங்களில்
யாரோடு குடியிருக்க
வீடும் எம் வயலும்
அங்கே அநாதையாய்
நானும் என் தம்பியும்
இங்கே அநாதையாய்
கதியிழந்து போன எங்கள்
காற்பயணம் மீண்டும் எப்போ......
ஓ கொடிய யுத்தமே
பறித்து விட்ட என் கால்களை
கையாய் இருந்த உறவுகளை
மீண்டும் உன்னால்
தரமுடியுமா? ஊனம்
என்னோடாவது முடியட்டும்
என் குழந்தையின் குழந்தையாவது
ஊன மின்றி உரிமையுடன்
வாழ விடுவாயா.....?

- புலோலியூர்
வேல்நந்தன்


## கலாபூஷணம் புலோலியூர் க. சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2009



(அனுசரணை : புலோலியூர் க. சதாசிவம் குடும்பத்தினர்)

முதற் பரிசு – ரூபா 3000/–
இரண்டாம் பரிசு – ரூபா 2000/–
மூன்றாம் பரிசு – ரூபா 1000/–

- *ஏனைய ஒன்பது சிறுகதைகளுக்கு தலா ரூபா 500 /- வழங்கப்படும்.*
- *முன்னர் பிரசுரமான கதைகள் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது.*
- *கடித உறையின் இடது பக்க மூலையில் கலாபூஷணம் புலோலியூர் க. சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி - 2009 எனக் குறிப்பிடல் வேண்டும்.*

*அனுப்ப வேண்டிய முகவரி:*

**ஞானம் கிளை அலுவலகம்** — 3-B, 46வது ஒழுங்கை, கொழும்பு – 06.

**போட்டி முடிவு திகதி – 30.08.2009**

**முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கும் கதைகள் போட்டியில் சேர்க்கப்படமாட்டாது**

– ஆசிரியர்

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்

கலாநிதி. துரைமனோகரன்

## அமரர்கள் மூவர்

அண்மையில் மூன்று முக்கிய முகங்கள் மறைந்துவிட்டன. ஒருவர் இசைமேதை டி.கே. பட்டம்மாள். இன்னொருவர் கவிஞர் முருகையன். மற்றவர் அறிஞர் வி.ஐ. சுப்பிரமணியம். இவர்களுள் இருவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். ஒருவர் நம்நாட்டைச் சார்ந்தவர்.

தமது பத்தாவது வயதிலேயே இந்திய வானொலியில் பாடத் தொடங்கிய டி.கே. பட்டம்மாள், காலப்போக்கில் மேடைக்கச்சேரிகள் செய்யத் தொடங்கி, புகழ்பெற ஆரம்பித்தார். பட்டம்மாளின் பெரும் பலம், கர்நாடக இசைப்பாடல்களோடு தேச பக்திப் பாடல்களையும், பாரதி பாடல்களையும் விருப்பத்தோடும், உணர்ச்சியோடும் பாடிவந்தமையாகும். இந்தியா சுதந்திரம் பெற்ற அன்றிரவு, அகில இந்திய வானொலியில் பாரதியின் "ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று" என்ற பாடலையும் வேறு பல பாடல்களையும் அவர் பாடினார். தமிழ்நாட்டின் திருநெல்வேலியில் ஒருமுறை பட்டம்மாள் பாரதியின் பாடல்களை உணர்ச்சி கலந்து மேடையில் பாடிக் கொண்டிருந்தபோது, அந்த நிகழ்ச்சியில் பாரதியின் மனைவியான செல்லம்மாளும் சபையோர் மத்தியில் இருந்து அவற்றைக் கேட்டுக் கொண்டிருந்தார். நிகழ்ச்சி முடிந்த பின்னர், செல்லம்மாள் பட்டம்மாளைக் கட்டித் தழுவிக் கண்ணீர் சிந்தி, அவரை மிகவும் பாராட்டினார். பட்டம்மாளின் இயற்பெயர் அலமேலுவாக இருந்தபோதிலும் அவரது செல்லப்பெயரான பட்டம்மாள் என்பதே நிலைத்துவிட்டது. பட்டம்மாளின் பல பாடல்களைக் கேட்டு நான் மகிழ்ந்திருக்கிறேன். எவ்வளவுதான் சிறந்த பாடகர், பாடகிகளாக இருந்தபோதிலும் திரைப்படங்களிலும் பாடும்போதுதான் அவர்களது புகழ் மேலும் பெருகக்கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது. பட்டம்மாளும் இதற்கு விதிவிலக்கு ஆனவர் அல்லர். தியாகபூமி என்ற திரைப்படத்தில் முதன்முதலாகப் பாடத்தொடங்கிய அவர், ஏறத்தாழ நூறு திரைப்படப்பாடல்களைப் பாடியதாகத் தெரிகிறது. திறமை மிகுந்த பாடகியான பட்டம்மாள் மறைந்தாலும், அவரது குடும்ப வாரிசான நித்ய ஸ்ரீ மகாதேவன், பட்டம்மாளின் பெருமையையும், தமது புகழையும் தக்கவைத்துக் கொள்வார். என்பதில் சந்தேகமில்லை.



ஈழத்துத் தமிழ்க் கவிஞர்கள் பற்றிச் சிந்திக்கும்போது முக்கியமாக மூவர் உடனடியாக மனக்கண் முன் தோன்றுவர். மஹாகவி, முருகையன், நீலாவணன் ஆகியோரே அவர்கள். மற்ற இருவரும் முன்னரே மறைந்துவிட்டனர். முருகையன் அண்மையில் தமது புகழ் உடலை எமக்கு விட்டுவிட்டுப் பூத உடலை மறைத்துக்கொண்டார். முருகையன் கவிஞராகவும் பா நாடக ஆசிரியராகவும் விமர்சகராகவும், மொழிபெயர்ப்பாளராகவும் தமது இலக்கியப் பணிகளைப் புரிந்துள்ளார். கைலாசபதியின் ஒருசாலை மாணவரான அவர் கைலாசபதியின் எழுத்துக்களிலும் அதிகமாக இடம் பெற்றிருந்தார். கைலாசபதியுடன் இணைந்தும் ஒரு நூலை (கவிதை நயம்) எழுதியுள்ளார். முருகையனின், கவிதைகள் தனித்துவம் மிக்கவையாக விளங்குவதைப் போன்றே, அவரது உரைநடையும் தனித்துவமானது. சுவாரசியமான ஓர் உரைநடை அவருக்கு உரியது. முருகையனின் பெருமைக்குரிய அம்சங்களுள் ஒன்று, தம்மைத் தாமே மேதாவியாகக் கருதாத அடக்கமான போக்காகும். அவரது படைப்புகள் அவரை என்றுமே வாழவைக்கும்.

அண்மையில் மறைந்த அறிஞரான பேராசிரியர் வி.ஐ. சுப்பிரமணியம் தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராக விளங்கியவர். மொழியியல், நாட்டாரியல் போன்ற துறைகளில் அதிக ஈடுபாடு கொண்டவராக அவர் திகழ்ந்தார். தஞ்சைப் பல்கலைக்கழகத்தை முற்று முழுதான ஆய்வுப் பல்கலைக்கழகமாக ஆக்கவேண்டும் என்ற ஆர்வம் அவரிடத்துக் காணப்பட்டது. மிகுந்த கண்டிப்பும் துணிச்சலும், செயல்திறனும் கொண்டவராகச் சுப்பிரமணியம் விளங்கினார். கண்டிப்புடன் அவர் நடந்துகொள்ளும் நிலை, பலவேளைகளில் அப்பல்கலைக்கழக ஆய்வாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் எரிச்சலூட்டியமையையும் நான் நேரில் கவனித்திருக்கிறேன். ஒருமுறை டெல்லியில் திராவிடவியல் தொடர்பான ஒரு நூலை மத்திய அமைச்சர் ஒருவரிடம் அவர் தொடுத்தபோது, அதைப்பிரித்துப் பார்க்காமலேயே "திராவிடம் என்பதெல்லாம் வெள்ளைக்காரரின் சூழ்ச்சி. அப்படி எதுவும் இல்லை" என்று சொன்னார், "அப்படியானால் இந்தியத் தேசியகீதத்தில் உள்ள திராவிட என்ற சொல்லை எடுத்துவிடுங்கள்" என்று கோபத்தோடு கூறிவிட்டு வெளியேறினார். வி.ஐ. சுப்பிரமணியம் தஞ்சைப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்குக் கட்டடரீதியாகவும், செயல்ரீதியாகவும் அத்திவாரம் இட்டவர். இலங்கை ஆய்வாளர்கள் பற்றி எப்போதும் உயர்ந்த அபிப்பிராயம் கொண்டவராக அவர் விளங்கினார். வி.ஐ. சுப்பிரமணியம் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராக இருந்தபோது, இலங்கையின் முதல் ஆய்வாளராகப் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் அங்கு சென்றார். இரண்டாவது ஆய்வாளராக நான்

சென்றேன். மூன்றாவது ஆய்வாளராகத் திருமதி ஞானா குலேந்திரன் சென்றார். அதன்பின்னர் பல ஆய்வாளர்கள் இலங்கையில் இருந்து சென்று வந்துள்ளனர். தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக அனுபவம் பயனுள்ளதாகவும், மறக்கமுடியாத ஒன்றாகவும் இருக்கிறது. தமிழ் ஆய்வுலகில் வி.ஐ. சுப்பிரமணியம் அவர்களின் பெயர் அழியாத இடத்தைப் பெற்றுவிட்டது.

## தமிழ்க் குறுந்திரைப்படங்கள்

இலங்கையை பொறுத்தவரையில், தமிழ்த் திரைப்படங்களின் வளர்ச்சி 1983 வரையில் குறிப்பிடத்தக்க அளவுக்கு இருந்தது. அதன் பின்னர், அதன் இறங்குதிசை ஆரம்பமானது. விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில படங்களே வெளிவந்தன. இதனை ஈடு செய்வதற்கு தொலைக்காட்சி நாடகங்களும், குறுந்திரைப்படங்களுமே உதவியிருக்க வேண்டும். ஆனால், எதிர்பார்த்த அளவுக்குத் தொலைக்காட்சி நாடகங்களின் வளர்ச்சி இலங்கையில் ஏற்படவில்லை. அதற்கு விளம்பரதாரர்களின் ஆதரவின்மை முக்கிய காரணம் ஆகலாம். எனவே, இன்றைய நிலையில் குறுந்திரைப்படங்களே இலங்கைத் தமிழ் மக்களின் கலையார்வத்தை ஓரளவு ஈடுசெய்வதற்குத் துணையாக விளங்குகின்றன.

இலங்கையில் தயாராகும் சில தமிழ்க் குறுந்திரைப் படங்கள், குறுந்திரைப்படம் பற்றிய பிரக்ஞை உணர்வோடு தயாரிக்கப்படுகின்றன. ஆனால் பெரும்பாலானவை ஆசையாலும் ஆர்வத்தாலும் ஓடும் திரைப்பட வடிவத்தில் தங்களைப் பார்க்கவேண்டும் என்று விருப்பத்தாலும் தயாரிக்கப்படுவனவாகக் காணப்படுகின்றன. பல குறும்படங்கள், குறும்படங்கள் பற்றிய பிரக்ஞை இன்றியே தயாரிக்கப்படுகின்றன. சிறுநீளத் திரைப்படங்கள் போன்றும் சில தயாரிக்கப்படுகின்றன. நான் பார்த்த குறுந்திரைப்படம் ஒன்றில், தமிழ் நாட்டுத் திரைப்படங்களில் வருவது போன்று ஜமின்தார் போன்ற பாத்திரமொன்று இடம் பெற்றிருந்தது. இத்தகைய பாத்திரங்களை இலங்கையில் காணமுடியாது. நடிக, நடிகைகள் தேர்விலும் போதிய கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. ஒருசில குறும்படங்களிலேயே நடிக, நடிகையர் தேர்வு திருப்தியாக அமைந்துள்ளது. இவ்வாறான சில குறைகள் இருந்த போதிலும், இலங்கையில் தமிழ்க் குறும்படங்களின் தயாரிப்பு வளர்ச்சியடைந்து வருவது வரவேற்கத்தக்கது. காலப்போக்கில் இத்தகைய குறைகள் நிவர்த்தி செய்யப்படலாம்.

அண்மைக் காலங்களில் பல்கலைக்கழக மட்டத்திலும் தமிழ்க் குறுந்திரைப்பட முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை இத்தகைய முயற்சிகளில் அதிக ஈடுபாடு காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. பல்கலைக்கழகங்களுக்கு வெளியிலும் நிறுவனரீதியாகவும் தனிப்பட்ட முறையிலும் குறுந்திரைப்பட முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

பேராதனைப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரை, மாணவர்களின் முயற்சிகளினால் இரண்டு தமிழ்க் குறும்படங்கள் இதுவரை வெளிவந்துள்ளன. வடலி (பற்றி முன்னர் எனது பத்தியில் எழுதியுள்ளேன்) ஆயுள் ரேகை ஆகியவை அக்குறும்படங்களாகும். வடலி இயன்றவரை குறும்பட வடிவத்தில் அமைந்துள்ளது. ஆனால், ஆயுள்ரேகை ஒரு முழுநீளத் திரைப்படம் போல் அமைந்துள்ளது. கதை, படத்தொகுப்பு ஒப்பனை முதலியவற்றில் போதிய கவனம் செலுத்தியிருக்கலாம். இத்தகைய குறைகள் இருந்தபோதிலும், பல்கலைக்கழக மாணவர்களின் முயற்சிகள் வரவேற்புக்குரியன.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையும், தமிழ்ச் சங்கமும் இணைந்து ஓரிரு மாதங்களுக்கு முன்னர் குறுந்திரைப்படங்கள் தொடர்பான கருத்தரங்கு ஒன்றினைப் பல்கலைக்கழகத்தில் நடத்தின. காலை அரங்குக்கு எம்.ஏ. நுஃமானும், மாலை அரங்குக்குத் துரை. மனோகரனும் தலைமை தாங்கினார். கருத்தரங்கு நிகழ்வுகளில் கே.எஸ். சிவகுமாரன், எம்.எஸ்.எம். அனஸ், சுமதி சிவமோகன், விமல்ராஜ் ஆகியோரும் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்களுடன் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களும் கலந்து கொண்டனர். வெளிநாட்டுக் குறுந்திரைப்படங்கள் சிலவும், விமல்ராஜின் கிச்சான் என்ற குறுந்திரைப்படமும் கருத்தரங்கின்போது காண்பிக்கப்பட்டன.

இதேவேளை, பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் இலங்கைத் தமிழ்க் குறுந்திரைப்படங்கள் தொடர்பாகத் தமிழ்த்துறை இறுதியாண்டு, மாணவர் ஒருவர் ஆய்வு செய்துள்ளார். இலங்கைத் தமிழ்க் குறுந்திரைப்படங்கள் தொடர்பான முதலாவது ஆய்வு முயற்சியாக இது அமைந்துள்ளது. இலங்கையில் தமிழ்க் குறுந்திரைப்பட முயற்சிகள் மேலும் செம்மையுற, இவ்வாறான பல்வேறு செயற்பாடுகள் உதவும்.

## தம்மையே புகழ்ந்து...

பொதுவாக நமது ஈழத்து இலக்கிய வாதிகள் தன்னடக்கம் கொண்டவர்கள் என்று சொல்லலாம். தம்மிடம் திறமைகள் காணப்பட்டபோதிலும், பெரும்பாலும் தம்மைப் பற்றி வலிந்து பெருமைபேசித் தமது பெருமையைக் குலைத்துக் கொள்ளமாட்டார்கள். ஆனால், அண்மைய ஞானம் இதழ் ஒன்றில் (ஜூன் 2009) பிரசுரமாகியிருந்த வாசகர் கடிதம் ஒன்று என்னை ஆச்சரியப்பட வைத்தது. நாடக எழுத்தாளரான அவர் இயல்பாகவே தமக்குக் கிடைக்கும் புகழினாலோ பெருமையினாலோ மனம் மகிழலாம். அதில் தவறு இல்லை. ஆனால் ''நானே ராஜா'' என்ற பாணியில் அவர் எழுதியிருப்பது, அவருக்கு இயல்பாகக் கிடைக்கக்கூடிய பெருமையைக் குறைத்துவிடுகிறது. இந்த முறையில் இதுவரையாரும். வாசகர் கடிதம் எழுதியதாக ஞாபகம் இல்லை.

தமது இரண்டு ''லட்சியங்''களுள் ஒன்றாக, ''பல்கலைக்கழகங்களில் கற்பிக்கப்படும் நாட்டுக்கூத்துகளை அகற்றிவிட்டு, அவற்றிற்கும் பதிலாக அங்கே நவீன நாடகங்களைக் கற்பிக்கச் செய்தல்'' என்பதையும் குறிப்பிட்டுள்ளார். நாட்டுக்கூத்துகள் மீது ஏன் இவருக்கு இத்தனை வெறுப்பு? நாட்டுக்கூத்துகளும் வேண்டும்; நவீன நாடகங்களும் வேண்டும். ஒரு கண்ணைக் குற்றிவிட்டு, ஒற்றைக்கண்ணோடு பார்க்க வேண்டும் என்பதுதான் இவர்தம் ஆசையா? தம்மைப் பற்றியும் தம்மைச் சார்ந்தவர்களைப் பற்றியும் மட்டுமே சிந்திக்கும் சில ''மேதாவிகள்'' இருக்கத்தான் செய்கிறார்கள்.

# வாசகர் பேசுகிறார்

109வது ஞானம் கண்டேன். ஒரே மூச்சில் வாசித்து முடித்தபின் இக்கடிதம்.

எழுத்தாளர் தெளிவத்தையின் நேர்காணல் அருமையாக, நேர்த்தியாக நகர்ந்து கொண்டிருக்கிறது. அவரது எழுத்தைப் போல சுவாரசியமான அனுபவங்கள், நெஞ்சை உறைய வைக்கும் நினைவுகள் ஒரு குறுநாவலையொத்த நேர்காணல் மிக அருமை.

நீண்ட நாட்களுக்குப் பின் சிவனுவின் ஒரு கதை நிமிர்வு. நல்ல நடை, பக்குவமான மொழி, சிறிய வட்டத்துள் கனதியாய் வித்தை காட்டும் லாவகம் சிவனுக்கு கைவரத் தொடங்கியிருக்கிறது. வாழ்த்துக்கள்.

''கவ்வாத்துக் களம்'' மு. ஜெயசீலனுக்கு நல்லதொரு ஆரம்பம். தொடர்ச்சியான வாசிப்பும் மலையகம் சார்ந்த நுண்ணிய நோக்கும் எதிர்காலத்தில் அவரிடமிருந்து சிறந்த மலையகச் சிறுகதைகள் வரக்கூடும்.

''நான் கடவுள்'' விமர்சனத்தில் பிரகலாத ஆனந்த் தினக்குரலில் வெளியான தி. ஞானசேகரின் கட்டுரையை உள்வாங்கியவர். ஜெயமோகனையும், அவரது ஏழாவது உலகம் நாவலையும் புறக்கணிப்பு செய்ததேனோ? நடிகர் திலகத்திற்கு நிகரான நடிப்பில் கடவுளாக என்று ஆர்யாவை அளவுக்கதிகமாக புகழ்ந்து தள்ளியிருக்கிறார். ''நான் கடவுளில்'' ஆர்யாவின் முறையான நடிப்பு என்பது பாலாவின் செதுக்கல் மட்டுமே. அதை உண்மையாக்கியிருக்கிறது ஆர்யாவின் இறுதியாக வந்த சர்வம்.

ஞானம் மென்மேலும் வளர வாழ்த்துக்கள்.

**சுதர்மராஜன், கண்டி.**

***

இலங்கை அரசியலமைப்பின் 13வது திருத்தம் பற்றிய ஆசிரியர் தலையங்கம் வாசித்தேன். இத்திருத்தத்தை அமுல்படுத்த விடமாட்டார்கள். அமுல்படுத்தினாலும் இனப்பிரச்சினை தீராது என்ற ஆசிரியர் கருத்து உண்மையேயாயினும் இது தொடர்பாக ஒரு சில கருத்துக்களையும் முன்வைக்க விரும்புகிறேன்.

இந்த 13வது திருத்தமானது 1987ம் ஆண்டின் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலம் உருவாக்கப்பட்டது என்பது அனைவரும் அறிந்த ஒன்று. இந்த ஒப்பந்தத்தின் மூலம்தான் இலங்கை முழுவதிலும் மாகாண சபைகள் அமைக்கப்பட்டன. இன்றுள்ள நிலையில் வடமாகாணம் தவிர்ந்த ஏனைய எல்லா மாகாணங்களிலும் (பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் இன்றி) மாகாண சபைகள் இயங்கி வருகின்றன. முன்பு அமுலில் இருந்த கிராம சபை, பட்டண சபை, நகர சபை போன்ற ஜனநாயக அமைப்புக்கள் இல்லாமல் செய்யப்பட்ட நிலையில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் செயலற்றவர்களாக்கப்பட்ட நிலையில் வட மாகாணம் ஏறக்குறைய 25 வருடங்களாக ஜனநாயகமற்ற சூனியப் பிரதேசமாகவே இருந்து வருகின்றது. உழுதுண்டு வாழ்ந்த வன்னி மக்கள் இன்று நடுத்தெருவில் நிற்கின்றனர். இவர்களின் பிரச்சினை மிகவும் அவசரமானது எனவே பேசிப் பேசியே பொழுதைக் கழிக்க நேரம் கிடையாது.

எனது கருத்து என்னவென்றால் வடக்கில் மாகாண சபையை அமைக்க அரசு விரும்பினால் அதனை மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதற்கான அங்கீகாரம் அரசியல் அமைப்பில் ஏற்கனவே இருக்கின்றது. எனவே தனிநபர்களின் அல்லது அரசியல் கட்சிகளின் இனவாதக் கூச்சலைப் பொருட்படுத்தத் தேவையில்லை. வட மாகாண சபையை அமைப்பதற்குப் புதிதாக எவரினதும் அங்கீகாரம் தேவைப்படாது. கூடிய விரைவில் அகதி மக்களை மீளக்குடியமர்த்தி தமிழ் மக்களால் ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களிடம் அரசியல் அதிகாரங்களை வழங்கி இயல்பு நிலையைத் தோற்றுவிக்க வேண்டும். அதன்பின் வட மாகாண சபையிடம் அரசியல் அதிகாரத்தை ஒப்படைத்த பின்னர் இரண்டாம் கட்டமாக வடக்கு கிழக்கு இணைப்பு தொடர்பாகவும், மேலதிக அதிகாரங்கள் தொடர்பாகவும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும். இவ்விடயத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாகச் செயற்பட முன்வரவேண்டும். சகோதரர்கள் ஒற்றுமையாக இருக்கும்வரை குடும்பம் இருக்கும். அவ்வாறன்றி ஆளையாள் காட்டிக் கொடுக்க பலமாக முனைந்தால் அந்நியர் புகுந்து விளையாடுவதை தவிர்க்கமுடியாமல் போகும்.

**கா. தவபாலன், கண்டி**

***

மட்டக்களப்பின் இன்றைய நாட்களில் 'ஞானத்தின்' வருகை பாலைவனத்தில் மழை பொழியும் உணர்வைத் தருகிறது. ஞானத்தின் முறையான வாசகன் என்ற முறையில் வேலமுதன் அவர்களின் 'மிருகம்' குறுங்கதை ஏற்படுத்திய சர்ச்சையை உன்னிப்பாகக் கவனிக்க முடிந்தது.

''O/L பாஸ் பண்ணாத'' என்று தொடங்கும் வரியும் அதுவரும் சந்தர்ப்பமும் ச. முருகானந்தனும் இன்னும் சிலரும் விமர்சித்த பாங்கில் தவறுகள் பல இருப்பதை சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை. முதலில் ஒரு கதாபாத்திரத்தின் அத்தனை வார்த்தைகளுக்கும் கதாசிரியர் பொறுப்பேற்க வேண்டுமென்று நினைப்பது சிறுபிள்ளைத்தனமானது.

அடுத்தது ஒரு கதாபாத்திரம் நல்லவராக இருந்தால் அல்லது தீயவராக மாத்திரம் (இரு அதீத நிலைகளில் (Extreme)) இருக்க வேண்டுமென்பது நினைப்பதே தவறானதாகும். எப்போதுமே நிஜ மனிதர்களோ, அவர்களை ஒட்டி படைக்கப்பட்ட காப்பியங்களோ ஒரு தனி மனிதனின் இருவகைப்பட்ட நிலைகளை தெளிவாகக் காட்டும் என்பது கண்கூடு.

உதாரணமாக, மகாபாரதத்தில் தருமன் தர்மம் தவறாதவன் (நல்ல குணம்). ஆனால், அதே தர்மன் அசுவத்தாமா என்ற யானை இறந்ததை அறிந்தும் அசுவத்தாமன் இறந்து விட்டான் என்று துரோணருக்குக் கூறி அவரை போர்க்களத்திலிருந்து அப்புறப்படுத்தியது (தீய குணம்) என்ற இருவேறுபட்ட குணாதிசயங்களைக் கொண்டிருந்ததாக கூறப்படுகிறது.

துரியோதனன் தீயவன். ஆனால், கர்ணன் எனும் தேரோட்டி மகனை அரசனாக்கி நண்பனாக ஆதரித்தது பாண்டவரிலும் மேலான நல்ல குணம்.

இப்படி நிஜ வாழ்க்கையிலும் மனிதர்கள் இரு குணங்களின் சேர்க்கையாகவே இருப்பார்கள் என்பது வெள்ளிடைமலை. முழு நல்லவனோ, முழுக் கெட்டவனோ இல்லை. ஆகவே, வேலமுதன் அவர்கள் படைத்த ''மணமகளின் தந்தை பாத்திரம்'' இயல்பானது, யதார்த்தமானது.

Dr. R. **முரளீஸ்வரன், மட்டக்களப்பு.**

***

நான் ஞானம் சஞ்சிகையின் தீவிர வாசகன். உங்கள்மீது நல்ல மதிப்பு வைத்திருக்கின்றேன்.

நீங்கள் இளைய தலைமுறையினரை கைதூக்கி விடுபவர். பல இளம் எழுத்தாளர்களை, அவர்களின் சிறுகதைகளை அறிமுகம் செய்து வைப்பவர். மகிழ்ச்சி. ஆனால், விமர்சனம் என்ற விடயத்தில் இளைய தலைமுறையினை அறிமுகம் செய்யும்போது கவனம் வேண்டும்.

விமர்சனத்துறையில் இளைய தலைமுறையினர் வளரவேண்டும். ஆனால் உண்மையான விமர்சனம் என்றால் என்னவென்பதை அவர்கள் அறிந்துகொள்ள வேண்டும். குறை காண்பது மட்டும் விமர்சனம் அன்று. நல்ல அம்சங்களை முதலில் இனங்காணப்பட வேண்டும்.

சின்னராஜா விமலன் என்பவரின் மூன்று கட்டுரைகளை ஞானம் சஞ்சிகையில் நீங்கள் பிரசுரித்துள்ளீர்கள்.

1. ஒரே தலைப்பிலமைந்த சிறுகதைகளில் ஈழத்துப் படைப்பாளிகளின் பன்முகத் தன்மை – ஒரு கண்ணோட்டம்.
2. சிறுகதைத் தொகுப்புகளின் உருவாக்கமும் முனைப்பும் பெறவேண்டிய விடயங்களும் – ஒரு பகிர்வு நிலை உசாவல்.
3. ஈழநாடு சிறுகதைகள் குறித்த விளிம்பு நிலை அவதான நோக்கும் சில கருத்து நிலை முரண்பாடுகளும்.

இவை எல்லாமே ''சிவத்தம்பி பாணியிலான தலைப்புக்கள், தலைப்புக்கள் இவ்வாறாக அமைந்தாலும் விமலன் எழுதிய கட்டுரைகளுக்கு இவை முற்றாகப் பொருந்தாது. இக்கட்டுரைகள் விமர்சனங்களும் அல்ல''

விமலனின் கட்டுரைகளின் நோக்கம், மூத்த எழுத்தாளர்களை, சஞ்சிகையாளர்களை குறை கண்டு அவர்களை வெளிச்சம் போட்டுக் காட்டுவதே.

இவர் பயன்படுத்தும் சொற்பிரயோகம் ஆரோக்கியமாக இல்லை. உதாரணம் : அவசரக்குடுக்கைத்தனம், சீத்துவக்கேடு, பத்தாம் பசலித்தனம், பல்லக்கு தூக்கும் பேர் வழிகள், கழுத்தறுக்கும் செயற்பாடுகள், கீழ்த்தரமான

''ஈழநாடு சிறுகதைகள்'' குறித்த கட்டுரையில் கட்டுரையாளரே பல இடங்களில் முன்னுக்குப்பின் முரணாக எழுதுகின்றார். செங்கை ஆழியானை ''அடிப்பது'' போலவும் தோன்றுகிறது. சிறுகதைகளைத் தொகுத்த முறையைப் பற்றிக் கிளறாமல் சிறுகதை பற்றிச் சொல்லி இருக்கலாம். தொகுப்புக்கான உரிமை செங்கை ஆழியானுக்கு சம்பந்தப்பட்டோர்களால் வழங்கப்பட்டிருக்கும்போது விமலன் ஏன் அதற்காகக் கவலைப்பட வேண்டும்?

''சிறுகதைத் தொகுப்புகளின் உருவாக்கமும் முனைப்புப் பெற வேண்டிய விடயங்களும்'' என்ற கட்டுரையிலேயே செங்கை ஆழியானுக்கு அடிப்பதற்கு வேண்டிய முஸ்தீபுகளை விமலன் போட்டிருக்கிறார்.

நீங்கள் ''ஞானம்'' ஆசிரியர், அனுபவம் வாய்ந்தவர் என்ற முறையில் விமர்சனத்துறையில் ஈடுபட விரும்பும் இளம் தலைமுறையினரை வழிப்படுத்த வேண்டிய பொறுப்பு உங்களுக்கு உள்ளது. இதனை ''அகளங்கன்'' அவர்களும் உங்களுக்கு ஒரு முறை சுட்டிக் காட்டியிருக்கின்றார். (பார்க்க ஞானம் இதழ் 103)

**ச. சிவகுமாரன், கொழும்பு - 10.**

***

சென்ற மாத (ஜூலை ஞானம் 110) ஞானம் சஞ்சிகையில் 'சமகால கலை இலக்கிய நிகழ்வுகள்' பகுதியிலே குறிஞ்சித் தென்னவனின் ''குறும் பூக்கள்'' வெளியீட்டு தகவலை முதன்மைப்படுத்தி தந்திருந்தது நன்றிகள்!

ஆயினும், அதில் எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரை அவர்களின் செல்வமகள் செல்வப்பிரியா – வசீகரன் திருமண வைபவத்திலே இந்நூல் வெளியிட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

எஸ். பொன்னுத்துரை என்றாலே ஈழத்து இலக்கிய உலகிற்கு நினைவில் வருவது திரு. எஸ். பொ. அவர்களைத் தான். (தற்போது இந்தியாவில் வசிக்கிறார்)

ஆனால், குறிஞ்சித் தென்னவனில் 'குறும்பூக்கள்' நூலை மகள் செல்வப்பிரியா வசீகரனுடன் திருமண பந்தத்தில் இணைந்த மங்கள நாள் நினைவுச் சின்னமாக வழங்கப்பட்டது எஸ்.பொ. வினால் அல்ல. மலையக இலக்கிய ஆர்வலரும், ஊடகவியலாளருமான நாவலப்பிட்டியைச் சேர்ந்த கே. பொன்னுத்துரையினாலேயே என்பதே சரியான தகவல் ஆகும்.

ஞானத்தில் சரியான தகவலைத் தரவேண்டும் என்பதற்கு இணங்கவே இதை அறியத் தந்தேன்.

**கே. பொன்னுத்துரை, தெஹிவளை.**

***

110 ஞானங்களையும் தொடர்ச்சியாக வாசித்த எனக்கு, 110வது ஞானத்தின் முன் அட்டைப் படம் தான் மிகச் சிறந்ததாக படுகிறது. கௌதமனுக்கு விஷேடமாக என் பாராட்டுகள்.

செ. சுதர்சனின் ராஜமார்த்தாண்டன் குறித்த கட்டுரை நல்லதொரு வாசிப்பு. ஈழத்துத் தமிழ்க் கவிதை குறித்து ராஜமார்த்தாண்டனின் விமர்சனங்களை தொடர்ச்சியாக வாசித்தவன் என்ற வகையில் அவரது விமர்சன ஆளுமையும், நடுநிலைமையும் பல ஈழத்து கவிஞர்களை மறு வாசிப்புக்குட்படுத்தியது. செ. சுதர்சனுக்கு நன்றி.

ஈழத்து நவீனக் கவிதை குறித்து எம்மவர் பார்க்காத, பேசாத ஒரு பக்கத்தை இலக்கிய உலகிற்கு வெளிப்படுத்திய அண்ணாச்சியை பற்றி, எம்மவர்கள் யாருமே கண்டு கொள்ளாத நிலையில் எழுதி, வாசிப்புக்குட்படுத்தியதற்கு அந்த மகத்தான கவிஞனுக்கு இதை விட சிறப்பாக அஞ்சலி இருக்க முடியாது. நன்றி என் இனி நண்பனே!

ஞானம், இன்னும் காத்திரமாய் வளர என்றும் வாழ்த்துக்கள்.

**சுதர்மமகாராஜன், கண்டி.**

***

மே மாதம் இதழில் நான் எழுதிய ''ஈழநாடு சிறுகதைகள்'' கட்டுரை தொடர்பாக ஜூலை மாத இதழில் நண்பர் தேவி பரமலிங்கம் அவர்கள் இரண்டு கருத்து முரண்பாடுகளை சுட்டிக்காட்டி இருந்தார். முதலாவது ''ஒரு ஆழமான எழுத்துக்கும் அறிமுகக் குறிப்புகளுக்கும் முடிச்சுப்போட்டு கருத்துக் கூற வருவதானது ஆய்வுநிலைக்கு உட்படுமா?'' என்பது. பொதுவாகவே ஒரு நூல் பற்றிய ஆய்வு என்பது அதன் உருவ உள்ளடக்கம் சார்ந்த ஒன்றாகவே கருதப்படுகிறது. நூலின் அட்டைப்படத்திலிருந்து பின்னட்டை குறிப்பு வரையான அனைத்தையும் உள்ளடக்கியதாகவே ஆய்வுகள் அமைவதுண்டு. அந்தவகையில் முன்னுரையிலும், அறிமுகக் குறிப்பிலும் ஏற்பட்ட முரண்பாட்டினை சுட்டிக்காட்டியதனை ஆய்வுநிலையிலிருந்து விலகியதொன்றாக என்னால் கருத முடியவில்லை.

உண்மையில் கவிஞர் செல்லையாவின் சிறுகதைகள் சாதாரணமாகவும், அவருக்கு சிறுகதைத்துறை கைவரவில்லை எனவும் செங்கைஆழியான் கருதியிருந்தால் அதை தவிர்த்துவிட்டு ஈழநாடு பத்திரிகையில் வெளியான 799 சிறுகதைகளில் வேறு ஏதாவது ஒன்றை உள்வாங்கி இருக்கலாம். அதைவிடுத்து தேர்ந்தெடுக்கப்பட்ட 53 சிறுகதைகளில் கவிஞர் செல்லையாவின் சிறுகதையை உள்ளடக்க முனைந்தமை கவிஞருக்கு சிறுகதைதுறையும் வாலாயமானதே என்பதை வெளிப்படுத்துவதாகவே உள்ளது.

இரண்டாவது ''நந்தினி சேவியர், செம்பியன் செல்வன் ஆகியோரது நல்ல வேறு சிறுகதைகள் ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்திருக்க நூலில் தொகுக்கப்பட்ட சிறு கதையை சேர்த்துக் கொண்டது விளிம்புநிலை என கூறவருகிறாரா?'' என்பது. நான் ஈழநாடு சிறுகதைகளை ஈழநாடு தொகுப்பின் வாயிலாகவே அறிந்து கொண்டவன். நண்பர் தேவி பரமலிங்கம் அவர்கள் ஈழநாடு சிறுகதைகளில் பெரும்பாலானவற்றை அவை ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமானபோதே பார்த்திருக்கும் வாய்ப்பை பெற்றுள்ளார் போல் தெரிகிறது. அதனால் தான் 'நந்தினி சேவியர். செம்பியன் செல்வன் ஆகியோரது நல்ல வேறு சிறுகதைகள் ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்திருப்பதாக' கூறுகிறார். நான் நூலுக்கு அப்பாலும் சென்று சில விடயங்களை சொல்வதை ஆட்சேபிப்பதாய் கூறும் நண்பர் அவர்களே நூலைத்தாண்டி அப்பால் செல்வதை இதன்மூலம் அறியக்கூடியதாய் உள்ளது. அத்துடன் எனது கட்டுரையை நண்பர் ஈழநாடு தொகுப்பின் வாயிலாக படித்தறிந்து அணுகாது ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்த சிறுகதைகளின் ஊடாக எதிர்வினை ஆற்றுகின்றாரோ என்ற சந்தேகத்தையும் இது தோற்றுவித்துள்ளது.

மேலும் பரிசுக்கதைகள் தரமானதாக இருக்கும் என்ற நம்பிக்கையில் ஈழநாடு பத்தாமாண்டு நிறைவு சிறுகதை போட்டியில் முதல்பரிசு பெற்ற செம்பியன் செல்வனின் 'பூவும்கனியும்' சிறுகதையை தொகுப்பில் உள்ளடக்காது முன்னுரையில் ''பெரும் பான்மையான படைப்பாளிகளின் முன்னைய சிறுகதைகள் போல் ஈழநாட்டில் வெளிவந்த சிறுகதைகள் அமையவில்லை'' என்று தொகுப்பாசிரியர் கூறும்பொழுது அது எனக்கு விசித்திரமாகவே பட்டது. அதனைத் தான் நான் குறிப்பிட்டேனே தவிர எந்த எழுத்தாளரையும் நல்ல எழுத்தாளர் என்று தராசு பிடிக்கும் கைங்கரியத்தில் ஈடுபட நான் முயலவில்லை.

அவ்வாறே நந்தினி சேவியருடைய 'வேட்டை' சிறுகதையை ஈழநாடு தொகுப்பிலேயே அறிந்து கொண்டவன் என்பதாலும் ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்திருந்த அவரின் ஏனைய இரண்டு சிறுகதைகளான 'முதலும் கடைசியும்', 'மேய்ப்பன்' கதைகளை வாசிக்க கிடைக்காததாலும் 'வேட்டை' சிறுகதையை விளிம்புநிலை கதையென என்னால் கூறமுடியாது. அது என்னுடைய நோக்கமும் அல்ல. நந்தினி சேவியர் உட்பட அனைத்து எழுத்தாளர்களின் சிறுகதைகள் தொடர்பில் நான் கூறவந்தது இதுதான். ஒரு படைப்பாளியின் ஒட்டுமொத்தப் படைப்புக்களும் நூலுருவாக்கப் படவேண்டுமென்ற ஆதங்கத்தில் எழுத்தாளர்களின் சொந்த தொகுப்பில் உள்ள சிறுகதைகளை தவிர்த்து கிடைத்தற்கரிதான அவர்களின் சிறுகதைகளை தேர்ந்தெடுப்பதே தொகுப்பின் நோக்கமாக இருக்கவேண்டும் என்பது தான். எனது கட்டுரை பற்றிய கருத்து முரண்பாடுகளை எடுத்துக்காட்டி என்மூலம் வாசகர்களுக்கு அது குறித்த தெளிவை ஏற்படுத்த வழி சமைத்த நண்பர் தேவி பரமலிங்கம் அவர்களுக்கு எனது நன்றிகள்.

**-சின்னராஜா விமலன், திருகோணமலை.**

***